௨௨ஆவது அகவையில்

ஜூன் 2021

# ஞானம்

253

கலை இலக்கியச் சஞ்சிகை

விலை : ரூபா 100/=



## சிங்கள தமிழ் எழுத்தாளர்களை இணைக்கும் பாலம்

## கமல் பெரேரா

பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம் !

# ஈழத்துச் சஞ்சிகை வரலாற்றில் மாபெரும் இலக்கியப் போட்டிகள்!



ஞானம் பிரதம ஆசிரியர் **தி. ஞானசேகரனின்**
**80**ஆவது **அகவையை** முன்னிட்டு ஞானம் சஞ்சிகை
நடத்தும் **மாபெரும் இலக்கியப் போட்டிகள்**

**பரிசுத் தொகை ரூபாய் 300,000/=**

2000ஆம் ஆண்டு முதல் 2021ஆம் ஆண்டு பெப்ரவரிவரை வெளிவந்த
சிறந்த இலக்கியப் படைப்புகளுக்கான பரிசுப் போட்டிகள் ஆறு பிரிவுகளில் நடைபெறுகின்றன.

(01) **முதற் பிரிவு** : **நாவல் - குறுநாவல் -** நாவல், குறுநாவல், குறுநாவல் தொகுப்பு.
(02) **இரண்டாம் பிரிவு** : **சிறுகதை -** குறைந்தது 9 சிறுகதைகள் உள்ளடங்கிய சிறுகதைத் தொகுப்பு.
(03) **மூன்றாம் பிரிவு** : **கவிதை -** கவிதைத் தொகுப்பு – மரபுக் கவிதை, புதுக்கவிதை, காவியம்.
(04) **நான்காம் பிரிவு** : **கட்டுரை -** பொருட்பரப்பு எதுவாகவும் இருக்கலாம்.
(05) **ஐந்தாம் பிரிவு** : **ஈழத்துப் பழந்தமிழ் ஆய்வு -** பல்கலைக்கழக மாணவர்களுக்கு உரியது.
(06) **ஆறாம் பிரிவு** : **ஈழத்துச் சிற்றிதழ்.**

### போட்டிகளுக்கான விதிமுறைகள் :

ஈழத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள் எவரும் இப்போட்டிகளில் பங்கு பற்றலாம். ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட பிரிவுப் போட்டிகளில் கலந்துகொள்ளலாம். ஆனால் ஒருபிரிவுக்கு ஒரு படைப்பை மாத்திரமே சமர்ப்பிக்க முடியும். போட்டி முடிவுத் திகதி 30–06–2021. அதன் பின்னர் வந்துசேரும் படைப்புகள் போட்டிக்குச் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது. ஞானம் ஆசிரியர் குழுமத்துடன் போட்டி தொடர்பான கடிதம், தொலைபேசித் தொடர்புகள் தவிர்க்கப்பட்டுள்ளன. ஞானம் பதிப்பகத்தில் வெளிவந்த நூல்கள் இப்போட்டிக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. அனுப்பவேண்டிய முகவரி - Editor, Gnanam, 3-B, 46th Lane, Colombo 06, Sri Lanka என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்பட வேண்டும். தபால் மேலுறையின் இடதுபக்க மூலையில் பங்குபற்றும் போட்டிப் பிரிவின் பெயர் குறிப்பிடப்படவேண்டும். நடுவர் குழுவின் முடிவே இறுதியானது.

### பிரிவு 1 – 4 மேலதிக விதிமுறைகள் :

ஆகக் குறைந்தது 80 பக்கங்கள் கொண்ட நூல்களாக இருத்தல் வேண்டும். நூலின் இரண்டு பிரதிகள் அனுப்பப்படல் வேண்டும். போட்டியாளர்கள் தமது இலக்கிய முயற்சிகள் உள்ளடங்கிய தம்மைப்பற்றிய சிறுகுறிப்பு ஒன்றினையும் அவர்கள் வெளியிட்ட நூல்களின் பட்டியலையும் வேறாக இணைத்தல் வேண்டும்.

### பிரிவு 5 மேலதிக விதிமுறைகள் :

தற்போது பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவர்கள் மட்டுமே இப்போட்டியில் கலந்து கொள்ளலாம். இப்போட்டிக்கென எழுதப்பெற்ற ஈழத்துப் பழந்தமிழ் இலக்கியம் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகள் மாத்திரமே போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படும். பட்டப்படிப்புக்கு சமர்ப்பித்த ஆய்வுகளையோ அதன் பகுதிகளையோ அனுப்பமுடியாது. ஆய்வுக்கட்டுரைகள் ஆகக் குறைந்தது A4 தாளின் 40 பக்கங்களில் தட்டச்சு செய்து 2 பிரதிகளை அனுப்புதல்வேண்டும். அனுப்பப்படும் ஆய்வு அவரால் எழுதப்பட்டது என்பதற்கான பல்கலைக்கழக துறைத்தலைவரின் உறுதிக் கடிதமும் இணைக்கப்படல் வேண்டும்.

### பிரிவு 6 மேலதிக விதிமுறைகள் :

போட்டியில் பங்குபற்றும் சிற்றிதழின் ஆசிரியர் ஈழத்தில் பிறந்தவராக இருத்தல் வேண்டும் (1) சிற்றிதழ் பற்றிய சிறுகுறிப்பு (2) இதுவரை காலமும் வெளிவந்த இதழ்களின் அட்டைப்படம், பொருளடக்கம், ஆசிரியத் தலையங்கம் ஆகியவற்றின் போட்டோ பிரதிகள் (3) வெவ்வேறு காலங்களில் வெளிவந்த 10 இதழ்களின் இரண்டு பிரதிகள் ஆகியவற்றை இணைத்தல் வேண்டும்.

**ஒவ்வொரு பிரிவுக்கும் வெவ்வேறாக பரிசுத் தொகைகளும் பரிசுச் சான்றிதழ்களும் வழங்கப்படும்.**

**முதற்பரிசு ரூபா 25,000/=** **இரண்டாம் பரிசு ரூபா 15,000/=** **மூன்றாம் பரிசு ரூபா 10,000/=**

**– ஞானம் நிர்வாக ஆசிரியர்**

ஒளி : 22
சுடர் : 01
253

# பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம்!

வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவுமாயின்,
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவிகொள்வர்.


## ஆசிரியர் குழு

ஆசிரியர், ஸ்தாபகர் : தி. ஞானசேகரன்
இணை ஆசிரியர் : ஞானம் ஞானசேகரன்
நிர்வாக ஆசிரியர் : ஞானம் பாலச்சந்திரன்

## தொடர்புகளுக்கு

**தொ.பேசி.** ☞ 0094-11-2586013
0094-77-7306506
**தொ.நகல்** ☞ 0094-11-2362862
**இணையம்** ☞ www.gnanam.info
www.gnanam.lk
தளம்.ஞானம்.இலங்கை
**மின்னஞ்சல்** ☞ editor@gnanam.info
editor@gnanam.lk
**அஞ்சல்** ☞ 3B-46th Lane, Colombo-6, Sri Lanka
**வங்கி விபரம்** ☞ T. Gnanasekara Iyer
Acc. No. - 009010344631
Hatton National Bank,
Wellawatha Branch.
Swift Code : HBLILKLX
(மணியோடர்மூலம் சந்தா அனுப்புபவர்கள் வெள்ளவத்தை தபாற் கந்தோரில் மாற்றக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்)
**சந்தா விபரம்** ☞ Sri Lanka
ஒரு வருடம் : ரூ 1,000/=
ஆறு வருடம் : ரூ 5,000/=
ஆயுள் சந்தா : ரூ 20,000/=

| | ஒரு வருடம் |
|---|---|
| Australia (AU$) | 50 |
| Europe (€) | 40 |
| India (Indian Rs.) | 1250 |
| Malaysia (RM) | 100 |
| Canada ($) | 50 |
| UK (£) | 40 |
| Singapore (Sin. $) | 50 |
| Other (US $) | 50 |


*⊙ ஞானம் சஞ்சிகையில் பிரசுரமாகும் படைப்புகளின் கருத்துகளுக்கு அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்பானவர்கள்.*
*⊙ புனைபெயரில் எழுதுபவர்கள் தமது சொந்தப் பெயர், தொலைபேசி எண், முகவரி, ஆகியவற்றை வேறாக இணைத்தல்வேண்டும்.*
*⊙ பிரசுரத்திற்குத் தேர்வாகும் படைப்புகளைச் செவ்வைப்படுத்த ஆசிரியருக்கு உரிமையுண்டு.*
*⊙ படைப்புகள் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு மின்னஞ்சலில் அனுப்பப்படவேண்டும்.*

# இதழினுள்ளே.....




⊙ **கவிதைகள்**
புலோலியூர் கு. சரவணன் 04
செ. சுதர்சன் 10
சா.சக்திதாசன் 13
தம்பிலுவில் ஜெகா 20
சுபா சங்கீர்த்தனன் 22
எஸ். பி. கிருஷ்ணன் 34
சட்டத்தரணி ரஷீத் எம். இத்தியாஸ் 42
கஸ்ஸாலி அஷ்ஷம்ஸ் 50

⊙ **சிறுகதைகள்**
சித்தி கருணானந்தராஜா 08
மொழிவரதன் 18
இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் 30

⊙ **கட்டுரைகள்**
திக்குவல்லை கமால் 03
வாகரை வாணன் 14
கலாநிதி சண்முகசர்மா ஜெயப்பிரகாஷ் 25
B. சந்திரன் ஐயர் 28
ரஞ்ஜனி சுப்பிரமணியம் 46

⊙ **உரைச்சித்திரம்**
ஞானம் பாலச்சந்திரன் 05

⊙ **நூல் விமர்சனம்**
ஓட்டமாவடி அறபாத் 52

⊙ **பத்தி**
பேராசிரியர் துரை மனோகரன் 54

⊙ **வாசகர் பேசுகிறார்** 56

# ஆசிரியர் பக்கம்

## கரிசல் இலக்கியத்தின் தந்தை – தமிழின் மூத்த படைப்பாளி கி.ராஜநாராயணன் மறைவு

கரிசல் இலக்கியத்தின் தந்தை – தமிழின் மூத்த படைப்பாளி கி. ராஜநாராயணன் தனது 99ஆவது வயதில் 18–05–2021 அன்று காலமானார் என்ற செய்தி தமிழ் இலக்கிய உலகை ஆழ்ந்த துயரத்தில் ஆழ்த்தியுள்ளது.


கி.ராஜநாராயணன் 16–09–1922இல் பிறந்தவர். இவரது பெற்றோர் கிருஷ்ண ராமானுஜன், இலட்சுமி அம்மாள். ஏழாம் வகுப்புவரை மட்டுமே படித்த இவர், பின்பு விவசாயம் செய்தவர். 40 வயதுக்குமேல் எழுதத் தொடங்கியவர்.

**மாயமான்** என்ற முதல் சிறுகதை 1958இல் சரஸ்வதி இதழில் வெளியானது. இவர், 70க்கு மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ளார். சிறுகதை, நாவல், குறுநாவல், கிராமியக் கதை, அகராதி, கடிதம் என்று தமிழின் பல்வேறு இலக்கியத் தளங்களிலும் தடம் பதித்திருக்கிறார். பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தின் சிறப்புப் பேராசிரியராகப் பணியாற்றிய பெருமைக்குரியவர் இவர்.


தமிழில் ஒரு சமூக வரலாற்று நாவலைக் கூறமுடியுமானால் அது இவர் எழுதிய **கோபல்லகிராமம்**தான். இலக்கியப் படைப்பாளிகள் யாவரும் படிக்கவேண்டிய நாவலாக இந்நாவலைச் சிபார்சு செய்யலாம். 1800களில் நடக்கும் கதை இது. ஆந்திரப் பிரதேசத்தில் மொகலாய மன்னரின் அச்சுறுத்தும் ஆட்சியில் இருந்து தப்பித்து தெற்கில் தஞ்சமடையும் ஐம்பது அறுபது பேர் கொண்ட ஒரு குழுவினரின் கதை இது. அவர்கள் நம்பிக்கையையும் உடலுழைப்பையும் கொண்டு காட்டை அகற்றி கிராமம் ஒன்றை உருவாக்குகிறார்கள். தமிழ் நாட்டில் ஒரு தெலுங்கு பேசும் கிராமம் எப்படி உருவானது? எங்கிருந்து வந்தவர்கள் அவர்கள்? எதற்காக எதிலிருந்து தப்பிப்பதற்காக? எப்படிப்பட்ட கஷ்டங்களைத் தாண்டி வந்திருக்கிறார்கள்? அவர்கள் எப்படி இந்த ஊரை அமைத்தார்கள்? என்ற பல கேள்விகளுக்கு விடையாக இந்த நாவல் அமைகிறது. நாயக்கர் ஒருவரின் வீட்டில் தொடங்கி, அவ்வீட்டில் முன்பு வாழ்ந்த மூதாதையர்களின் கதைக்குத் தாவி, அவர்களின் மூலம் ஆந்திராவிலிருந்து குடிபெயர்ந்தவர்களின் வரலாற்றை உரைத்து, நாடோடி வாழ்க்கையின் பலவித கோணங்களை அலசி, ஒரு கிராமம் உருவாகித் தழைப்பதன் சுவாரஸ்யத்தை நாவல் தருகிறது. இந்த இடப்பெயர்வின் சாட்சியாக 130 வயது மிக்க மங்கதாயரம்மாள் நாவலில் வருவது சிறப்பு. விக்டோரியா ராணியின் ஆட்சிக்குக்கீழ் கோபல்ல கிராமம் வந்ததும் ஆங்கிலேயர் வருகையால் ஏற்பட்ட அவலங்களை எதிர்த்து மக்கள் கிளர்ந்தெழும் நிலையில் கதை நிறைவடைகிறது. வழக்கத்திற்கு மாறான கதைசொல்லும் முறைமையாலும் இரசனைமிக்க பல கிளைக்கதைகளாலும் வாசகரின் ஆர்வத்தைத் தக்கவைத்துக் கொள்கிறது "கோபல்ல கிராமம்" நாவல். 176 பக்கங்களில் ஒரு 130 வருட காலத்தை கண்முன்னே நிறுத்தியிருக்கிறார் கி.ராஜநாராயணன்.

இந்த நாவலின் தொடர்ச்சியாக இவர் எழுதிய **கோபல்லபுரத்து மக்கள்** நாவலுக்காக இவருக்கு 1991இல் **சாகித்ய அகாடமி விருது** கிடைத்தது. இலக்கியச் சிந்தனை விருது, தமிழக அரசு விருது, கனடா இலக்கியத் தோட்டம் வழங்கிய தமிழ் இலக்கியச் சாதனை–2016 சிறப்பு விருது, 2016–17ஆம் ஆண்டுக்கான மனோன்மணியம் சுந்தரனார் விருது உட்பட பல விருதுகளை இவர் பெற்றவர்.

தமிழக முதல்வர் மு.க ஸ்டாலின் இவரது மறைவு குறித்த இரங்கல் உரையில், "கரிசல்குயில் கி.ரா அவர்களின் மறைவால் தமிழ்த்தாய் தன் அடையாளங்களுள் ஒன்றை இழந்து தேம்புகிறாள். கரிசல் இலக்கியமும் இந்த மண்ணும் தமிழும் உள்ளவரை அவரது புகழ் வாழும், அரசு மரியாதையுடன் இறுதிச் சடங்கு நடைபெறும்" எனக் குறிப்பிட்டார். அத்தோடு கி. ராஜநாராயணுக்கு கோவில்பட்டியில் சிலை நிறுவப்படும் என்றும் முதலமைச்சர் கூறியுள்ளார். ஏற்கனவே கி.ரா.வின் இலக்கியப் பணிக்கு மரியாதை செலுத்தும் வகையில் புதுச்சேரி லாஸ்பேட்டையில் அவருக்கு வீடு ஒன்றை தமிழக அரசு அளித்திருந்தது. அவ்வீட்டில் கி.ரா. வாழ்ந்துவந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# சிங்கள தமிழ் எழுத்தாளர்களை இணைக்கும் பாலம் கமல் பெரேரா



## அட்டைப்பட அதிதி

'ராவய' சுடச்சுட அரசியல் விமர்சனங்களைத் தாங்கிவரும் ஒரு வாராந்த சிங்கள மாற்றுப் பத்திரிகை. விக்டர் ஐவன் அதில் நீண்ட காலமாக ஆசிரியராகக் கடமையாற்றினார் என்பது யாவரும் அறிந்ததே.

சுமார் மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் என்று ஞாபகம், அதில் வெளிவந்த பத்தி எழுத்து என்னை வெகுவாகக் கவர்ந்தது. சிங்களப் பத்திரிகைகளில் பத்தி எழுத்துக்கு தனியானதொரு மரியாதை உண்டு. சமகால விவகாரங்கள் அதில் அலசப்படும்.

அரச இலக்கிய நூல் விருதளிப்பின்போது பத்தி எழுத்துத் தொகுப்புகளுக்கு என்று ஒரு பரிசு ஒதுக்கப் பட்டுள்ளது. அதில் கடும் போட்டி நிலவும்.

'ராவய' மூலம் பத்தி எழுத்தாளரா எனக்கு அறிமுகமான கமல் பெரேரா, அதன் ஆரம்பகால ஆசிரியர் குழுவிலும் கடமை யாற்றியுள்ளார். அவரது பத்தி எழுத்துக்கள் இரண்டு தொகுப்புக்களாக வெளிவந்துள்ளன. அவர் ஒரு புனைகதை எழுத்தாளரும்கூட என்பதைத் தெரிந்து கொள்ள சிலகாலம் எடுத்தது.

பிறப்புமுதல் (1950) இன்றுவரை களனி யிலேயே வாழ்ந்துவந்த போதும், அவரது பெற்றார் கண்டிப் பகுதியைச் சேர்ந்த வர்களாவர்.

வத்தளை புனித அந்தோனியார் கல்லூ ரியிலேயே இவர் கல்வி கற்றார். அதன் பழைய மாணவர் என்று பெருமையோடு சொல்வார்.

1978 முதல் முப்பது வருடங்களாக மக்கள் வங்கியில் கடமையாற்றிய காலப்பகுதியில் 'பெங்குவய் ஒபய்' (வங்கியும் நீங்களும்) என்ற சஞ்சிகையின் தொகுப்பாசிரியராக இயங்கியுள்ளார்.

இளம் படைப்பாளியாக பத்திரிகைகளில் எழுதிய கமல் பெரேரா, அந்நாட்களில் பத்துக்கு மேற்பட்ட சிறுகதைப் போட்டிகளில் பரிசுபெற்று கவன ஈர்ப்புக்குள்ளானார். இவரது முதலாவது சிறுகதைத் தொகுப்பு 1985இல் வெளிவந்துள்ளது.

தனக்கு மிகவும் விருப்பமும் ஈடுபாட்டுக்கு உரியதுமென்று சிறுகதையைச் சொன்னாலும் நாவல்கள் பலதும் எழுதியுள்ளார்.

எழுபதுகளின் இளைஞர் கிளர்ச்சியையும், அக்கால அரசியல் யதார்த்தத்தையும், தாழ் மலையக மக்கள் பிரச்சினைகளையும் பின்புலமாகக் கொண்ட மூன்று நாவல்கள் எழுதியுள்ளார். இவை தனித்தனி நாவல் களாகவும், தொடராக வாசிக்கும்போது மூன்று பாகங்கள் போலவும் அமைந்துள்ளன. அவர் இம்முயற்சியில் வெற்றி பெற்றுள்ளார் என்பதை அதற்குக் கிட்டிய வரவேற்பு உறுதிப் படுத்தியுள்ளது.

என்ரன் செகோவ், பியதோர் தாஸ்தாவ்ஸ்கி போன்றோரின் ஆக்கங்கள் பற்றி இவர் எழுதிய நூல்கள் பல பதிப்புக்களைக் கண்டுள்ளன. மொழிபெயர்ப்புத் துறையையும் இவர் விட்டு விடவில்லை.

சீன-ரஷ்ய விழுமியக் கதைகளையும் மொழிபெயர்த்துள்ளார். இவ்வாறாக முப்ப துக்கு மேற்பட்ட நூல்களைக் கொண்டு வந்துள்ளார். அவை அரச விருது உள்ளிட்ட பல பரிசுகளையும் பாராட்டுக்களையும் பெற்றுள்ளன.



**– திக்குவல்லை கமால்**

இவரது நூல்கள் பல ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன. 'திறந்த கதவு' சிறுகதைத் தொகுப்பு, பொன் தாமரைக் குளம் - அசையாத மலைத் தொடர் - உச்சிமலைச் சுவடுகள்- ஆகிய நாவல்கள் என்பன தமிழாக்கம் செய்யப்பட்டுள்ள கமல் பெரேராவின் புனைவுகளாகும்.

இவரது பெற்றோர் நெடுங்காலம் வாழ்ந்த கண்டிப் பகுதி மொரன்கல கிராமத்துச் சிறார்கள், அங்குள்ள பராக்கிரம வித்தியாலயமென்ற சிறிய பள்ளிக்கூடத்திலேயே கல்வி கற்று வந்துள்ளனர். ஆனால் அங்கு நூலக வசதி இருக்கவில்லை. அதற்குப் பங்களிப்பு செய்யக்கூடிய ஒரு சந்தர்ப்பம் அவருக்கு கிட்டியுள்ளது.

நூலகம் திறக்கப்படும் தினத்திலேயே வெளியிடுவதற்கென்றே 'ராஜினி எவித் கியாய' (ராஜினி வந்து சென்றாள்) என்ற சிறு கதைத் தொகுப்பை எழுதியுள்ளார்.

அந்தப் பங்களிப்பின் நினைவலைகளை இலக்கிய வாழ்வில் என்றும் மறக்க முடியாதென அவர் தெரிவிக்கிறார்.

இலக்கியப் பிரச்சினைகளை அச்சமின்றி எடுத்துப் பேசி உரிய இடத்திற்கு இட்டுச் செல்வது இவரது பிறவிக் குணம். இப்படியான நடவடிக்கைகளால் இலக்கியத் தரப்பு நன்மை அடைய வேண்டுமென்பதே இவரது இலக்கு.

2010 காலப்பகுதியில் இனமத பேதமின்றி எழுத்தாளர்கள் இணைந்து செயற்பட வேண்டும் என்ற குரல் பெரும்பான்மைத் தரப்பிலிருந்து எழுந்தது. அந்தக் குரலுக்குரியவர்களில் ஒருவர் இவர். மெல்ல மெல்ல இது கலந்துரையாடல்களாகத் தொடர்ந்து சிங்கள -தமிழ் எழுத்தாளர் சங்கம் உருவாகியது. அதன் செயலாளராக ஏகமனதாக அவர் தெரிவு செய்யப்பட்டார்.

ஒரு தசாப்த காலம் வெகு சுறுசுறுப்பாக அது இயங்கியது. கண்காட்சி- வெளியீடு- கருத்தரங்கு - கௌரவிப்பு - இப்படி பல நிகழ்ச்சிகள் தொடராக நிகழ்ந்தன.

அரசாங்கத்திடம் இதற்கான ஆதரவு கோரி பலகட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இருந்தும் எதிர்பார்த்த தரப்பினருக்கு தேசிய ஐக்கியம் என்பது தேவையில்லாத ஒன்று என்பது வெளிப்படையாகியது. இலங்கை எழுத்தாளர் சங்கத்திற்கூடாகவும் இம்முயற்சியைத் தொடர்ந்தார்.

ஆனால் தனியார்துறை திருப்தி தரக்கூடிய அளவுக்கு இந்த முயற்சிக்கு கைகொடுத்தது. இதற்கு கொடகே நிறுவனம் மிகச்சிறந்த ஆதர்சம். சிங்களம் போலவே தமிழ் இலக்கியத் தரப்பினரும் இன்று நன்மை அடைகிறார்களென்றால், அதற்கு சிங்கள தமிழ் எழுத்தாளர் சங்கத்தினதும் அதனை வழி நடாத்திய கமல் பெரேராவினதும் பங்களிப்பை எவரும் குறைத்துரைக்க முடியாது.

லேக்ஹவுஸ் 'சிலுமின' பத்திரிகையில் அண்மைக் காலம்வரை 'பாலம' (பாலம்) என்ற பொதுத்தலைப்பில் கணிசமான தமிழ் எழுத்தாளர்களை அறிமுகப் படுத்திவந்தார். அதைத் தொகுப்பாக்கும் முயற்சி வெற்றி பெறும் பட்சத்தில் அது நல்லதொரு அடைவாக அமையும்.

கமல் பெரேராவின் எழுத்து முயற்சிகளும் இலக்கியச் செயற்பாடுகளும், தொடரவேண்டும் வெற்றிபெற வேண்டும் என்பதே எமது அவா.

❍ ❍ ❍




பூர்விக மக்களின் பூசிக்கும் கோயிலை
தார்மீகம் இன்றி தமதாக்கி – போர்தொடுத்து
மண்பறித்து ஏதிலி மந்தைகளாய் ஆக்கியோர்
கண்ணிலே சீனத்துக் காசு.

ஆளும் உரிமை அருந்தமிழர் வேண்டியே
நாளும் நடக்கின்றார் நாட்டிலே – நீளும்
மதில்நாட்டு மக்களுக்கு மண்கொடுக்கும் நீதி
பதில்வழங்கும் நாளை பார்.

**– புலோலியூர் கு.சரவணன்**




**பேர்த்தி :** தாத்தா... Youtubeஇல் எந்த நேரமும் என்ன பார்த்துக்கொண்டிருக்கீங்க...?

**சிவராமன் :** எங்களுடைய எதிர்கால உலகத்தை... (சிவராமன் பேர்த்தியை தனது மடியிலே அமர்த்திக்கொண்டார்)

**பேர்த்தி :** நீங்கள் சொல்வது ஒன்றுமே புரியவில்லை தாத்தா... எங்கட அப்பா இந்த இடத்தில புதிய வீடு ஒன்று வாங்கப் போறாரா? ஒரு கட்டடங்களையும் காணவில்லையே... (Youtubeஇல் செல்லும் காணொளியை பார்த்தவாறு பேர்த்தி கேட்டாள். சிவராமன் மெதுவாகச் சிரித்தார். பதில் கூறவில்லை)

**பேர்த்தி :** சொல்லுங்களேன்... தாத்தா... நீங்கள் சொல்லாவிட்டால், நீங்க நிறையநேரம் Youtube பார்க்கிறதை பாட்டியிடம் சொல்லுவேன்...!

**சி.ரா. :** இது செவ்வாய் கிரகம் அம்மா... சீனாக்காரன் தன்னுடைய robot (ரொபோட்) காரை, இந்த மாதம் (மே - 2021) செவ்வாயில இறக்கிவிட்டான்.

**பேரன் :** என்ன சீனாவும் செவ்வாயில ரொபோட்டை இறக்கி விட்டாங்களா?!

(அதுவரை மௌனமாக இருந்த பேரன் உரை யாடலில் கலந்துகொண்டான்)

**சி.ரா.:** ஆமாம், சென்ற மாதம் அமெரிக்க - நாஸாவின்ட ஹெலிகொப்டர் செவ்வாயில வெற்றிகரமாகப் பறந்தது. அது மிகப் பெரிய வரலாற்றுச் சாதனை, ரைட் சகோதரர்கள் பிளேனைக் கண்டுபிடித்தது போன்ற சாதனை. இந்த மாதம், இப்போது சீனாவும் தன்னுடைய ரொபோட் காரை செவ்வாயில் இறக்கியிருக்கிறது.

**பேரன் :** ஏன் எல்லா நாடுகளும் செவ்வாய் கிர கத்தை நோக்கி இப்போ போறாங்க தாத்தா?

**சி.ரா.:** எங்கட பூமி மிக அற்புதமான படைப்பு. இந்த சூரிய மண்டலத்திலே இந்த பூமியில மட்டும்தான் மனிதன் இயற்கையாக வாழ முடியும். ஆனால், போகிற போக்கில இந்த பூமி, மனிதனுக்கு போதாது.. அதனாலே அவன் இன்னொரு கிரகத்தைத் தேடுறான். செவ்வாய் கிரகம்தான் அருகிலே இருக்கு.... சாத்தியமாக இருக்கு....

**பேர்த்தி :** ஏன் தாத்தா... பூமியிலதான் நிறைய இடம் இருக்கே... ஏன் மனிதனுக்கு பூமி போதாதா..? (சிவராமன் தன் மடியில் இருந்தவண்ணம் காலாட்டிக் கொண்டிருந்த பேர்த்தியை அணைத்துக் கொண்டார்)

**சி.ரா. :** உண்மைதான் அம்மா.... அதனாலேதான் மகாத்மா காந்தி ஒருமுறை சொன்னார் "அனைத்து மனிதர்களின் **தேவைகளை**யும் திருப்திகரமாக பூமியினால் பூர்த்திசெய்ய **முடியும்**... ஆனால் மனிதர்களின் **பேராசைகளை** பூமியினால் பூர்த்திசெய்ய **முடியாது**..." பேராசை பிடித்த மனிதன் பூமியை கொஞ்சம் கொஞ்ச மாக வீணாக்கிக்கொண்டு வருகிறான்.

**பேரன் :** அப்ப, Stephen Hawking சொன்ன மாதிரி, இன்னும் 100 வருடங்களுக்குள் மனிதர்கள் செவ்வாய் கிரகத்திலே வாழத் தொடங்கி விடுவார்களா...?

**சி.ரா.:** அவர் சொன்னது நடக்கும் போலதான் இருக்கு... Elon Musk என்பவர், தான்



**Elon Musk**



**செவ்வாயில் 18–02–2021 அன்று தரையிறங்கிய Perseverance Rover Robot மற்றும் செவ்வாயில் 19–04–2021 அன்று தனது முதலாவது பறத்தலைச் செய்த Ingenuity ஹெலிக்கொப்டர்**

செவ்வாய்க் கிரகத்திலே இறக்க விரும்பு வதாகக் கூறி, அதற்கு தேவையான அனைத்து விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளையும் செய்து வருகின்றார்.

**பேர்த்தி :** யாரு தாத்தா அந்த Elon Musk?

**பேரன் :** இப்ப வாழ்ந்து கொண்டிருக்கிற மிகப் பெரிய கண்டுபிடிப்பாளர்... விண்வெளி ரொக்கட் செய்கிற SpaceX, தானா ஓடுற கார்களைச் செய்கிற Tesla, செயற்கை மூளை பற்றி ஆய்வு செய்கின்ற Neuralink மற்றும் இன்னும் நிறைய கொம்பனிகளைத் தொடங்கியவர்... அந்த கொம்பனிகளின் தலைவர்...

**சி.ரா.:** அதாவது உலகத்தின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கக்கூடிய மிக முக்கிய மனிதர் களில் ஒருவர்தான் Elon Musk. மிகப் பெரிய சிந்தனையாளர் மட்டுமல்ல, செயல் வீரரும்கூட. நாஸாவும் Elon Muskகும் இணைந்து விண்வெளி ஆராய்ச்சிகளை செய்துவருகின்றனர்.

**பாட்டி:** காலமையில இருந்து உந்த கொம்யூட் டருக்கு முன்னால நீங்களும் இருந்துகொண்டு பிள்ளைகளையும் கெடுக்கிறீங்க... எல்லாரும் சாப்பிட வாங்க...

**பேர்த்தி :** தாத்தா... செவ்வாயில என்ன சாப்பாடு இருக்கும்? சோறு இருக்குமா? மாம்பழம் இருக்குமா? பனம் பழம் கிடைக்குமா....

(பேர்த்தியின் கேள்விகளைக் கேட்டு சிவராமன் சிந்தனைவயப்பட்டார்)

**பேர்த்தி :** சொல்லுங்க தாத்தா... நாங்க வளர்க் கிற கிளியை செவ்வாய்க்கு கொண்டு போக முடியுமா?

**சி.ரா.:** செவ்வாயில குடிக்க தண்ணீர்கூட இல்லை. மழை பெய்யாது... மரங்கள் வளராது. எல்லாவற்றையும் 'கிறீன் ஹவுஸ்' போன்று மனிதன் செயற்கையாகத்தான் செய்ய வேண்டும்.. நானூறு - ஐந்நூறு வருடங்களுக்குப் பின்னர் ஒருவேளை இப் போது பூமியில வாழுகிற மாதிரி செவ்வா யில வாழலாம்... இப்போது சொல்லத் தெரியவில்லை..

**பேரன் :** எல்லா நாடுகளும் இப்போது மிகுந்த ஆர்வமாக செவ்வாயை ஆராய்ச்சி செய் கின்றார்கள்.... தங்களை ஆயத்தப்படுத்து கின்றார்கள்... முதலாவது மனிதன் செவ்வாயில 2030ஆம் ஆண்டுக்கு முன்னர் இறங்குவான் என்று சொல்லுகின்றார்கள்..

**பேர்த்தி :** அப்ப, இன்னமும் மனிதன் செவ்வா யில இறங்கவில்லையா...? (பேர்த்தியின் உதடுகள் ஏமாற்றத்தால் பிதுங்கின)

**சி.ரா.:** இல்லை அம்மா... 1969ஆம் ஆண்டு சந்திரனிலேதான் மனிதன் முதலிலே இறங்கி யுள்ளான். சந்திரன் ஒரு கிரகம் இல்லை... சந்திரன் ஒரு துணைக்கோள்... மற்றது சந்திர னுக்கு போறதுக்கு மூன்று நாட்கள் எடுக்கும்... ஆனால் செவ்வாய்க்கு போறதுக்கு 7-8 மாதங்கள் தேவை... 330 மில்லியன் கிலோ மீற்றர் தூரத்தில இருக்கு..

ஆனால், கட்டாயம் மனிதன் செவ்வாயில இறங்கி வாழத்தான் போறான்... பூமி மனி தனுக்குப் போதாது...

**பேர்த்தி :** என்ன செவ்வாய்க்கு போறதுக்கு 7-8 மாதங்கள் எடுக்குமா?!

**சி.ரா. :** ஆமாம். சந்திரனில விண்வெளி தரிப்பிடம் ஒன்றைச் செய்யப் போறாங்க... பூமியில இருந்து ரொக்கட் கிளம்பி சந்திரனில தரித்து, பின்னர் அங்கு ரொக்கட்டுக்குத் தேவையான எரிபொருளை நிரப்பிக்கொண்டு செவ்வாய்க்குப் போவாங்க...

**செவ்வாயில் 14–05–2021 அன்று தரையிறங்கிய சீனாவின் Tianwen-1 Robot**



**பேரன் :** தாத்தா... சந்திரனில எரிபொருள் இருக்காதே...

***சி.ரா. :*** வெரிகுட் கேள்வி... செவ்வாயில தற்போது இறக்கியிருக்கிற நாஸாவிண்ட ரொபோட் மூலம் முதல் தடவையாக சென்ற மாதம் (ஏப்ரல் - 2021) காபனீரொட்சைட்டில இருந்து ஒட்சிசனை வெற்றிகரமாக உருவாக்கி விட்டார்கள். இது மிகப்பெரிய வெற்றி... மனிதன் உயிர்வாழ ஒட்சிசன் தேவை. ஒட்சிசனை எரிபொருளாகவும் பயன்படுத்தலாம். எதிர்காலத்தில ஒட்சிசனை பூமியிலிருந்து கொண்டுசெல்லத் தேவையில்லை.

இதே மாதிரி தண்ணீரையும் அங்கு உருவாக்குவதற்கு ஆய்வு செய்கின்றார்கள்...

**பேரன் :** ஏன் தாத்தா இவ்வளவு கஷ்டப் படனும்? எங்கட சூரியனைப் போன்று கோடான கோடி நட்சத்திரங்கள் இந்தப் பால்வீதியில இருக்கின்றனதானே.. அதில பூமி மாதிரி இருக்கிற ஒரு கிரகத்தில போய் வாழலாம்தானே.. ஒட்சிசன், தண்ணீர் எல்லாம் சிரமப்பட்டு உருவாக்கத் தேவை இல்லையே..

***சி.ரா.:*** உண்மைதான்.. பூமி மாதிரி இருக்கிற 30-40 கிரகங்களை விஞ்ஞானிகள் அடையாளம் கண்டு உள்ளார்கள். ஆனால் அந்தக் கிரகங்களுக்கு போவது அவ்வளவு எளிதான காரியம் இல்லை. அருகிலுள்ள பூமி போன்ற கிரகத்துக்கு போகவே 200-300 வருடங்களுக்கு மேலே எடுக்கும்.

1977ஆம் ஆண்டு நாஸா அனுப்பிய வொயேஜர் - 1, 2 ஆகிய விண்கலங்கள் ஏறத்தாழ 35-40 வருடங்களுக்கு பின்னர்தான் சூரிய மண்டலத்தைத் தாண்டி வெளியே செல்லத் தொடங்கியது...

இதை எல்லாம் ஆராய்ந்தபின்னர்தான் செவ்வாய்க் கிரகத்திலே குடியேறத் தீர்மானித்து



***நாஸாவினால் 1977 இல் அனுப்பப்பட்ட***
***Voyager 1.***
***தற்பொழுது சூரிய மண்டலத்தைத் தாண்டி வெளியே சென்றுள்ளது***

அதற்கான முயற்சிகளை மனிதன் இப்போது எடுத்து வருகின்றான்.

(ஒருவேளை சோவியட் யூனியன் உடையாமல் இருந்திருந்தால் இந்த விண்வெளி ஆய்வுகள் பலமடங்கு வேகமாக நடந்து இருக்குமோ என்னவோ... சிவராமன் மனதுக்குள் நினைத்துக் கொண்டார்.)

***பேர்த்தி :*** தாத்தா... செவ்வாயில கோயில் இருக்குமா? செவ்வாயில...... கடவுள்....

**பாட்டி :** எல்லாரும் சாப்பிட வாங்க.......

(பாட்டியின் அழைப்பு பேர்த்தியின் கேள்வியை இடையிலே வெட்டியது)

***சி.ரா.:*** இந்த வருடம் (2021) அமெரிக்காவும், சீனாவும் செவ்வாய்க் கிரகத்திலே செய்யத் தொடங்கியிருக்கின்ற ஆய்வு, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. எதிர்கால உலகத்தையே புரட்டிப் போடப்போகிறது. அடுத்த மிலேனிய மனிதனைச் (கி.பி.3000) செதுக்கப்போகின்ற தொடக்கங்களாக இந்த ஆய்வுகள் அமையப் போகின்றன. இன்னும் சில நூற்றாண்டுகளிலே மனிதன், இந்த சூரிய மண்டல கிரகங்களுக்கிடையிலே பயணங்களை மேற்கொள்ளுபவனாக மாறப் போகின்றான் (Interplanetary Species).

மனிதனின் விழுமியங்கள் மாறப்போகின்றன... கட்டமைப்புகள் மாறப்போகின்றன... இலக்கியங்கள் மாறப்போகின்றன... ஏன் மனிதமே மாறப் போகின்றது...

**பாட்டி :** எல்லாரும் இப்ப சாப்பிட வரப் போறீங்களா இல்லையா....

அனைவரும் உணவருந்தச் சென்றனர்...

அப்போது....

நாஸாவின் ரொபோட் காரும் சீனாவின் ரொபோட் காரும் செவ்வாயில் ஊர்ந்துகொண்டிருந்தன..

நாஸாவின் ஹெலிகொப்டர் செவ்வாயிலே பறந்து கொண்டிருந்தது...

நாஸா அனுப்பிய வொயேஜர் 1, 2 (voyager) ஆகியன சூரிய மண்டலத்தையும் தாண்டி ஆழமான பிரபஞ்சத்துக்குள் சென்றுகொண்டிருந்தன...

அடுத்த மிலேனியத்துக்கு மனிதன் தயாராகிக் கொண்டிருந்தான்...

❍ ❍ ❍

**(குறிப்பு : ஞானம் 205 இதழிலே வெளியான 'கோள் பெயர்வு' எனும் குறுங்கதையையும் வாசிக்க)**

**சித்தி கருணானந்தராஜா**





# நெஞ்சில் பதிந்த நிலை...

**சிறுகதை**

*Thu,*
*10 Sept.*
*at 16:41*

டியர் கண்ணன்... உங்கள் மெயில் கிடைத்தது.... நான் தடுமாறிப்போய் நிற்கிறேன்... எனக்கு என்னசெய்வதென்று தெரியவில்லை... நீங்கள் எப்போது வருவீர்கள் ....வீட்டில் ஏதோ கசமுசாவென்று அம்மாவும் அப்பாவும் பேசுகிறார்கள்.... எனக்குக் கலியாணம் பேசுகிறார்கள் போலத்தெரிகிறது. என்னிடம் இதுபற்றி யாரும் இதுவரை பேசவில்லை... கடைசியாகத்தான் என்னிடம் வருவார்கள் என்று நினைக்கிறேன்... அதற்கிடையில் நான் என்ன ஏது என்று சரியாகத் தெரியாமல் குறுக்கே விழுந்து எதையாவது கேட்டால் வெட்கமாகப்போய்விடும்... தாங்கள் அதுபற்றிப் பேசவேயில்லையென்றால் நான்தான் கடைசியில் வெட்கப்பட்டுக் கூசிக்குறுக வேண்டியிருக்கும்... எதற்கும் உங்களிடம் தெரிவித்துவைக்கிறேன். அப்படி ஏதாவது நடக்கப் பார்த்தால நீங்கள்தான் என்னைவந்து காப்பாற்ற வேண்டியிருக்கும்...

நமக்கிடையில் ஏற்பட்ட தொடர்புபற்றி இங்கு வீட்டில் யாருக்கும் தெரியாது... வீட்டில் யாரும் விழித்துக்கொள்ளு முன்பே விடிகாலையில் நீங்கள் கேற்றடிக்கு வந்து என்னிடம் உங்கள் விருப்பத்தைக் கூறிவிட்டுப்போய் விட்டீர்கள்... நான் உங்களிடம் இசைவான ஒரு பதிலையும் கூறவில்லை... ஆனால் எனக்கு இதில் சம்மதமில்லையென்றும் கூறவில்லை... உங்கள் முகத்தைப் பார்த்தபோது உங்கள்மீது இரக்கமாக இருந்தது. ஆனால் திடுதிப்பென்று வந்து நான் சற்றும் எதிர்பார்க்காத நிலையில் அப்படிச் சொல்லிவிட்டீர்கள்... நான் தடுமாறிப் போய் உங்கள் அப்பா அம்மா மூலம் வீட்டில்வந்து கேட்கச்சொன்னேன். ஆனால் நீங்கள் அப்படி எதையும் செய்யவில்லை... வீட்டில் கேட்டால் விரும்பமாட்டார்கள் என்ற பயமா... சரி பரவாயில்லை... இப்போது என்ன செய்யப் போகிறீர்கள்.. தற்செயலாக எனக்கு வீட்டில் கலியாணம் நிச்சயம் செய்துவிட்டார்களென்றால்.... எனது நிலையென்ன... உங்கள் திட்டமென்ன....

அன்று.... உன்னைக் கண்கலங்காது காப்பாற்றுவேன்... என்றெல்லாம் சினிமா வசனம் பேசினீர்கள்... இப்போது நான் கண்கலங்கிப்போய்த்தான் செய்வதறியாது திகைத்து நிற்கிறேன்... நீங்கள் இப்போதைக்கு வருவீர்களா மாட்டீர்களா என்று உறுதியாகத் தெரியாததால் ஒரே தவிப்பாய் இருக்கிறது. எனக்கு ஒழுங்கான நித்திரைகூட இல்லை.... என் வாழ்க்கையில் எனக்கு என்ன நடக்கப்போகிறதோ என்பதைக் கற்பனை செய்து பார்க்கவும் முடியவில்லை. எப்படி ஒருவரிடம் மனத்தைக் கொடுத்துவிட்டு இன்னொருவருக்குக் கழுத்தை நீட்டுவது... ஆண்களுக்கு இது வெல்லாம் சர்வசாதாரணமாயிருக்கலாம்... நான் ஒரு பாபமு மறியாதவள்... நான் யாரையும் இதற்குமுன் என்மனதில் இருத்திக் கொண்டவளில்லை. யாரும் உங்களைப்போல என்னிடம் அப்படி விருப்பம் கேட்டதுமில்லை... எடுத்த எடுப்பில் நீங்கள்வந்து நான் யாரையாவது விரும்புகிறேனா என்று கேட்டபோது... இல்லையென்றேன்... அப்படியிருந்தாற்தானே... நான் ஏன் எதற்கு என்று பதில்கேள்வி கேட்டிருக்கலாம்.... ஆனால் எனக்கு ஏனோ அப்படிக்கேட்க மனம்

வரவில்லை... அப்பாவியாயிருந்தீர்கள்.... பார்க்க இரக்கமாக இருந்தது..... எதிர்த்துப் பேசித் துரத்திவிடுமளவுக்கு உங்கள்முகம் இருக்கவில்லை. பாவம் போன்றிருந்தது. இதற்குப்பேர்தான் காதலென்பதோ தெரிய வில்லை... இப்போது உங்கள் நினைவுகளை நெஞ்சிற் பதித்துவிட்டுத் தவித்துப் போய் நிற்கிறேன்.

வீட்டில் நான் சரியாக இளைத்து மெலிந்து களைத்துப் போய்விட்டேனாம் என்கிறார்கள்.... அம்மாவுக்குத்தான் இதில் அதிகம் விடுப்பு.... சந்தேகம். எப்படி யாவது கண்டுபிடித்துவிடுவாவோ என்று பயமாக இருக்கிறது... அவவிடம் கதை விட்டுக் கதை எடுக்கும் திறமையுண்டு.... நல்ல வேளையாக அவவுக்கு எனது ரெலி போனையெல்லாம் ஆராய்ந்து பார்க்கத் தெரியாது. அந்தச் சிறியபோனில் அவவால் எதையும் கண்டுபிடிக்கமுடியாது. அதனால் தப்பிக்கிறேன். இன்னும் எத்தனை நாளைக்கு.... வீட்டிற்குவந்து யாராவது சம்பந்தம் பேசினால் என்னசெய்வது.... எல்லாவற்றையும் சொல்லத்தானே வேண்டும்.. அப்போது குட்டுகள் வெளிப்படத்தானே செய்யும்... எல்லோரும் திகைத்துத்தான் போவார்கள்... பூனைபோலிருந்தாளே. அவள் இப்படியா.. என்று நினைப்பார்கள். இதையெல்லாம் நினைக்க ஒரே தலை சுற்றுகிறது... மனம்நிறைந்த குற்ற உணர்வோடு எப்படி நடமாடுவது... என்னை எப்படிப்பட்ட சங்கடத்துக்குள் மாட்டிவிட்டீர்கள் தெரியுமா... உங்களுக்கென்ன ஒருசிறிது கவலையுமில்லாமல் அங்கு இருக்கிறீர்கள்.

தயவுசெய்து நானுங்களைக் குற்றவாளி யாக்கி மனமாறுகிறேனென்று எண்ணாதீர்கள்... என்னை மனதாரவிரும்பி என்னிடம்வந்து உங்கள் அன்பைத் தெரிவித்ததைவிட நீங்கள் வேறு ஒரு குற்றமும் செய்யவில்லை... ஆனால் நீங்கள் என்னையணுகிய காலம்தான் பொருத்தமில்லாமற் போய்விட்டது.. அது நமது துரதிஸ்டம்...

இந்தப் பாழாய்ப்போன கொரோனா எப்போதுதான் முடிவுக்குவந்து உலகம் பழைய நிலைக்கு வரப்போகிறதோ தெரியவில்லை. எப்போது பிளேனெல்லாம் ஓடும்... நீங்களும் இங்குவந்து சேருவீர்கள். போகிற போக்கைப்பார்த்தால் இந்தத் தொல்லை இப்போதைக்கு முடியும்போலத் தெரியவில்லை. அங்கிருந்து புறப்பட அனுமதிக்கிறார்களா.... டிக்கட் கிடைக்குமா... தயவுசெய்து அறியத்தாருங்கள்... எனக்குக் கொஞ்சம் மனத்தைரியமாக இருக்கும்... இல்லாவிட்டால் நானிங்கு ஏங்கியே செத்துப் போவேன்.... எத்தனை நாளைக்கு இந்த நிச்சயமற்ற வாழ்வை வாழ்வது... உங்களை அவசரப்படுத்தி இங்கு வரவழைக்கவும் பயமாயிருக்கிறது... ஏனென்றால் இங்கும் கொரானா... ஒவ்வொரு நாளும் புதிதாகத் தொற்றிய கணக்கும் இறந்தவர்களின் கணக்கும் சொல்லிக்கொண்டேயிருக்கிறார்கள். அங்கே பாதுகாப்பாக இருக்கும் உங்களை அவசரப்படுத்தி வரவழைத்து இங்கு வந்ததும் உங்களுக்கும் தொற்றிவிட்டால் என்னகதி... சட்டிக்குள் இருந்து அடுப்புக்குள் விழுந்த கதையாகப் போய்விடும்... எயார்ப்போட் திறந்து விட்டார்களென்றாலும் சரியாக எல்லாம் நல்ல நிலைக்கு வரும்வரைக்கும் வெளிக்கிட்டுவிடாதீர்கள்... நான் எப்படியாவது இங்கு சமாளித்து அவர்களிடம் நமது விடயத்தைச் சொல்லி ஒரு சம்பந்தமும் செய்யவிடாமல் தடுத்து நிறுத்திவிடுவேன். ஆனால் உங்களிடமிருந்து உறுதியான பதில் வரவேண்டும். அதுவரை காத்திருக்கிறேன்.

இப்படிக்கு உங்கள்

ராதா

* * *

*Thu,17Sept. at 16:00*

டியர் ராதா

மெயில் கிடைத்தது... என்னால் உடனடியாக வோர் நல்ல பதிலைத் தரமுடியாமலிருக்கிறது. இங்கு சிறிது சிறிதாகத்தான் விடயங்கள் சீரடைந்து வருகின்றன. எப்போது எயார்ப் போட் திறக்கும், எப்போது அங்குவர அனுமதிப்பார்கள். என்பதெல்லாம் நிச்சயமாகத் தெரியவில்லை.... தயவுசெய்து என்னை மன்னித்துவிடு.... உனது மனம் ஆறுதலடையக் கூடியதாக ஒரு நம்பிக்கையைக்கூட என்னால் உனக்கு ஏற்படுத்த முடியவில்லை. நான் தவறு செய்துவிட்டேனே என்று எனது மனம் குற்றம் சுமத்துகிறது.... ஒருபாபமுமறியாத உன்னைக் குழப்பிவிட்டு இங்குவந்து நானும் குழம்பிப்போய் நிற்கிறேன்.... நம்மிருவருக்கும் சூழ்நிலைகள் அப்படி அமைந்துவிட்டன.

அந்தக் கூட்டநெரிசலைத் தாங்க முடியாமல் நீ திடீரென்று மயக்கம்போட்டுச் சரிந்தபோது உன்னை என் கைகளில் தாங்கிப்பிடிக்கவேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது... கையிலிருந்த தண்ணீர்ப் போத் தலை வாயினால் திறந்து உன்முகத்தில்

கவிழ்த்தேன்... நீ திடுக்கிட்டு விழித்து என்னை உன் நிலவூறித் ததும்பும் விழிகளால் பார்த்தாய். பின் சாரியென்று சுதாரித்துக்கொண்டாய்.... பிறகு உன்னோடு வந்தவர்கள் உன்னைக் கூட்டிக்கொண்டு போய்விட்டார்கள்... அவ் வளவுதான் நடந்தது... எனக்கு அந்த நிகழ்வை மறக்கமுடியவில்லை... என்மீது துவண்டு விழுந்த அந்த மாற்றுப்பொன் ஒத்த உன்மேனியின் ஸ்பரிசமும் வாடிய பூப்போன்றிருந்த அந்த முகமும் வேற்று நினைவின்றி மனதைக் குழப்பியது.... உன்னை எப்படியாவது சந்தித்து சுகத்தை விசாரித்துவிடவேண்டுமென்று உன்வீடுதேடி வந்தேன். நீ என்னை விரும்பினால் உன்னைக் கலியாணம் செய்துவிட வேண்டு மென்று இரவெல்லாம் மனம் தவிக்கத் தொடங்கிவிட்டது... ஆனால் அதை எப்படி உன்னிடம் கேட்பது என்று தெரிய வில்லை. நல்லவேளையாக நான் உங்கள் வீட்டுப்பக்கம் அன்று காலையில் வந்த போது நீ வாசலைப் பெருக்கிக் கொண் டிருந்தாய்... விடிகாலையாயிருந்ததால் யாரும் விழித்திருக்கவில்லை. அந்தச் சந்தர்ப் பத்தை நழுவவிட விரும்பாமல் உன்னை அழைத்தேன்... நீயும் முறைக்காமல் மறுக்காமல் வந்து சிரித்துக்கொண்டு என்ன விடயமென்று கேட்டாய்.. நான், சுகமாயிருக்கிறீர்களா... என்று கேட்டபோது தலைகுனிந்தபடி ஆமென்றாய்.... கூட்ட நெரிசலில் நீமயக்கமடைந்து எனது நெஞ்சில் சரிந்துவிழுந்ததை யெண்ணி உனக்கு வெட்கம்.... மன்னித்துக் கொள் ளுங்கள் தெரியாமல் தடுமாறி உங்களில் விழுந்துவிட்டேன் என்று தலையைக் குனிந்த படி நீ கூறியபோது எனக்கு உன்மேல் பாவமாக இருந்தது... எனது முகத்தில் தண்ணீர் தெளித்து எழுப்பிவிட்டதற்கு நன்றி, என்றாய்... அப்படி நீ கூறியபோது... எனக்கும் எனது மனநிலையை உன்னிடம் கூறி உனது விருப்பத்தை அறிந்துவிட இது நல்ல சந்தர்ப்பம் என்ற எண்ணம் வந்துவிட்டது.... அதனால்தான், உங்களுக்கு யாராவது விருப்பமானவர்கள் இருக்கிறார்களா... என்று விசாரித்தேன்... நீ எனது கேள்வியைப் புரிந்துகொண்டு, இல்லை எனக்கு அப்படியாருமில்லை ஏன் கேட்கிறீர்கஎென்றாய்... அதற்குமேல் என்னால் எனது மனதைத் திறக்காமல் இருக்கமுடியவில்லை.... அப்படியானால் என்னை விரும்பலாமே நான் உடனடி யாக றிஜிஸ்தர் மேரேஜ் செய்யத் தயாரா



# நெல் உகுத்துப் பரவும் கடவுளும் இலவே



**– செ. சுதர்சன்**

**யுகமாய் எழுந்த பெருங்கனவொன்றை**
**நீல மிடற்றில் செம்பட்டி சூடி,**
**நிகரில் சூதில் நிணக்கூழ் நயக்கும்**
**ஆண்பாற் பேய்மகள் ஊழி விழுங்கிற்று!**

**யுகமே யுகமே எங்கெரியுற்றாய்!**
**வானிடை எகிறிப் பாய்ந்தெழு கொடியே,**
**வருபகை மடித்த மார்பெழு புகழே**
**ஏனிடருற்றாய்!எங்கெரியுற்றாய்!**

**மூதின் முல்லைப் பெருங்கடல் அன்னாய்!**
**முள்ளிவாய்க்காற் சிறுமணற் கும்பிகாள்!**
**முடிவைக் கரைத்த நந்திக்கடலே!**
**மனத்துள் மண்ணை மகிழ்விற் சுமந்து**
**களப்பெருஞ் சுரவழி நடைநின்றொழுகி,**
**நன்றென நின்றவர் நாடு பாடினர்.**
**காதம் நான்கின் வழிகளுந் தொலைய,**
**கந்தகக் களிறால் எறிந்து வீழ்த்தி,**
**காடே ஆற்றாக் காடு பாடினை.**

**நெல்மணிச் சோறு, நெய்யெரி விளக்கு,**
**நேர்த்திச் சேவல், நெடுகுலை வாழை**
**படைத்துப் பரவும் கடவுளர்  பரவேன்.**

**ஊழி யுகத்தின் மக்களைக் காண...**
**வெளியிடை இரைந்த காற்றைத் தேடினேன்,**
**காற்றில் எழுந்த அழுகுரல் தேடினேன்,**
**கருகிய மரத்து நிழற்கால் தேடினேன்,**
**நெடுங்கடல் அலையின் துயரிசை தேடினேன்,**
**நிலமிசை வீழ்ந்தவர் பூந்துகள் தேடினேன்,**
**கரத்திடை மண்ணில் கால்தடம் தேடினேன்.**

**கண்ணீர் மாலைப் படையலைவிரித்து,**
**நெஞ்சின் வழியாய் நிலமிசைப் பரவினேன்...**
**'மண்'  என்ற சொல் முன்நின்றவரோ...**
**காய்ந்த என் மனத்துள் 'கல்நின்றாரே'**

*(குறிப்பு: 'நெல் உகுத்துப் பரவும் கடவுளும் இலவே' - புறம் 335:12)*




**வீட்டில் நான் சரியாக இளைத்து மெலிந்து களைத்துப் போய்விட்டேனாம் என்கிறார்கள்.... அம்மாவுக்குத்தான் இதில் அதிகம் விடுப்பு.... சந்தேகம். எப்படி யாவது கண்டுபிடித்துவிடுவாவோ என்று பயமாக இருக்கிறது...**

**வீட்டில் உனது திருமணம்பற்றிப் பேச்சு வருமானால் விடயத்தை வெளிப்படுத்திக் கூறிவிடு... அப்படி எந்தப்பேச்சும் எழாவிட்டால் நீயாக அதுபற்றிப் பேசவேண்டாம்....**




யிருக்கிறேன்... என்று கேட்டுவிட்டேன்...

உண்மையில் உன்னை உடனடியாகத் திருமணம் செய்ய எதுவித திட்டங்களும் என்னிடமிருக்கவில்லை... வேலையிலிருந்து ஒருமாத லீவில் வந்தநான் உடனடியாக இங்கு வரவேண்டியிருந்தது... அவசர ஆர்வத்தில் அப்படிக் கேட்டுவிட்டேன்...

நீ திடுக்கிட்டு... தடுமாறிப்போய், என்ன நீங்கள் இப்படித் திடீரென்று வந்து கேட்கிறீர்கள்... வீட்டில் அப்பா அம்மாவிட மல்லவோ வந்துகேட்க வேண்டும் நானெப்படி இதற்குப் பதில் சொல்வது? என்றாய். எனக்கு அந்த வார்த்தை தேனாயினித்தது... என்னை நீ முறைத்து ஒரு பார்வை பார்த்திருந்தால், நானும்... சரி இது சரிவராது இந்தப் பழம்புளிக்குமென்று, என்பாட்டில் போயிருப்பேன். ஆனால் உனக்கும் என் முகத்திற்கெதிரில் அப்படிச்சொல்ல மன மிருக்கவில்லை.. காலம் நம்மை அப்படி மனதாலிணைய வைத்துவிட்டது.... எனது மொபைலைத் தந்து அதில் உனது நம்பரைப் பதிந்துவிடக் கேட்டபோது நீயும் மறுப் பில்லாமற் தந்துவிட்டாய்... அதன்பிறகு நாம் இருவரும் சந்திக்காமலேயே ரெலிபோனிலும்... இ-மெயிலிலும் நமது உறவை வளர்த்துக் கொண்டோம்.

என்னை மன்னித்துவிடு... எந்தவொரு குழப்பமுமில்லாமல் அமைதியாக இருந்த உன் மனதைச் சலனப்படுத்திவிட்டு நான் இங்குவந்துவிட்டேன்.... லீவில் வந்து நின்ற என்னைக் கம்பனி உடனடியாக வருமாறு கூப்பிட்டதால் வரவேண்டி யேற்பட்டுவிட்டது... கட்டாயம் முடித்துக் கொடுக்க வேண்டியிருந்த எனது வேலைகளை முடித்துக் கொடுத்து விட்டு உடனடியாக அங்குவரத்தான் எண்ணியிருந்தேன்... ஆனால் பாழாய்ப்போன கொரோனாவால் இங்கு எயார்ப்போட்டை யெல்லாம் மூடிவிட்டார்கள்... எப்போது நிலைமை சீரடைந்து என்னால் அங்கு வர முடியுமோ தெரியவில்லை... அதுவரை சும்மா காத்துக்கொண்டு இருக்காமல் இங்கு மீண்டுமொரு காண்டிராக்டில் கையெழுத்துப் போட்டுவிட்டேன்.... நிலைமை சீராகினாலும் இன்னுமொரு ஆறுமாதம் இங்கிருக்கத்தான் வேண்டியேற்படும்.... சிலவேளை இந்தக் கொரோனாவால் ஒருவருடம்கூட ஆகலாம்... என்ன செய்வது நாம் திட்டமிடுகின்றபடி யெல்லாம் வாழ்க்கை அமைவதில்லை...

தயவுசெய்து கவலைப்படாதே... எப் படியும் விரைவாக வந்துவிடத்தான் துடித் துக்கொண்டிருக்கிறேன்... வீட்டில் உனது திருமணம்பற்றிப் பேச்சு வருமானால் விடயத்தை வெளிப்படுத்திக் கூறிவிடு... அப்படி எந்தப்பேச்சும் எழாவிட்டால் நீயாக அதுபற்றிப் பேசவேண்டாம்.... நான் அங்கு வந்ததும் உனது பெற்றோருடன் உரிய முறையில் தொடர்புகொள்ளுவேன்.. வீணாகக் கவலைப்பட்டு உடம்பைக் கெடுத்துக் கொள்ளாதே... உன்நினைவாகவே நானிங்கு இருக்கிறேன்.

உனது கண்ணன்.

* * *

*Thu, 24 Sept. at 05:15*

டியர் கண்ணன்,

உங்கள் இ-மெயில் கிடைத்தது... வாசிக்கச் சற்று ஆறுதலாக இருந்தது... ஆனால் புதிய ஒப்பந்தமொன்றைச் செய்துவிட்டு அதையும் முடித்துவிட்டுவர ஒருவருடமாகு மென்று கூறுகிறீர்கள்.... எனக்கு நீங்கள் வெளி நாட்டிலிருந்து உழைத்துக் கொண்டுவந்து கொட்டத் தேவையில்லை... நீங்கள் போதிய தகுதியோடு இருப்பதால் இங்கு நம்மூரில் ஒரு வேலையைத் தேடிக்கொள்ளலாம்... அந்தச் சம்பாத்தியம் நமக்குப்போதும்... நானும் இருக்கிறேன்தானே.... சரிப்பட்டு வரவில்லையென்றால் ஒரு சிறுகடையை வைத்தாவது பிழைக்க முடியாதா... ஊர் நிலத்தில் விவசாயம்செய்து பிழைக்க முடி யாதா? என்ன நமக்குத்தேவை.... அன்றாடம் பசிதீர்க்கக் கஞ்சி கிடைத்தாலே எனக்குப் போதும். நான் அதிகம் உங்களிடம் எதிர் பார்க்கமாட்டேன். நாம் இருவரும் ஒன்றாக

இருந்து வாழ்வதிலுள்ள மகிழ்ச்சி நீங்கள் வெளிநாட்டுப் பணத்தைக் கொண்டுவந்து இங்கு குவிப்பதால் நமக்குக் கிடைக்கப் போவதில்லை...

உங்களைப் போன்ற பலபேர் இந்த விடயத்தில் சரியான தீர்மானமெடுக்கமுடியாமல் தடுமாறுகிறீர்கள்... உங்களை நம்பிய அபலைகளின் மன உழைச்சல்களைப் புரிந்துகொள்ளாமல் வெளிநாடு வெளிநாடு என்று அவர்களைத் தவிக்கவிட்டுப் போய் விடுகிறீர்கள்... ஆனால் வாழ்க்கையின் பெரும்பகுதியை அந்தப் பாலைவனப் பிரதேசத்தில் இழந்துவிடுகிறீர்கள்.... உங்கள் உயிர்த்துணைகளின் முகங்களைக்கூட மறந்து போய் விடுகிறீர்கள். தற்போது இருக்கும் இண்டர்நெற் வசதியால் ஏதோ சிலபேர் தங்கள் காதலை அன்பைத் தக்க வைத்துக் கொள்கிறார்கள்...

எனக்கு உங்களோடு கோபம்.... எதற்காக மீண்டும் உங்கள் கம்பனியுடன் ஒப்பந்தம் போட்டீர்கள்.... இங்கு பலபேர் தங்கள் ஒப்பந்தம் முடிந்ததும் எப்படியோ பிளேனேறி வந்திருக்கிறார்கள்.... நீங்களும் அப்படி முயற்சிசெய்து பார்த்திருக்கலாமே. இந்தப் பாழாய்ப்போன கொரோனாவின் சாக்கில் என்னையல்லவா இக்கட்டான நிலைக்குள் தள்ளியிருக்கிறீர்கள்.....

அங்கு தனித்துக்கிடந்து என்னை நினைத்துக்கொண்டு உருகும் உங்கள்மேல் குற்றங்களைச் சுமத்தி வெந்தபுண்ணில் வேல்பாயச்சுகிறேனென்று கோபம் கொள்ளா தீர்கள்.... மனத்தாங்கல் தாளமுடியவில்லை... எனது மன உழைச்சல்களை நான் வேறுயாரிடம் கொட்டுவது... பிரிவுத் துயரால் தவித்துப்போய் என் வேதனைகளை உங்கள்மீது கொட்டுகிறேன்... மன்னியுங்கள். ஏதோ உங்கள் அறிவுரைப்படி என்னால் முடிந்த அளவு சமாளிப்பேன்.... முடியாவிடின் எல்லாவற்றையும் போட்டு உடைத்து நமது தொடர்பை வீட்டில் வெளிப்படுத்திவிடுவேன்.... நீங்கள் கவலைப்படத் தேவையில்லை எதுவும் என்னைமீறி நடக்காது. என்னிடம் ஸ்மார்ட்போன் இருந்தால்.. இ-மெயிலில் இப்படிப் பந்திபந்தியாக எழுதிக்குவிக்காமல் உங்களுடன் வாட்சப்.. மெஸஞ்சர் அல்லது ஸ்கைப்பில் நேரடியாகவே கதைக்கலாம்... ஆனால் இப்போதைக்கு எனது சிறிய போன்போதும். செலவுகுறைவு... நான் எனது ஆபீஸ் கம்பியூட்டரில் இரகசியமாகத்தான் உங்களுடன் தொடர்புகொள்கிறேன்... யாராவது கண்டுபிடித்துவிட்டால் வெட்கமும் சங்கடமும்.... எப்போதும் இதையென்னால் செய்யமுடியாது... அதனால்தான், இ-மெயிலில் ஒருவாறு உங்களுடன் தொடர்பு கொள்கிறேன்... ஆபீஸ் கம்பியூட்டரில் யாரும் அவதானிக்குமுன் இ-மெயில் அனுப்புவது சரியான சிரமம்.... பிடிபட்டால் எனக்குப் பெரியசங்கடமாகிவிடும்... சீட்டைக் கிழித்து வீட்டுக்கு அனுப்பினாலும் ஆச்சரியப் படுவதற் கில்லை..

என்னைப்போன்ற ஆபீஸ்போகும் பெண் களுக்கே இவ்வளவு கஸ்டமென்றால்... அடிப்படை வசதிகள் ஏதுமற்ற சாதாரண கிராமத்து அபலைப்பெண்கள் தங்கள் காதலர்களை கணவன்மார்களை வெளி நாட்டுக்கு அனுப்பிவிட்டு எவ்வளவு சிரமப் படுவார்கள்.... அயலூர் அழகனிலும் உள்ளூர் முடவன் சிறப்பு... என்று பெரியவர்கள் கூறுவது இதற்காகத்தானோ தெரியவில்லை... நல்லவேளை நீங்கள் என்னைத் தேர்ந்தெடுத் தீர்கள் ஒருவாறு சமாளித்து தொடர்பு அறுந்து போகாமல் நம்மால் இருக்கமுடிகிறது... தொடர்புச் சாதனங்கள் எங்கும் பரந்துவிட்ட இந்தக் காலத்திலும் இல்லாதவர் வாழ்க் கையில் எதுவுமேயில்லை. நான் இப்படி யெழுதியதற்காக என்மீது கோபம் கொள்ளாதீர்கள்.. நீங்கள் இங்கு வந்துவிட்டால் எனக்கு இந்தக் கம்பியூட்டர், ஸ்மார்ட் போனெல்லாம் தேவையற்றதாகிவிடும்... நானுண்டு என்பாடுண்டு என்று உங்களோடு சந்தோசமாக வாழ்ந்துவிடலாம்... இந்தக் கடிதத்தில் உங்கள் மனம்நோக நான் எதையாவது எழுதியிருந்தால் மன்னியுங்கள்... நானுங்களோடு முரண்பட்டுக் கொள்வதெல்லாம் நாமிருவரும் வாழ்க்கையில் விரைவாக இணைந்துவிடவேண்டுமென்பதற்காகத்தான்.

உங்கள் ராதா

* * *

*Thu, 1 Oct. at 20:20*

டியர் ராதா

உனது, இ-மெயில் பார்த்தேன்.... உன்னிடம் ஒரு ஸ்மார்ட் போன் இல்லாததால் உனது அழகொளிரும் பொன்முகத்தை நேராகப் பார்த்துப் பேசமுடியாமலிருக்கிறது... கூட்ட நெரிசலில் நீ மயங்கிவிழுந்தபோது உனது முகத்தில் நான் தண்ணீர்ப் போத்தலை கவிழ்த்து ஊற்றினேன்... அப்போது கண்டமுகம்தான்... அதன்பிறகு நான் உனது வீட்டுக்கேற்றடியில்

வந்து நின்று உன்னையழைத்தபோது நீவந்தாலும் எனது ஆசைதீர நான் உனது பூ முகத்தைக் காணவில்லை... குனிந்ததலையை நீ நிமிர்த்தவேயில்லை, அதையெல்லாம் கண்டு களிக்காமலேயே அவசரமாக இங்கு வந்துவிட்டேன்.... என்ன செய்வது எனது கொடுப்பினை அவ்வளவுதான். எப்போதும் குனிந்ததலை நிமிராமலேயே என்னோடு நீ பேசியதால் உனக்கும் என்னைச் சரியாக நினைவிருக்குமா என்று தெரியவில்லை, உனது பாங்க் அக்கவுண்ட் விபரத்தை அனுப்பு.... காசு அனுப்புகிறேன்... ஓர் நல்லபோனை வாங்கி வைபை போட்டுக்கொள். ரெலிபோன் கடைகளில் மோடத்துடன் வைபையைப் போட்டும் தருவார்கள்... உடனே பாங்க் விபரங்களை அனுப்பவும், கவலை வேண்டாம். கெதியாக வருவேன்.

கண்ணன்.

* * *

*Thu, 08 Oct. at 16:00*

டியர் கண்ணன்,

அன்று ஒரு கணத்தில் என்நெஞ்சில் பதிந்த உங்கள்முகம் ஒருயுகம் சென்றாலும் இனி அழியப்போவதில்லை... எனக்கு போனெல்லாம் வேண்டாம்... வந்துசேரும் வழியைப் பாருங்கள்... .இ-மெயிலில எனது படத்தை அனுப்புகிறேன்.... நீங்கள் இங்கு வந்து பத்திரமாகச் சேரும்வரை இப்படியே தொடர்வோம்... எனது சிறிய போனை வைத்துச் சமாளிக்கிறேன்... இங்கு வந்ததும் உங்களிடமிருக்கும் ஸ்மார்ட் போனை தேவையானபோது நானும் பாவித்துக் கொள்வேன். தருவீர்கள்தானே!

இங்கு வந்துசேர உங்களுக்குப் பணம் தேவைப்படும்... தேவையற்ற செலவு களைக் கூட்டிக்கொண்டால் அதற்கும் சேர்த்து உழைக்கவேண்டிவரும்... உங்கள் வருகை தாமதமாகும். இங்கு வரும்வரை என்னைப் பார்த்து எனது நினைவுகளை மீட்டுக்கொள்ள நானனுப்பும் படங்களை வைத்துச் சமாளியுங்கள்... நான் எனது பாங்க் விபரத்தை இப்போதைக்கு அனுப்பவில்லை... பிறகு பார்க்கலாம். என் முகத்தை மறந்து போய்விட்ட தென்றால் விரைவில் கம்பி யூட்டர்சென்டரில் இருந்து ஸ்கைப்மூலம் தொடர்பு கொள்கிறேன்.

உங்கள் ராதா

**(முற்றும்)**

❍ ❍ ❍




திரிபடைந்த கொரானாவே போ! போ! போ!
ஸ்ரீ லங்கா நாடுவிட்டுப்போ! போ! போ!

முகக்கவசம் போடுகிறோம் பார்! பார்! பார்!
மூக்கினையும் மூடுகிறோம் பார்! பார்! பார்!
சகமனிதரோடு கூடப்பேசுவதைத்
தவிர்த்துவாழப் பழகிவிட்டோம் பார்! பார்! பார்!

கூட்டங்களாய் போவதெல்லாம் நிறுத்திவிட்டோமே!
கோவிலுக்கும் போவதனைக் குறைத்து விட்டோமே!
ஆட்டங்களைப்போட்டு மது போதை ஏறியே!
அடிதடிகள் செய்வதுவும் அகன்று போனதே!



**சா. சக்திதாசன்**
**(அக்கரைச்சக்தி)**

சீனாவில் இருந்து வந்து சீரழித்தாயே!
சிங்கார இலங்கையையும் சிதைத்துவிட்டாயே!
தானாகப்போகாமல் இங்கு தங்கினால்
சடைமுளையைச்சீவிவிடத் தயங்கமாட்டோம்!

அச்சமூட்டி வீடுகளில் அடங்கவைத்தாயே!
அவலங்களை மக்களுக்கு அளித்துவிட்டாயே!
உச்சமாகப் பணத்தை ஈட்டி உலகை ஆள்பவர்
உச்சித்தலை சொறிய வைத்து உலவுகின்றாயே!

நேரகாலமில்லாமல் வெளியில் சுற்றி
நிம்மதியைக்கெடுத்தவர்கள் திருந்திவிட்டாரே
ஆரவாரமாகக் கொண்டாட்டம் செய்பவர்
அளவுக்குமேல் செலவுகளைக் குறைத்துவிட்டாரே

வேப்பிலையின் புகையடித்து விரட்டிடுவோமே!
மேலும் பல மூலிகைச்சா றருந்திடுவோமே!
சாப்பிடுதல் வெளியிடத்தில் தவிர்த்திடுவோமே!
சத்துமிக்க மரக்கறியைச் சமைத்து உண்போமே!

# தலை நிமிர்ந்து நிற்கும்






வாகரைவாணன்

ஓங்கலிடை வந்துயர்ந்தோர் தொழ விளங்கி
ஏங்கொலி நீர் ஞாலத்திருளகற்றும் – ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன்றேனையது
தன்னேரிலாத தமிழ்

இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சிந்து சமவெளியில் (இன்றைய பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், கிழக்கு ஈரான் ஆகிய நாடுகளை உள்ளடக்கியிருந்த ஒரு பெரும் நிலப்பரப்பு) வாழ்ந்த மக்கள் பேசிய மொழி தொடர்பான ஆய்வில் ஈடு பட்டுக் கொண்டிருக்கும் ஆய்வாளர் திரு. ஆர். பாலகிருஷ்ணன் (சங்ககாலத்து ஊர்ப் பெயர்களைத் தமது கணினி மூலம் சிந்து சமவெளியில் கண்டு பிடித்தவர்) இவ்வாண்டின் ஆரம்பத்திலேயே (14.01.2021) தமிழ்நாடு Sun News தொலைக்காட்சியில் பங்கேற்று உரையாற்றுகையில் அம்மொழி திராவிட மூதாதையர் மொழியாக இருக்கலாம் என்று குறிப்பிட்டார்.

ஆனால் இதே கருத்தை பல ஆண்டுகளுக்கு முன்பு (1954ல்) எவ்வித ஐயத்திற்கிடமுமின்றித் தம்மை ஸ்பெயின் நாட்டுத் திராவிடர் என்று தானாகவே அறிமுகப்படுத்திக் கொண்ட எச். கீராஸ் அடிகள் *(REV. H. HERAS) STUDIES IN PROTO – INDO MEDITERRANEAN CULTURE* என்னும் தமது நூலில் *(Page – 21)* சிந்து சமவெளி நாகரிகம் தமிழருடையது. அவர்கள் மொழி திராவிட மொழி என்று உறுதிபடக் கூறியுள்ளமையைக் கவனிக்கையில் ஐயனாரிதனர் என்னும் புலவர் பெருமகனால் கி.பி. 8ம் நூற்றாண்டில் இயற்றப்பட்டதாகக் கொள்ளப்படும் 'புறப் பொருள் வெண்பாமாலை' என்னும் நூலில் இடம்பெற்றிருக்கும் ***கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளொடு முன் தோன்றிய மூத்தகுடி*** என்னும் தமிழர் பற்றிய புகழ்பூத்த மொழியையே மீண்டும் மீண்டும் நினைக்கத் தோன்றகின்றது. இம்மொழி யாராலும் புறம் தள்ளிவிட முடியாத உண்மையான வரலாறே யன்றி மக்களைக் கவர்ந்திழுக்கும் புராணம் அல்ல என்பதும் தெளிவாகின்றது.

சிந்து சமவெளி ஆய்வில் பெரிதும் ஈடுபட்டு அது திராவிடர் பூமி என்று திடமாகத் தெரிவித்த கீராஸ் அடிகள் போன்று ஸ்ரான்லி வொல்பெட் *(Stanley Wolpert)* ஜே.எம். றொபட்ஸ் *(J.M. Roberts)* கே.வி. கவெல்பில் *(K.V. Zvelebil)* முதலான வெளிநாட்டு அறிஞர் பெருமக்களும் சிந்து சமவெளியில் பேசப்பட்ட மொழி திராவிட மொழியே (தமிழ்) என்ற தெளிவான கருத்தை முன்வைத்தும் பல்லாண்டுகளாகின்றன.

மேற்படி அறிஞர்கள் தெரிவித்த கருத்துக்கள் மறுக்க முடியாதவை என்பதை அண்மைக் காலத்தில் தமிழ்நாடு கீழடியில் இடம்பெற்ற தொல்லியல் ஆய்வின்போது பெறப்பட்ட அரிய பொருட்கள் மட்டுமன்றி காணப்பட்ட தடயங்களும் (உதாரணம் : செங்கல் கட்டிட அமைப்பு முறை) தமிழ் நாட்டிற்கும் சிந்து சமவெளிக்குமிடையே இருந்த நெருங்கிய உறவை (இதனையே ஆர். பாலகிருஷ்ணன் 'விட்ட இடமும் தொட்ட இடமும்' என்று கூறுவார்) வெளிப்படுத்துவதிலிருந்து தமிழர் வரலாற்றின் தொன்மை ஐயத்திற்கிடமின்றி உறுதி செய்யப்பட்டுள்ளதைத் தெரிந்து கொள்ளலாம்.

மேலும், சிந்து சமவெளியோடு (இந்தியத் துணைக் கண்டத்தின் வடமேற்குப் பகுதி) தமிழருக்கிருந்த பிரிக்க முடியாத உறவு மெசபத்தேமியாவின் (ஈராக்) தென்புலத்தில் அமைந்திருதந்தும் உலகிலேயே மிகவும் பழைமையான வரலாற்றை உடைய 'எறிடு' *(ERIDU)* என்னும் தலைநகரைக் கொண் டிருந்ததுமான சுமேரியா என்னும் நாடும் *(FACT FINDER CONCISE ENCYCLOPEDIA – PAGE – 439)* ஒரு தமிழ் நிலமே என்பதை அதன் தலை

நகரங்களில் ஒன்றான ருசு என்னும் பெயரை உடைய நகரம் உறுதி செய்யும். ஏனெனில் இவ் இடப்பெயர் நகரம் என்னும் பொருளையும் தரும் 'ஊர்' என்னும் பழந்தமிழ்ச் சொல்லின் திரிபாகும். இத்தமிழ்ச் சொல்லே லத்தீன் மொழியில் *URBIS* எனத் திரிந்து ஆங்கில மொழியில் *URBAN* எனவும் மாற்றம்பெற்றது.

இதுபோன்று கீராஸ் அடிகளாரின் ஸ்பெயின் நாட்டில் தனிநாடு போல் செயல்படும் ஒரு பிரிவில் வாழும் மக்கள் பேசும் 'பாஸ்கு' *(Basque)* மொழியும் தமிழோடு நெருங்கிய தொடர்புடையது என்னும் மொழியியல் அறிஞர்களின் (கீராஸ் அடிகள் போன்றோர்) கருத்து, அந்த மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட கத்தோலிக்கப் புனிதர்களில் *(Saints)* ஒருவரான இக்னேஷியஸ் லொயலாவின் *(Ignatius of Loyola – 1491 – 1556)* வரலாற்றைப் புதியதோர் கோணத்திற்குட்படுத்துவதைக் காணலாம்.

அதேநேரம் கிறிஸ்தவர்களின் பழைய ஏற்பாட்டில் *(Old Testament)* மிக முக்கிய வகிபாகத்தைக் கொண்டிருக்கும் ஆபிரகாம் *(Abraham)* என்னும் மூத்த குடிமகன் மெசபத்தேமியா (ஈராக்) விற்கு மிக அருகில் அமைந்திருந்த சுமேரியாவின் ருசு என்னும் 'ஊர்' அல்லது நகரத்தையே பிறப்பிடமாகக் கொண்டவர் என்பதும் பின்பு அந்நாட்டில் இருந்து அதே மெசபத்தேமியா ஊடாக கானான் *(Canaan)* என்னும் நாட்டிற்குச் சென்றார் என்ற வரலாறும் இவ்விருவரும் (இக்னேஷியஸ், ஆபிரகாம்) யார்? இவர்களின் பின்புலம் என்ன என்ற கேள்விகளை தானாக எழுப்புதல் தவிர்க்க முடியாத தொன்றாகும்.

வரலாறு எழுப்பும் இக்கேள்விகளுக்கான ஒரே பதிலாக அமைவது வெளிநாட்டுத் தமிழ் அறிஞர் கே.வி. சுவெல்பில் *(K.V. ZVELEBIL)* தரும் கி.மு. மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழர்கள் சுமேரியா உட்பட உலகின் பல்வேறு நாடுகளில் (உரோம், கிரேக்கம், யப்பான், கொரியா, மத்திய கிழக்கு நாடுகள் முதலானவை) வாழ்ந்தார்கள் என்னும் வரலாற்றுச் செய்தியாகும். இதன்படி சுமேரியாவில் கி.மு. 2300ல் *(Fact Finder Concise Encyclopedia – Page – 02)* பிறந்த ஆபிரகாம் எந்த இனத்தைச் சார்ந்தவர் என்ற கேள்வி எழுதலும் இயல்பானதாகும். இதற்கு கி.மு. மூவாயிரத்திற்கும் இரண்டாயிரத்து முந்நூறுக்கும் இடையே காணப்படும் பெரிய இடைவெளி என்பது தெளிவு.

மேற்படி வரலாற்றைத் மிகத் தெளிவாக அறிந்து கொண்ட வெளிநாட்டுத் தமிழறிஞர் பெருமக்கள் உலகின் மூத்தமொழி அல்லது முதல் மொழி என்னும் ஆய்வுரையை இன்று முன்வைக்கும்போது கி.பி. 13ம் 14ம் நூற்றாண்டுகளில் (மணிப்பிரவாளக்காலம்) தலைகுனியத் தொடங்கிய தமிழ் இப்போது ஒருவகைத் திமிரோடு தலைநிமிர்ந்து நிற்பதைக் காணலாம். ஒரு காலம் வடமொழி எழுத்துக்களை தமிழ் கொண்டிருக்கிறது என்று வாதிட்ட வடமொழிவாணர்களின் (இதற்கு 'கீழடி' ஆய்வு தக்க பதில் சொல்லியிருக்கிறது) மூதாதையர் வட இந்தியாவில் கால் வைக்கும் போது அங்கு வாழ்ந்து கொண்டிருந்தவர்கள் பழந்தமிழரே என்னும் உண்மையை *The words worth Encyclopedia (Page – 2091)* பின்வருமாறு தெரிவிக்கும்.

*THE DRAVIDIAN ANCESTORS OF THE TAMILS SETTLED IN SOUTH INDIA WELL. BEFORE THE ARRIVAL OF THE ARYANS FROM THEM. N/M*

ஆங்கிலக் கலைக்களஞ்சியத்தின் மேற்படி வரலாற்றுக் குறிப்பிலிருந்து இந்தியத் துணைக் கண்டத்தில் மட்டுமன்றி இற்றைக்கு ஏழாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தரைவழியாகத் தமிழ் நாட்டோடு அதன் தென்புறமாக ஒன்றித்திருந்த ஈழம் என்னும் இன்றைய இலங்கையிலும் வாழ்ந்த பழந்தமிழர்களின் தாய்மொழி தமிழே இன்றும் அவர்களின் பரம்பரையின் வீட்டுமொழியாகவும் நாட்டு மொழியாகவும் வீற்றிருக்கக் காண்கின்றோம்.

சிந்து சமவெளியிலும் (ஐயாயிரம் ஆண்டு களுக்கு முற்பட்டது) மெசபத்தேமியாவிற்கு (இன்றைய ஈராக்) அருகில் அமைந்திருந்த சுமேரியாவிலும் (அதே காலப்பகுதி) அரியாச னம் போட்டு அமர்ந்திருந்த தாய்மொழி தமிழ், கொரியா, யப்பான், எகிப்து, கிரீஸ் ஆகிய நாடுகள் உட்பட மேலும் பல மத்திய கிழக்கு நாடுகளிலும் செம்மாந்திருந்தமையை பேரறிவாளர்களின் ஆய்வுகளில் இருந்து அறியும்போது நமக்கு அளவுகடந்த களிப்பே ஏற்படுகின்றது. இன்று அதே தமிழ் உலகின் முதல்மொழியாகத் திகழ்கின்றது என்னும் வெளிநாட்டு அறிஞர்களின் அப்பழுக்கற்ற உரைகளைக் கேட்கும்போது தமிழ் உலகம் பூரிப்பின் உச்சத்திற்கே சென்று விடுகின்றது.

பேரறிஞர்களின் மேற்படி அறிவிப்புகளால் நிமிர்ந்தும் திமிர்ந்தும் நிற்கும் தமிழைக் காணும்போது தமிழர் தலைகளும் தானாகவே நிமிர்கின்றன. இதன் சாட்சியாக, சான்றாக உள்ளதும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பிறமொழியோடு உறவு பூண்டதுமான தமிழ்ச் சொற்கள் சிலவற்றையே இவ்வாய்வுக்கட்டுரை வாசகர்களுக்கு அறிமுகப்படுத்துகின்றது. உலகின் முதல்மொழி தமிழின் அரிய சொற்கள் சில அந்நிய மொழிகளோடு அமர்ந்திருப்பது நமக்கு ஆச்சரியத்தை அல்ல அளவு கடந்த பெருமையையே தருகின்றது. அச்சொற்களே இக்கட்டுரையையும் அலங்காரம் செய்கின்றன.

**அம்மா** என்னும் தமிழ்ச் சொல்லில் உள்ள 'மா' என்னும் சொல்லுக்கும் அம்மா என்றே பொருள். அச்சொல்லோடு இணைந்துள்ள 'அம்' என்னும் சொல் சாரியையாகும். ஆங்கில அகராதியிலும் இச்சொல் *'MA'* (மா) என்றே இடம்பெற்றுள்ளது. இச்சொல்லை அடித்தளமாகக் கொண்டே இத்தாலியம், லத்தின், ஆங்கில மொழிகளில் *Madonna, Mater, Mother* ஆகிய சொற்கள் தோற்றம் பெற்றதுபோல மாத்ரு, 'மாதா' ஆகிய சம்ஸ்கிருத பாரசீகச் சொற்களும் உருவாகின.

இதே 'மா' என்னும் சொல் பெருமை *(Dignity)* பெரிது *(Big)* முதன்மை *(First)* என்னும் பொருளிலும் வந்துள்ளமையை *Mayor, Major, Majesty* ஆகிய சொற்களும் தாய் என்னும் பொருளை *Mamma, Mummy* என்னும் சொற்களும் ஆங்கில மொழியில் வழங்கக் காண்கின்றோம். இவை போன்று அம்மா என்னும் தமிழ்ச் சொல் வடவரின் பெண் தெய்வங்களைக் (அம்மன், அம்பாள், அம்பிகை) குறிக்கவும் பயன்படுத்தப்படுகின்றது. அதே நேரம் 'பெரிய' என்னும் பொருளை உடைய இச்சொல் (மா) வடமொழியில் மகா என்றும் கிரேக்க மொழியில் 'மெகா' எனவும் திரிந்து வழங்கும். மரியாதைக்குரிய பெண் அல்லது உயர் நிலை உத்தியோகத்தர் ஒருவர் *Madam,* என்று ஆங்கில மொழியில் அழைக்கப்படுவதற்கும் இச்சொல்லே *(MA)* அடிப்படையாகும்.

இனி, ஏனைய சில தமிழ்ச் சொற்களையும் ஆய்வுக்கெடுத்துக்கொள்ளலாம். பகுதி என்னும் தமிழ்ச் சொல் லத்தின் மொழியில் *Pars, Parts* என வழங்கும். இச்சொற்கள் ஆங்கில மொழியில் *Part, Particle, Partner, Parting, Partisan, Partnership* எனும் சொற்களாகத் திரிந்து வழங்கும்.

**பெற்றோர்** என்னும் தமிழ்ச்சொல் தாய் தகப்பனையே குறிக்கும். இத்தமிழ்ச் சொல்லின் அடிச் சொல்லாகிய பேறு அல்லது பெறு என்னும் சொல்லே லத்தின் மொழியில் *Par* எனத் திரிந்திருக்கலாம். இச்சொல்லில் இருந்தே *Parent* என்னும் ஆங்கிலச் சொல்லும் உருவானது. இதுபோன்றே பின் அல்லது பின்பு என்னும் சொல் ஆங்கிலத்தில் *Hind* அல்லது *Behind* எனத் திரிந்தாகத் தெரிகிறது. *IDIOT* எனும் ஆங்கிலச் சொல் *IDIOTE* என்னும் கிரேக்கச் சொல்லின் திரிபாகும். இது மடமை, அல்லது மடன் என்னும் தமிழ்ச் சொற்களில் இருந்து தோற்றம் பெற்றிருக்கலாம்.

மக்களிடையே எழும் சிறு சண்டையை, சச்சரவை தமிழில் **சலசலப்பு** என்றும் கூறுவர். இது ஆங்கில மொழயில் *Clash* எனத் திரிந்திருக்கலாம். வெறு அல்லது வெறுத்தல் என்னும் தமிழ்ச் சொல் ஆங்கிலத்தில் *Hate* எனத் திரிந்திருக்கலாம். இதுபோன்று *Root, Work, Dark, Room* என்னும் ஆங்கிலச் சொற்கள் வேர், வேலை, கருப்பு, அறை என்னும் சொற்களின் திரிபாகக் கொள்ளப்படலாம்.

**நடை** என்னும் தமிழ்ச்சொல் நாடகம், நடனம் என்னும் சொற்களின் மூலமாக இருத்தல் போல *Dance* எனனும் ஆங்கிலச் சொல்லும் நடனம் எனும் தமிழ்ச் சொல்லின் திரிபு ஆகும். *SIT* என்னும் ஆங்கிலச் சொல்லும் இரு என்னும் தமிழ்ச் சொல்லின் திரிபு என நாம் கொள்ளலாம்.

**நல்லம்** அல்லது **நலம்** என்னும் தமிழ்ச் சொல் லத்தின் மொழியில் *BELLUS* என்றும் ஆங்கிலத்தில் *Well* எனவும் வழங்கும். தொங்கு (தொங்குதல்) என்னும் தமிழ்ச் சொல் *Hang (Hanging)* என ஆங்கில மொழியில் மாற்றம் பெற்றது. நல்வரவு என்னும் தமிழ்ச் சொல்லே ஆங்கிலத்தில் *Welcome* எனத் திரியும்.

**இஞ்சி** என்னும் தமிழ்ச் சொல் ஆங்கிலத்தில் *Ginger* என ஆனது. **கொடூரம்** அல்லது **கொடுமை** என்னும் தமிழ்ச் சொல் லத்தீன் மொழியில் *Crude* என்றும் ஆங்கிலத்தில் *Cruel* எனவும் திரிந்தது. **போர்** என்னும் தமிழ்ச் சொல் லத்தின் மொழியல் *Mars* எனத் திரிந்து பின் ஆங்கில மொழியில் *War* என ஆனது எனலாம்.

**வாழ்க** என்னும் தமிழ்ச் சொல் லத்தின் மொழியில் *Ave* என்று மாற்றம் பெற்றிருக்கலாம். தமிழில் வழக்கில் உள்ள 'ஊ' என்னும் ஒலிக்குறிப்பு லத்தின் மொழியில் *Boo* என

**அண்மைக் காலத்தில் தமிழ்நாடு கீழடியில் இடம்பெற்ற தொல்லியல் ஆய்வின்போது பெறப்பட்ட அரிய பொருட்கள் மட்டுமன்றி காணப்பட்ட தடயங்களும் தமிழ் நாட்டிற்கும் சிந்து சமவெளிக்குமிடையே இருந்த நெருங்கிய உறவை வெளிப்படுத்துவதிலிருந்து தமிழர் வரலாற்றின் தொன்மை ஐயத்திற்கிடமின்றி உறுதி செய்யப்பட்டுள்ளதைத் தெரிந்து கொள்ளலாம்.**



ஆயிற்று. ***ஆய் (தாய்)*** என்னும் தமிழ்ச்சொல் ஆயா எனத் திரிந்து பாட்டி எனும் பொருளைத் தரும். இச்சொல்லே லத்தின் மொழியில் Avia (ஆயா) என மாற்றம் பெற்றிருத்தல் வேண்டும்.

***முரடு*** எனும் தமிழ்ச் சொல் லத்தின் மொழியில் Brutus எனத் திரிந்து ஆங்கிலத்தில் Brute என மாற்றம் பெற்றிருக்கலாம். ***காசு*** என்னும் தமிழ்ச் சொல் லத்தீன் மொழியில் Case என்றும் ஆங்கிலத்தில் Cash எனவும் திரிந்துள்ளது. ***ஓரம்*** என்னும் தமிழ்ச்சொல் லத்தின் மொழியில் Ora என்று திரிந்து ஆங்கில மொழியில் Border என வழங்கக் காணலாம். ஆங்கில மொழியில் உள்ள ELITE, ELECT, SLECT என்னும் மூன்று சொற்களும் பெரும்பாலும் ஒரே பொருளைக் கொண்டிருப்பினும் அச்சொற்களில் ELITE என்பது (உள்ளவற்றில்) மிகச் சிறந்தது எனும் பொருளையே தரும். இச்சொற்கள் யாவும் SLECT என்னும் லத்தின் சொல்லையே அடித்தமாகக் கொண்டவை. எனினும் மேற்படி லத்தின் சொல்லின் மூலமாக இருப்பது ***தெரிவு*** எனும் தமிழ்ச்சொல் எனலாம். SLIM என்னும் ஆங்கிலச் சொல் ஜேர்மன் அல்லது டச்சுச் சொல்லைச் சார்ந்தது. (டச்சுக்காரர் என்னும் ஒல்லாந்தர் போர்த்துக்கீசரை விட இலங்கையை அதிக ஆண்டுகள் ஆட்சி செய்தமை இங்கு கவனத்திற்கொள்ளத்தக்கது) என ஒக்ஸ்போட் அகராதி (Oxford) கூறினும் அச்சொல் ***மெலிவு*** அல்லது ***மெல்லியது*** என்னும் தமிழ்ச் சொல்லையே அடித்தளமாகக் கொண்டிருப்பது புலனாகின்றது.

குழந்தையைக் குறிக்கும் ***வாவா*** என்னும் தமிழ்ச்சொல்லை ஒட்டியதாகவே Baby என்னும் ஆங்கிலச் சொல் அமையும். (Imitative of Child's Baba') என Oxford அகராதி எடுத்துச் சொல்லும். தமிழ் மொழியின் பழைமைக்கும் சிறப்புக்கும் இது ஒரு நல்ல உதாரணமாகும்.

***பையன்*** எனும் தமிழ்ச்சொல் ஆங்கிலத்தில் Boy என மாற்றம் பெற்றதுபோல ***பிள்ளை*** என்னும் தமிழ்ச் சொல் ஆங்கிலத்தில் Child என ஆயிற்று. குளிர் காலத்தில் வீசும் காற்றின் சத்தம் ***சில்*** எனச் கூறப்படும். இவ்வொலிக் குறிப்பே ஆங்கிலத்தில் அக்காற்றைக் குறிக்கும் விதத்தில் Chill என வழங்கி வருகின்றது.

வெளிநாட்டுத் தமிழ் அறிஞர்களில் ஒருவரான கே.வி. சுவெல்பில் (K.V. Zvelebil) குறிப்பிட்டுள்ளதின்படி கி.மு. மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு பாரசீகம் (ஈரான்) மெசபத்தேமியா (ஈராக்), சிரியா, எகிப்து, சுமேரியா ஆகிய நாடுகள் உட்பட யப்பான், கொரியா, கிரீக், ரோம் முதலான நாடுகளிலும் வாழ்ந்த தமிழர்களின் தாய்மொழி தமிழ், அந்நாடுகளின் மொழிகளோடு ஐக்கியமானதன் அடையாளமாகவே அம்மொழிகளில் கலந்துள்ள தமிழ்ச்சொற்களை நாம் காண்கின்றோம்.

அனைத்து மொழிகளிலும் உள்ள சொற்கள் 'ஒலி'யையே அடித்தளமாகக் கொண்டவை என்பதால் அவை மனித நாக்குகளின் உச்சரிப்பால் (Pronunciation) வேறு வடிவம் எடுத்தல் இயல்பானதொன்று. இதனால் தான் மொழி Lingua (நாக்கு) என்று லத்தின் மொழியில் குறிப்பிடப்பட்டுள்ளது. இச்சொல் லில் இருந்தே Language என்ற சொல் ஆங்கில மொழியில் உருவானது. இம் மொழி யியல் வரலாற்றை இச் சந்தர்ப்பத்தில் மனம் கொள்ளுதல் தக்கது.

இம்மொழியியல் ஆய்வில் சில சொற்கள் மட்டுமே வாசகர்களின் பார்வைக்கும் சிந் தனைக்குமாக இங்கே முன்வைக்கப்படு கின்றன. இது, என் தமிழ்ப்பணி, எனக்கு எப்போதும் இனியது. ஆனாலும் இக்கடினமான பணியில் குற்றம் குறைகள் இருக்கக்கூடும். வானத்திற்குக் கீழே உள்ள எதில்தான் வழு வில்லை?

❍ ❍ ❍



மொழிவரதன்

ஜி.எஸ். என்றழைக்கப்படும் கிராமசேவகர் அரச உத்தியோகம் இவ்வளவு முக்கியமானது என்பதை சுகுமாரன் அறிந்திருக்க வில்லை.

கல்விப் பொதுத்தராதர உயர்தர சித்தி அடைந்ததன் பின்னர் பல்கலைக்கழக பிரவேசம் கிடைக்காத நிலையில் என்ன செய்யலாம் என்ற ஒரு காலம் எல்லோருக்கும் இருக்கும் தானே? சுகுமாரனுக்கும் அப்படி ஒரு காலம் வந்தது. அவ்வேளையில் பத்திரிகை விளம்பரங்களில் வரும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பிப்பதும் வழக்கம். மேலும் அரசாங்க வர்த்தமானியைத் தேடி தபாலகம் சென்று பெற்று அதில் உள்ள வெற்றிடங்களுக்கு விண்ணப்பிப்பதும் வழக்கம். பல கனவுகளுடன் சிலகாலம் அந்தத் தொழிலில் சேர்ந்தது போலவும் தொழிலில் ஈடுபடுவது போலவும் கூட கனவுகள் பல வந்து செல்லும். அவைகளுள் சில நனவாகி போவதும் உண்டு. 'பொய்யாய் பழங்கதையாய்க் கனவாய் மெல்லப் போனதுவே' என பட்டினத்துப் பிள்ளை கூற்றாய் போவதும் உண்டு.

சுகுமாரனுக்கு இது எதிர்மறையாக இருந்தது. அவனைப் பொறுத்தவரையில் சாதகமாகத் திகழ்ந்தது.

அவன் கிராம சேவகர் உத்தியோகத்திற்காக விண்ணப்பித்த விண்ணப்பத்திற்கு பதில் கிடைத்தது. இதனை அடுத்து பரீட்சை, நேர்முகப் பரீட்சை எனப்பல நடைமுறை தடைக்கற்களைத் தாண்டி ஒரு கட்டத்தில் பதவியில் நியமனத்திற்குரிய கடிதமும் கரம் கிட்டியது. சுகுமாரன் வாழ்வில் இதுவரை காணாத ஒரு புதுவித மகிழ்ச்சியைத் தன்னுள் கண்டான். அவனுக்குத் தலை கால் புரியவில்லை. தன்னுடன் நியமனங்களைப் பெற்றுக் கொண்ட நண்பர்களான ரகுவரன், சேதுபதி, விஜயலட்சுமி போன்றோர்களுடன் நுவரெலியாவில் ஒரு ஹோட்டலில் நல்ல பகல் சாப்பாடு ஒன்றை ஏற்பாடுசெய்து உண்டு மகிழ்ந்தான்.

என்றாலும் அவனுக்குள் ஒரு குறை இருந்தது. அவனுக்கு நியமனம் வழங்கப்பட்ட கிராம சேவகர் பிரிவு சற்று தூரமானதாக இருந்தமையே. அதனை மாற்றிக் கொள்ளவும் வழி இல்லாத நிலைமையே யதார்த்தத்தில் காணப்பட்டது. என்ன செய்யலாம்?

அவன் அதற்கு முன்னர் குறித்த பிரதேசத்தில் பணிபுரிந்திருந்த சகோதர இனத்தவரான ஜயசிங்ஹ அவர்களிடம் இதுபற்றி உரையாடினார் "மாறுவக் இல்லண்ட புழுவன், நமுத் பலவெனி பத்வீம நிஸாமாறு கரண்ட அமாறு" (மாற்றம் கேட்கலாம், ஆனால் முதல் நியமனம் ஆகையால் மாற்றுவது சிரமம்) தொடர்ந்தும் அவரே கூறினார்.

"நீங்க இளைஞர்தானே இப்ப போய் வேலை செய்யுங்கோ, ஒரு ஐந்து வருடம் சேர்வீஸ் போடுங்க, நீண்டநாள் அப்பிர தேசத்தில் கிராமசேவகர் இல்லா திருந்தமையால் உங்களை





அம்மக்கள் மகிழ்ச்சியோடு வரவேற்பார்கள், மதிப்பார்கள், பின்னர் நீங்களே அங்கிருந்து வர விரும்ப மாட்டீர்கள்" என ஜெயசிங்க அன்போடு அவனை உற்சாகப் படுத்தினார். அந்த சீனியர் கிராம சேவகரின் ஆலோசனையை ஏற்றுக்கொண்ட சுகுமாரன் ஏறத்தாழ 30 கிலோ மீட்டர் தூரத்துக்கு அப்பால் இருந்த அந்தக் கிராம சேவகர் பிரதேசத்திற்கு தனது இருப்பிடத்திலிருந்து தினமும் பஸ்சில் சென்று வந்தான்.

வழிநெடுகிலும் அழகான இயற்கைக் காட்சிகள் அவன் மனதைக் கவர்ந்தன. அழகான கொத்மலை ஆற்றின் கிளைநதி ஆறு மிக நீண்ட ஹோட்டன் சமவெளி உயர் பகுதியில் இருந்து புறப்பட்டு அவனது வேலைப் பிரிவினூடாக ஊடறுத்துச் சென்றது. ஆற்றின் இருபுறமும் பச்சை, மஞ்சள் நிற மூங்கில்கள் பசுமையைக் காட்டிச் சிரிப்பதாக அவன் கற்பனை செய்துகொண்டான். இயற்கையாகவும் அப்படித்தான் செழிப்பாய் மூங்கில்கள் காற்றிலாடி மகிழ்ந்திருந்தன. இவைகளினூடாக சேனையூர் எனும் ஒரு சிறு நகரம், பச்சைவெளி நகரம் வளைந்த மலை என பல தேயிலை மலைத் தோட்டங்கள் தினமும் அவன் கடந்து செல்லும் பெருந்தோட்டங்களாகின.

சுகுமாரன் ஊடறுத்துச் செல்லும் அந்த ஆற்றினில் ஆங்காங்கே காணப்படும் கருங்கற்களைப் பார்ப்பான். சேனையூரை அண்டிய பிரதேச ஆற்றின் கற்களில் வெள்ளை எச்சங்கள் சில இடங்களில் காணப்படுவதையும், சில வேளைகளில் ஒற்றை நீர்க்காகம் ஒன்று அக்கற்களின் மேல் அமர்ந்திருப்பதையும் காண்பான். ஆனால் அவன் தொடர்ந்து ஒற்றை நீர்க்காகத்தை மாத்திரமே கண்டான். வளைந்து வளைந்து செல்லும் அவன் செல்லும் பஸ் பாதைகளின் தூரத்தே ஏதோ ஊர்வதைப் போல் தோட்டத்துப் பாதைகள் தெரியும். அதனூடே துரைமார்களின் மோட்டார் பைசிக்கள், கொழுந்து கொண்டு செல்லும் டிரெக்டர்கள், லொறிகள் ஏழைகளின் 'சுவர்க்க வாகனமான' ஆட்டோக்கள் போன்றன ஊர்ந்து செல்வது கண்களுக்குள் விழும் படங்களாகின.

பஸ்ஸிலும் வெளியிலும், 'ஜி.எஸ் சேர்.... ஜி.எஸ் சேர்' என வெகுஜனங்களான தோட்டத்து தொழிலாளர்கள் அழைக்கும் பொழுதில் ஓ எமக்கும் சமூகத்தில் ஓர் இடம் உள்ளதோ? தொழில் சமூக அந்தஸ்த்தின் Social States ஓர் அம்சமா என தன்னுள் கேள்வி எழுப்பிக் கொள்வான். அதேவேளை இத் தொழில் சமூகத்தின் மிகப் பொறுப்புமிகு தொழில் என்பதைவிட சேவை என்பதனையும் உணர்ந்து கொண்டான்.

சுகுமாரன் தான் கடமை புரியும் அலுவலகத்தின் வீதியைத் தினமும் கடக்கும் வேளையில் ஆங்கே அழகான பொன்னிற மான மேனியுடன் கருமை நிறமான முடியுடன், தெளிவான பளிச்சென்ற அகன்ற கண்களுடன் ஒரு பெண் வீட்டின் அரைக் கதவடியில் நிற்பதைக் காண்பான். பிளேன்டீ குடிப்பதற்கான ஒரு சிற்றுண்டிச்சாலை அவ்வீட்டருகேதான் உள்ளது. சுகுமாரனைக் கண்டவுடன் மெல்லியதாக அவனைப் பார்த்துச் சிரிப்பதையும் அவனும் அவளைப்பார்த்து புன்னகைத்துவிட்டுச் செல்வதையும் வழக்கமாகக் கொண்டிருந்தான்.

காலம் கடந்து செல்லச் செல்ல அவனுக்கும் அந்த பெண்ணைப் பற்றி அறிய ஓர் ஆவல் தூண்டியது. அந்த ஆர்வம் ஏதோ ஓர் அனுதாப உணர்வுடனான ஒன்றாகவே அவனுக்குப் பட்டது. ஆம் அவள் உதிர்க்கும் புன்னகைகூட சுகுமாரன் எனும் கிராமசேவகர் என்பதற்கான ஒரு குறியீடே, அது ஒரு மரியாதையின் நிமித்தமான பரிமாறல்களே தவிர வேறெதுவுமாக அது இருந்திட நியாயமில்லை. இயல்பான அப்பண்பு ஒரு சராசரி அன்பின் பரிமாற்றமே. இப்படி சுகுமாரன் பஸ்சில் அப்பிரதேசம் போகும் போதும் வரும் போதும் அந்தப் பெண் பற்றிய நினைவுப்படம் மனஅலைகளின் உள்ளிருந்து அவனை உலுக்கும், உசுப்பும் அதை அவன் இனம் புரியா ஓர் சுகானுபவமாகக் கொள்வான்.

குறித்த பிரதேச கிராமசேவகராக ஆகிய பின்னர் பலர் அவனைக் காண வருவதும் அலுவல்களின் நிமித்தம் கதைப்பதும் வழக்கமாகின. ஊரின் பழைய வரலாற்றினை கை விரல்களுக்குள் வைத்திருக்கும் வேலு டெயிலர் அதில் ஒருவர். ஊரின் ஒவ்வொரு மூலையிலும் உள்ளோர் பற்றியும் பெரிய மனுஷன் என்ற அடையாளத்துடனான பூமி புத்திரர்கள் பற்றியும் அவரது தேடல்களும், தகவல்களும் சுகுமாரனுக்கு ஒரு வகையில் உதவின.

அதேபோல தேநீர் அருந்தும் வேளையில் அங்கு வரும் பெரிய உதடு பெருமாள் "ஐயா.."

என தனது வெகுளித்தனமான அன்பை வெளிக்காட்டுவான். கால், கை, மேலாடை எல்லாம் மரக்கறித் தோட்டத்து மண் அப்பிக் கிடக்கும் காட்சியும் பித்த வெடிப்புகளுடனான அவனது கட்டை குட்டையான கால்களும், விரல்களும் ஏழ்மையையும் உழைப்பையும் பறைசாற்றிக் காட்டும்.

ஒற்றைக் கதவு பெண்ணைப் பற்றி விசாரிக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றும் வேளைகளில் எல்லாம் அதை யாரிடம் கேட்பது என்றொரு வினாவும் ஊடே சுகுமார னுக்கு ஏற்படும். இந்நிலையில் அதனை பெரிய உதடு பெருமாளிடம் கேட்டால் என்ன என்று எண்ணி ஒருநாள் அவனிடம்,

"பெருமாள் அந்த வீட்டிலே யார் இருக்கிறது?" என ஏதோ ஜி.எஸ். கேட்பது போல் கேட்டான்

"ஐயா அதிலதான் நம்ம தோட்டம் செய்யுற செல்லையாவும் அவரு சம்சாரமும் இருக்கிறாங்க" என்றான்.

"ஆ அப்படியா? நா ஒரு அம்மாவைக் கண்டிருக்கிறேன், ஆனா ஐயாவை கண்ட தில்லையே அதுதான் கேட்டேன்"

"ஆமாங்க ஐயா, செல்லையா தோட்டம் செய்யிறவரு. அவருக்கு இங்கே காணி கிடக்கு, இன்னும் வேற இடத்திலேயும் கிடக்கு" என்றவன், "ஆனா ஒண்ணுங்க" என நிறுத்தினான். பின்னர்

"அந்த அம்மா தனியே கதவுல நிக்கும். இது எல்லோருக்கும் தெரியும். அவங்களுக்குள்ள நல்ல உறவு கிடையாதுங்க; மொதல்ல நல்லா இருந்த குடும்பங்க"

"ஆ அப்படியா? அப்ப இப்ப என்ன ஆச்சு"

"ஐயா கொஞ்சம் ஒரு மாதிரிங்க... அவரு பொம்பள விசயத்தில் கொஞ்சம் மாதிரி மீப்பிலிமானையில தோட்டம் செய்யப்போன இடத்தில் ஒரு சிங்களப்பெண்ண வச்சு இருக்குறாருனு கதை... இந்த அம்மாவுட்டு ஆளுகளுக்கு இதெல்லாம் தெரியாம கல் யாணத்தை முடிச்சிட்டாங்க. ஆறுமாசம் போகையில ஊரில சில பொம்பளைங்க அய்யாவைப் பத்தி இந்த அம்மாகிட்ட சொல்லிட்டாளுக... இங்கேயும் தோட்டத்துக்கு வேலைக்கு வாரவங்களோட அந்த மாதிரினு கதை இருக்கு"

"அப்ப இப்ப என்ன ஆச்சு...."

"இப்ப அம்மா வீட்டாளுங்க வழக்கு



## காந்தள்

**காந்தள் கொடிக்கு**
**கைவாளி கொண்டு**
**நீரூற்றியது யார்?**

**மலரின்**
**செம்மஞ்சள் நிறம்**
**மனதில் ஏற்படுத்தும்**
**உணர்வு யாது**

**இதழ்கள்**
**மனிதக்கைவிரல்களது**
**கூம்பிய அமைப்பா**

**உள்ளிருக்கும் வாசம்**
**தூண்டும்**
**உணர்வுகள் எத்தனை?**

**மதங் கொண்டு**
**மலர்களைப் பறித்து**
**கசக்கி எறியாதீர்**

**உங்கள்**
**உள்ளங்கை மட்டுமல்ல**
**உள்ளமும் சிவந்து விடும்**

**கானகத்தில் வளர்ந்த**
**கொடிகளை வெட்டி**
**கொடிகளை நாட்டாதீர்**

**வேரிலும் முளைக்கும்**
**வீரியம் கொண்டது**
**காந்தள்**

**– தம்பிலுவில் ஜெகா**

போட்டிருக்கதாக சொல்லுறாங்க. போட்ட வழக்கு தீர்ப்பு வரல, அதுவரைக்கும் சேர்ந் திருக்கச் சொல்லி இருக்கறாங்க. கொஞ்ச நாளில தீர்ப்பு வந்துவிடும் என்று அம்மா சொல்லும், விவாகரத்து எடுத்துகிட்டு போய்டு வேனு அது சொல்லும்."

இடையில் குறுக்கிட்ட சுகுமாரன், "ஆ, அதுதான் பெருமாள், சட்டம் நீதிமன்றம் உடனே விவாகரத்து குடுத்திடாது அவங்களுக்கும் 'கவுன்சிலிங்' கொடுத்து ஒன்னா இருக்கச் சொல்லி பார்க்கும், பின்னர்தான் தீர்ப்பு வரும்" என்றான்

"சரி பெருமாள் அந்த அம்மா எப்படி?"

உடனே தன்னை சுதாகரித்துக் கொண் டெழுந்த பெருமாள், "அம்மா தங்கங்க....

பாவம் இந்த செல்லையாகிட்ட வந்து மாட்டிக் கிறிச்சி இப்போ ஒத்தையாகிடுச்சி" என்றான்

"ஏன் செல்லையா ரொம்ப மோசமானவரா?"

"அவரு கல்லு மேல ஒரு சேலை கிடந்தால் கூட போய் கட்டி பார்க்கிற... மீப்பிலிமான சம்பந்தம் அந்த அம்மா வீட்டவங்களுக்கு தெரியாது. அதுதான் அந்த அம்மா வந்து மாட்டிக்கிச்சு"

இந்த உரையாடல்களுக்கு பின்னர் வேலை முடிந்து பஸ் ஏறி வந்த பொழுது அவனுக்கு பசுமையான தேயிலைச் செடிகளோ உயர்ந்த அழகான சைப்பிரஸ் மரங்களின் 'ஊ ஊ' என்ற காற்றின் ஒலி அலைகளோ இரசிக்கக் கூடியதாய் இருக்கவில்லை.

பஸ்ஸில் பக்கத்தில் வந்த அந்த ஊர்க் காரர் "அய்யா பயணமா?' என்றபோதும், பஸ் கண்டக்டர் "சேர் நேரத்தோடு பய ணமா" என்றபோதும் யாவற்றுக்கும் ஒரே ஒரு புன்னகையையும் ஓணானைப்போல தலை யாட்டலையும் மட்டுமே அவன் செய்தான்.

சேனையூர் ஆற்றோரம் ஒரு கல்லில் தனித்து அமர்ந்திருக்கும் அந்த நீர்க்காகம் பற்றியும் நினைவுக்குவர அந்த ஒற்றை நீர்க் காகத்தை தேடினான். அது அங்கே ஒரு கல்லில் அமைதியாக அமர்ந்திருப்பதைக் கண்டான்.

பக்கத்திலிருந்த ஆசிரிய ஆலோசகர் ராஜரத்தினத்திடம் கதைகொடுத்தான். அவர் மட்டக்களப்பினைச் சேர்ந்தவர், மலையகத்தில் திருமணம் செய்து வாழ்பவர். அவருடன் அதே பஸ்ஸில் வருபவர் ஏனெனில் அவரும் அதே பிரதேச பாடசாலையில் மேற்பார்வையாளராக செல்பவர். அவர் சுற்றாடல் வரலாறு என்ப வற்றுடன் தொடர்பான பாடங்களை மேற் பார்வை செய்பவர்.

சுகுமாரன் மெல்ல அவரை நெருங்கி கேட்டான், "சேர் இங்கே நீர்க்காகங்கள் வாழ் கின்றனவா?" அவர் சற்று சிரித்தார், பின்னர் "இல்லை இந்த மலைப்பிரதேசத்தில் நீர்க் காகங்கள் இல்லையே..." என்றவர் சுகுமார னைப் பார்த்து "ஏன் கேட்கிறீங்க" என்றார்

"இந்த சேனையூர் ஆற்றில் ஒரு ஒற்றை நீர்க்காகத்தை நான் காண்கிறேன். ஆனால் கூட்டமாகவோ அல்லது இரட்டையாகவோ நான் காணவில்லை. அதுதான் கேட்டேன்" என்றான்.

ஆச்சரியத்துடன் வினோதமாகச் சுகு மாரனை உன்னிப்பாய் பார்த்து அவர் "இனி நானும் சற்று கவனிக்க வேண்டும்" என்றார்.

இடைமறித்த சுகுமாரன், "கற்களில் வெள்ளை வெளேரென எச்சங்கள் காணப்படும் சேனையூர் நகரைத் தாண்டி பஸ் விகாரையை நோக்கி செல்லும் வேளையில் அந்த மூங்கில் கூட்டத்தினிடையே அந்த ஆற்றைப் பாருங்கள் என்றான்"

கிராம சேவகர் சுகுமாரன் சில நாட்களாக அவரது அலுவலகம் போகவில்லை அவருக்கு பல வேலைகள், வருடாந்த வேலைகள் நிகழ்ச்சி நிரலாக்கப்பட்டிருக்கும். பின்னர் அவைகளும் தேவைகளுக்கு ஏற்ப மாற்றங்கள் செய்யப்படும். பல செயலமர் வுகளில் கலந்து கொள்வதும் நுவரெலியா பிரதேச செயலகம், கச்சேரி போன்றவற்றில் நடத்தப்படும் அறிவுறுத்தல் கூட்டங்களை செவிமடுப்பதும் எனப் பல சோலிகள். சுகுமாரன் சில காலங்களுக்குப் பின்னர் அலுவலகம் சென்றான். அந்த இடைக் காலத்தில் அறிவித்தல் மூலம் தனது வரவின் மையை அலுவலக முற்றத்தில் அறிவிப்புப் பலகையில் தெரிவித்திருந்தான். இவ்வாறான நேரங்களில் எல்லாம் தனக்கு உதவியாக இருக்கும் மாரிமுத்துவுக்கும் தெரிவித்து சில விடயங்களைச் செய்யச் சொல்லி வேறு மார்க்கங்கள் இருப்பின் அதன் ஊடாக அவற்றைச் செய்திட விழைவான்.

அன்று அவன் வழமைபோல் தேநீர் அருந்த என்றால் சரியாக 11 மணிக்கு முஸ்லிம் பேக்கரியில் நல்ல சுடச்சுட 'மாலு பண்' போடுவார்கள், நல்ல சுடச்சுட வடையும் அங்கே கிடைக்கும். சுகுமாரன் அன்று அந்த முஸ்லிம் கடையை நோக்கிச் செல்லும் வேளையில் அந்த அரைக்கதவு வீடு அந்தப் பெண் என்பன பற்றி எண்ணியவாறே நடந்தான். ஆனால் அங்கே எவரும் காணப்படவில்லை, கதவு மூடப்பட்டிருந்தது. தேநீரின் பின்னர் வந்தவன் அலுவலக வேலையில் மூழ்கிவிட்டான். சில காலம் வராமையால் பல வேலைகள் 'பெலன் சாகித்தான்' கிடந்தன.

பொது ஜனங்களின் உடனான சந்திப்பு, அவர்களது சேவைகள், தேசிய அடையாள அட்டை பிரச்சினைகள், பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் எனப் பலவகையான விடயங்கள் வேலைப்பளுவைக் கூட்டின.

சுகுமாரன் ஓரளவு வேலைகளை முடித் துக் கொண்டு புறப்பட்ட வேளையில்

இடையில் வேலு டெயிலரைக் கண்டான். கையில் சிகரெட்டுடன் பூட்டப்படாத சேட் பட்டன் உடனும் சாரத்தை தூக்கி பின் 'பெக்கில' திணித்து நின்று கதைக்கும் அவரது ஸ்டைல் தனித்துவமானது. மரியாதைக்காக இடையிலேயே சிகரெட்டை பின்பக்கம் மறைப்பது போல் பாசாங்கு செய்து பின்னர் திடீரென முன்னெடுத்து ஒரு சைட்டில் பக்கத்தில் திரும்பி ஒரு இழு இழுத்து, "தம்பி கோவிக்காதிங்க இந்தச் சனியனை நான் பழகிட்டேன் ஆள்களுக்கு முன்னாலும் நிப்பாட்ட முடியல" என்றவாறு தனது கதையை தொடர்வார்.

இன்று அவர் எதைப் பற்றி கதைக்கப் போகிறார் என எண்ணியவாறு சுகுமாரன், சரி பரவாயில்லை பஸ் வரும்வரை அதையும் கேட்போம் என அமைதியாக இருந்தான். பின்னர் "ஐயா சொல்லுங்க" என்றான்

"ஆ மிச்ச நாளா ஜி.எஸ்ஸ காணமே ஊர்ல பல விஷயங்கள் நடக்குது. ஜி.எஸ் மார்கத்தான் இது எல்லாம் கவனிக்கணும்"

"என்ன விஷயம்"

"அதெல்லாம் என்னத்த சொல்றது, ஸ்கூல்ல இருந்த சிமெண்ட் பலகை எல்லாம் நம்ம ஊரு தலைவரு *50* ரூபாய் *100* ரூபாய் ராஜாங்கிறவனுக்கு கொடுத்து வீட்டுக்கு கொண்டு போயட்டாரு, ஆனால் பாதியில் ப்ரின்சிபால் கிட்ட ராஜா மாட்டிக்கிட்டாரு" என்றவாறு வேலு டெயிலர் கூறத் தொடங்க பஸ்சும் வரச் சரியாக இருந்தது, சுகுமாரன் பஸ் ஏறினான்.

மீண்டும் பச்சை மலை ரோட்டு வழியாக வருகையில் சுகுமாரனுக்கு அந்த பெண்ணின் ஞாபகமும் ஒற்றை நீர்க்காகமும் ஞாபக அலைகளில் மேலெழுந்தன. முச்சந்தி ஊரை கடந்து பஸ் ஓடிக்கொண்டிருந்தது. சுகுமாரன் இடம் மாறி மகாவலி சிறுகிளை ஊடறுக்கும் சேனையூர் ஆற்றின் பக்கம் தொங்கல் இருக்கையில் போய் அமர்ந்து கொண்டான். முச்சந்தி சிற்றூரில் பலர் இறங்க அந்த இடைவெளியில் 'கோனர்ஷீட்'டை பிடித்து அமர்ந்த வண்ணம் சேனையூர் வரும்வரை பார்த்திருந்தான். அவ்வூர் யன்னலின் ஊடாக வெளியே பார்த்தான். அந்த ஒற்றை நீர்க்காகம் ஒரு கல்லின் மீது அமர்ந்திருப்பதைக் கண்டான். அதேவேளை இன்று அந்த அரைக்கதவு பெண் இல்லாததையும் கண்டான்.

சுகுமாரன் தொடர்ந்து தனது அலுவலகம் நோக்கி செல்வதும் சிற்சில வேளைகளில் அப்பெண்ணைப் பார்ப்பதும் சில வேலைகள் மிக அரிதாக அவளது கணவன் செல்லையா தோட்டக்காரர் அவ்வீட்டின் ஒரு மூலையில் வீதியில் போவோரைப் பார்த்தவண்ணம் இருப்பதையும் கண்டுள்ளான்.

ஊரின் ஒரு முக்கிய அரசு ஊழியன் என்ற வகையில் சுகுமாரன் கணிக்கப்பட்டமையாலும் உண்மையும் அதுவாகையால் எவருமே கண்டால் வணக்கம் சொல்லவோ தலை சாய்த்து மரியாதை செலுத்தவோ மறப்பதில்லை. என்றாலும், இளைஞனான அவனுக்கு சில வேலைகளில் அது Hot ஆக இருக்கும்.

மாதங்கள் உருண்டோடின. பெரிய உதடு பெருமாள் ஒருநாள் கொஞ்ச நேரமாக கிராம அலுவல வாயிலில் உள்ளே சுகுமாரனைப் பார்ப்பதும், வெளியில் பார்ப்பதுமாக இருப்பதைக் கண்டான். பொது ஜனங்களின் கூட்டம் குறைந்தது பின்னர் உள்ளே வந்தவன் தனது காவி படிந்த ஓட்டைப் பற்களைக் காட்டி,

"ஐயா சேர்... சேர்..." என்றான்

சுகுமாரன் நிமிர்ந்த வண்ணம் அவனைப் பார்த்து என்ன என்பது போல் தலையை ஆட்டிய வேளை,

"அந்த அம்மாவை அவங்க வீட்டுக்காரங்க கூட்டிகிட்டு போயிட்டாங்க, அதுவும் பக்கத்து

## காலாவதியாகா மனது....

**பசி தீர்க்கும் உணவுகள்!**
**காலாவதியாகிட!**
**தாகம் தீர்க்கும் பானங்கள்!**
**காலாவதியாகிட!**
**நோய் தீர்க்கும் மருந்துகள்!**
**காலாவதியாகிட!**
**மானம் காக்கும் ஆடைகள்!**
**காலாவதியாகிட!**
**குடிகொள்ளும் மனைகள்!**
**காலாவதியாகிட!**
**பயணம் கொண்ட பாதைகள்!**
**காலாவதியாகிட!**
**சுமந்து செல்லும் வண்டிகளும்!**
**காலாவதியாகிட!**
**உனது நினைவலைகள் மட்டும்!**
**காலாவதியாகிட மறுப்பது ஏனோ?**

**—சுபா சங்கீர்த்தனன்**

ஆளுக, பழகின ஆளுககிட்ட எல்லாம் பயணம் சொல்லி அழுதிட்டு போயிருச்சுங்க.... பாவம் அந்த அம்மாங்க..” என தனது மாசற்ற அன்பினை கலங்கும் கண்களுடன் வெளிப் படுத்தினான்.

சுகுமாரனுக்கு மூளையே (Struck) ஸ்ட்ரக் ஆனது போலிருந்தது. சில வினாடிகளின் பின்னர், “அப்படியா பெருமாள் அதுக்கு டிவோஸ் கிடைச்சிருச்சு போல” என்றவாறு வேலையில் கவனம் செலுத்தினான்.

பெருமாள் பெரிய ‘சல்யூட்’ ஒன்று அடித்து விட்டு “வாரேங்க” என்றவாறு நீட்டி விட்டிருந்த தனது சாரத்தை மீண்டும் மடித்துக் கட்டிக் கொண்டு புறப்பட்டான்.

காலம் மிக வேகமாக தற்போது கடப்ப தாக ஒரு பிரமை அல்லது ஒரு நிலை உள்ளமையை உலகம் உணர்ந்து வருகின்றது. சுகுமாரனுக்கு மட்டும் பிரத்தியேகமான ஓர் உலகப் போக்கு கிடையாது தானே? இந்த வேகமான பூகோள அதி விரைவோட்டத்தில் அவனும் கடிகார முள்ளைப் பிடித்து நிறுத்திட அல்லது அதைவிடவும் வேகமாக ஓட முயன்று கொண்டிருந்தான்.

சுகுமாரன் வழமைபோல் ஒருநாள் அந்த அரைக் கதவு வீட்டைக் கடந்து தேநீர் அருந்த போய்க்கொண்டு இருந்தான் அவன் தலை குனிந்த வண்ணம் சென்ற வேளையில் அந்த அரைக் கதவடியில் யாரோ நிற்பது போன்றதொரு நிழலைக் கண்டான். நன்றாக அதை உறுதிப்படுத்திட திரும்பிப் பார்த்தான் அங்கே....

மேலே பிளவ்சுடனும் கீழே கவுணுடனும் ஒரு பெண் நின்று கொண்டிருந்தாள். நல்ல சிவப்பான பூனைக்கண் போன்ற கண்களுடன் காணப்பட்ட அவள் அந்த வீட்டின் அரைக் கதவுடன் சாய்ந்து கதவு நிலையில் தனது நெஞ்சங்களை அழுத்திய வண்ணம் நின்று கொண்டிருந்தாள். நல்ல உடலமைப்பும் சற்று பருமனும் கொண்டிருந்த அப்பெண் மிக இறுக்கமான பிளவ்சுடன் இருப்பதையும் கண்டான்.

இக்காட்சியை சுகுமாரன் கண்டபொழுது வேலு டெய்லர் அவ்விடத்தில் எதிர்ப்பட்டு கதைக்கத் தொடங்கியதால் அவனும் சற்று நின்று அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

ஓ.... ஓ... இது அந்த மீப்பிலிமான சகோதர இனப் பெண்போல.. என மனதுக்குள் சுகு மாரன் எண்ணிக் கொண்டான்.

இந்த (Gap) இடைவெளியில் சிகரெட்டை உள்ளிழுத்து வெளியில் ஒரு பக்கம் முகம் சாய்த்து ஊதிய வேலு டெயிலர், “பார்த்தீங்களா? எப்படி? நம்ம செல்லை யாவுட்டு ஆளு?” என்றவாறு நடிகர் வீரப்பா போல சிரித்தார்!

இந்தப்பிடியில் இருந்து சற்று நகர்ந்து தேநீர் கடை நோக்கி சென்ற சுகுமாரன், பின்னர் அலுவலகம் சென்றான். சற்று நேரத் தில் அவனது அலுவலகத்தில் நுழைந்த அதே பெண் தமது விவசாயம் செய்வதற்கான வரு டாந்த அனுமதிப்பத்திரத்தை புதுப்பிப்பது தொடர்பாக கதைத்தாள். அது செல்லையா தோட்டம் செய்யும் நீரேந்து பிரதேச ஓர் அரசகாணி.

சுகுமாரனின் உள்ளத்துக்குள் எண்ண அலைகள் மோதின. வேலை முடிந்து செல்ல பஸ்சில் ஏறி பிரயாணம் செய்யும் நேரங்களில் பற்பல யோசனைகளில் மனதை அவன் அலையவிடுவான். வழமைபோல் சேனையூர் ஆற்றின் பக்கம் ஒரு கண்ணோட்டம் விட்டான். அதே நீர்க்காகம் ஒரு கல்லில் தனியாக அமர்ந்திருந்தது. பின்னர் பஸ் ஓடும் வேகத்துடன் அதனை நோக்குகையில் அக்காகம் நீருக்குள் பாய்ந்து உள்நுழைந்து நீந்தி... நீந்தி... மற்றொரு கல்லின் மேல் ஏறி அமர்ந்தது, அதன் சொண்டில் மீன் ஒன்றும் இருப்பதும் தெரிந்தது.

எப்படியோ வாழ்வின் சில விடயங்கள் நாம் நினைத்தது போலில்லாமல் சாதகமாகவும், சில வேளைகளில் நாம் நினைத்தது போலில் லாமல் மிக எதிர்மறையாகவும் நடந்து விடு கின்றன. அரைக்கதவு அம்பிகாவின் வாழ்வும் ஒற்றை நீர்க்காகத்தின் வாழ்வும் எப்படி எப்படியோ அந்த மகாவலி கிளை நதி ஓடும் சேனையூரின் நீர் போல அது போக்கில் ஓடிய வண்ணம் தான் உள்ளது.

பஸ் நகர் நோக்கி நகர சேனையூர் ஆற்றின் காட்சிகளும் ஒற்றை நீர்க்காகமும், அந்த அம்பிகாவின் அழகு முகமும் மெல்ல மெல்ல மறையலாயின... அதை அடுத்து ஓடும் பஸ், வேறு பல காட்சிகளையும், பட்சிகளையும் புதிய புதிய உருவங்களுடன் காட்டியவண்ணம் சென்று கொண்டிருந்தது.

சுகுமாரன் அரைக்கதவு அம்பிகாவின் அடுத்த பாகம் (Chapter) என்ன? என எண்ணியவாறு அதே பஸ்சில் பயணம் செய்து கொண்டிருந்தான்.

❍ ❍ ❍



# குரு அரவிந்தன் வாசகர் வட்டம் நடத்திய திறனாய்வுப் போட்டி 2021 முடிவுகள்



**1ஆவது பரிசு:** 25,000/= **(இலங்கை ரூபாய்)** ☞ **நரேஸ் நியூட்டன். த**. கழுபோவிலை, கொழும்பு, இலங்கை

**2ஆவது பரிசு:** 20,000/= **(இலங்கை ரூபாய்)** ☞ **சிவனேஸ் ரஞ்சிதா**. கெக்கிராவ, இலங்கை

**3ஆவது பரிசு:** 15,000/= **(இலங்கை ரூபாய்)** ☞ **முருகேஷ் மு**. வந்தவாசி, தமிழ்நாடு

**4ஆவது பரிசு:** 10,000/= **(இலங்கை ரூபாய்)** ☞ **ஸ்ரீகந்தநேஷன். ஆ. பெ**. யாழ்ப்பாணம், இலங்கை

**5ஆவது பரிசு:** 7,500/= **(இலங்கை ரூபாய்)** ☞ **சுப்ரபாரதிமணியன். ப**. திருப்பூர், தமிழ்நாடு

## 15 பாராட்டுப் பரிசுகள் தலா 5,000/= இலங்கை ரூபாய்கள்

❍**அனுராதா பாக்கியராஜா**. வெள்ளவத்தை, இலங்கை. ❍**முனைவர் சகோ. ஜா. அருள் சுனிலா**. பெரியகுளம், தேனி, தமிழ்நாடு. ❍**மு. இப்றாகீம் பாத்திமா றுஸ்தா**. காத்தான்குடி, இலங்கை. ❍**கிறகறி பஞ்சரத்தினம் வேதநாயகம்**. வார்க்ஷவியர், றக்பி, ஐக்கியஇராச்சியம். ❍**மணி. க**. மேற்கு மாம்பலம், சென்னை- *600 033*. தமிழ்நாடு. ❍**மேகநாதன்**. பெ. போடி நாயக்கனூர், தேனி மாவட்டம், தமிழ்நாடு. ❍**முஹம்மது ஹனிபா முஹம்மது ஷர்பான்**. ஓட்டமாவடி, இலங்கை. ❍**நளாயினி நந்தகுமார்**. மெல்பேர்ன், அவுஸ்ரேலியா. ❍**பூமணி. க**. செஞ்சி தாலுகா, விழுப்புரம், தமிழ்நாடு. ❍**பூர்ணிமா. ச**. நாமக்கல் மாவட்டம், தமிழ்நாடு. ❍**பர்வின் பானு. எஸ்**. தேனாம்பேட்டை, சென்னை, தமிழ்நாடு. ❍**துடுப்பதி ரகுநாதன் டி. எஸ்**. கோய முத்தூர்-*36* தமிழ்நாடு. ❍**சக்திதாசன் கனகசபாபதி**. 4390 VIPPEROD. டென்மார்க். ❍**சரளா முருகையன்**. பென்சினர் காலனி, திருச்சி-*23* தமிழ்நாடு. ❍**தங்கராசா செல்வகுமார்**. குப்பிழான் தெற்கு, யாழ்ப்பாணம், இலங்கை.

## இளையதலைமுறை மாணவ, மாணவிகளுக்கான 10 பாராட்டுப் பரிசுகள் தலா 5000/= இலங்கை ரூபாய்கள்.

❍**அருச்சனா சித்திவினாயகம்**. ரொறன்ரோ கனடா. ❍**தேவரூபா நாகராஜ்**. வடுகப்பட்டி, தமிழ்நாடு. ❍**கிருத்திக்கா. எஸ்**. முனிச்சாலை, மதுரை தமிழ்நாடு. ❍**மோனிஷா நாகராஜ்**. வடுகப்பட்டி, தமிழ்நாடு. ❍**நிறோஜினி வரதராஜன்**. வரணி வடக்கு, இலங்கை. ❍**றுவிங்கா ஸ்ரீ மிசசாகா**, கனடா. ❍**சக்தயா சாம்பவி முகுந்தன்**. ஸ்காபரோ, கனடா. ❍**ஸ்ரீசங்கர் அருநோதன்**. மட்டக்களப்பு, இலங்கை. ❍**திவாணி கந்தசாமி**. தவசிக்குளம். வவுனியா, இலங்கை. ❍**றிசா ஜேசுதாசன்** ரொறன்ரோ, கனடா.

சர்வதேச ரீதியாகக் கனடாவில் இருந்து நடந்த முதலாவது திறனாய்வுப் போட்டி – 2021இல் பங்கு பற்றிய அனைவருக்கும் நன்றி. 14 நாடுகளில் இருந்து தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நூற்றுக்கும் மேற்பட்ட திறனாய்வுக் கட்டுரைகள் வந்திருந்தன. இறுதிச் சுற்றில் **சிந்தனைப்பூக்கள் எஸ். பத்மநாதன், எழுத்தாளர் கே. எஸ். சுதாகர், கவிஞர் சரேஸ் அகணி** ஆகியோர் நடுவர்களாகக் கடமையாற்றினார்கள். நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

பரிசு பெற்றவர்களுக்குக் காலக்கிரமத்தில் பரிசுத்தொகை அனுப்பி வைக்கப்படும். இந்தப் போட்டியை நடத்த அனுமதி தந்த எழுத்தாளர் குரு அரவிந்தன் அண்ணாவிற்கும், நடுவர்களுக்கும், மிகவும் ஆர்வத்தோடு போட்டியில் பங்கு பற்றியவர்களுக்கும் வாசகர்வட்டத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அடுத்த வருடம் இதே போன்ற ஒரு போட்டியில் மீண்டும் சந்திப்போம். தயாராக இருங்கள், நன்றி.

**மேலதிக விபரங்களுக்கு:**

*https://kurunovelstory.blogspot.com/*

*https://canadiantamilsliterature.blogspot.com/*

*http://tamilaram.blogspot.com/*

**சுலோச்சனா அருண்,**

*செயலாளர், குரு அரவிந்தன் வாசகர் வட்டம்., Kuru Aravinthan Fanclub*

❍ ❍ ❍

# கதகளி நடனத்தில் பெண்களின் தாக்கம்





கதகளி நடனம் என்பது ஒரு உன்னதமான இந்திய நடன வடிவமாகும். இது பாரம்பரியமாக ஆண்களால் நிகழ்த்தப்பட்டு வந்தது. நடனக் கலைஞர்கள் வெவ்வேறு பாத்திரங்களில் நடிக்க முகமூடிகளைப் பயன்படுத்துவார்கள். முகபாவமும், கையசைவுகளும் இந்த நடனத்தின் முக்கியமான அம்சங்களாகும். ஒப்பனையும், உடையலங்காரமும் இதனை ஒரு தனித்துவமான நடன வடிவமாக்குகின்றன. முந்நூறு ஆண்டுகளாக இது ஒரு குறிப்பிட்ட உயர் சாதியைச் சேர்ந்த ஆண் உறுப்பினர்களால் மட்டுமே நிகழ்த்தப்பட்டது. 1946ஆம் ஆண்டில் சாதிமுறை சட்டப்பூர்வமாக ஒழிக்கப்படும் வரை மற்றவர்களுக்கு பயிற்சி அளிக்க முடியவில்லை. 1946க்குப் பிறகு, சிறுவர்கள் இந்நடனத்தை கற்க இதற்கென இருக்கும் கல்விக்கூடங்களில் சேர முடிந்தது. ஆனால் சிறுமிகளுக்கான ஒரே வழி தனியே பயிற்சியினை மேற்கொள்வது ஒன்றுதான் வழமையாக இருந்தது.

கேரளத்தின் பாரம்பரிய அரங்க மரபு கதகளி. கதகளியின் பெண்களின் ஆற்றுகை முறைபற்றியதாக அமைகின்றது இக்கட்டுரை.

வரலாற்று ரீதியாக, கதகளி பயிற்சியும் செயல்திறனும் உயர் சாதி இந்து ஆண்களுக்கு மட்டுமே உரித்ததாக இருந்தது. ஆனால் சமீப காலங்களில், கலாமண்டலம் போன்ற நிறுவனங்களில் நடன வடிவம் கற்பிக்கத் தொடங்கியதும், பல்வேறு பின்னணியைச் சேர்ந்த கலைஞர்கள் பயிற்சியைத் தொடங்கினர், மேலும் அவர்கள் தங்கள் அடையாளத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

இன்று, இந்த நூற்றாண்டுகள் பழமையான நடன-நாடகத்தைக் கற்றுக்கொள்ளும் வெளிநாட்டு மாணவர்கள் கூட இருக்கிறார்கள்..

கதகளி - ஒருவீட்டின் சுவர்களுக்குள் பெண்கள் அடைத்து வைக்கப்பட்டிருந்த காலத்தில் தோன்றியது. கதகளியும் அதே நேரத்தில் நடைமுறைக்கு வந்த வேறு சில கலைவடிவங்களும் பெண்களின் பங்களிப்பை அவசியமாகக் கருதவில்லை. இந்தக் கலைகள் அனைத்திலும் பெண் கதாபாத்திரங்களின் பாத்திரங்களை ஆண்கள் செய்திருந்தனர்.

கதகளி எப்போதும் ஒரு ஆண் கலை வடிவமாகக் கருதப்படுகிறதற்குக் காரணம், இது பக்தி இயக்கத்தின் ஒருபகுதியாக உருவானது மட்டுமல்லாது இந்நாடகங்கள் ஒரு இளவரசனால் எழுதியதாலும், அதனை ராஜ்யத்தின் வீரர்களால் நிகழ்த்தப்பட்டதாக நம்பப்படுகிறதாலும் ஆகும். அவ்வீரர்கள் தற்காப்புக் கலையான களரியை நன்கு பயிற்றப் பட்டவர்களாகியதால் தங்கள் அடிச்சுவடுகளைப் பின்பற்றிய குழுக்களுக்கும் தமது பயிற்சிப் பணியின் ஒருபகுதியை கடுமையான வகையில் பயிற்சிகளைச் செயல்படுத்தினர்.



கலாநிதி
சண்முக சர்மா
ஜெயப்பிரகாஷ்

பின்னர் கால்களை நீட்டி மடக்கி பயன்படுத்தி உடல் எண்ணெய் தேய்த்து மசாஜ் செய்யும் பயிற்சியைத் தொடங்கினர். கலையை ஆராய்வதில் பெண்கள் வரவேற்கப்படாததற்கு இந்தநடைமுறை ஒரு முக்கிய காரணம் என்று நம்பப்படுகிறது. கதகளி ஒருகலையாக தனது அடையாளத்தை வெளிப்படுத்திய ஆண்டுகளில் பெண்கள் வரவேற்கப் படவில்லை என்றாலும், பெண் கதாபாத்திரம் அதன் ஆற்றுகையின் ஒருபகுதியாக இருப்பதை

**கதகளி எப்போதும் ஒரு ஆண் கலை வடிவமாகக் கருதப்படுகிறதற்குக் காரணம், இது பக்தி இயக்கத்தின் ஒருபகுதியாக உருவானது மட்டுமல்லாது இந்நாடகங்கள் ஒரு இளவரசனால் எழுதியதாலும், அதனை ராஜ்யத்தின் வீரர்களால் நிகழ்த்தப்பட்டதாக நம்பப்படுகிறதாலும் ஆகும்**

தடுக்க முடியவில்லை என்பதை வரலாறு நிரூபிக்கிறது. பாரம்பரியமாக, நடிகர்கள் - நடனக் கலைஞர்களாக ஆண்கள் மட்டுமே பயிற்சி பெற்றனர், எனவே அனைத்து பெண் கதாபாத்திரங்களும் ஆண்களால் நடிக்கப் பட்டன.

கதகளி நிகழ்த்துகையில் பங்கேற்ற முதல் ஆவணப்படுத்தப்பட்ட பெண், திரிபுனிதுராவைச் சேர்ந்த ***கார்த்தியாயினி*** ஆவார். அப்போதிருந்து அவர்களின் நடிப்பால் ஈர்க்கப்பட்ட குறிப் பிடத்தக்க பலபெண்கள் இந்நிகழ்த்துகைத் துறைக்குள் உள் ஈர்க்கப்பட்டனர்.

ஆண் ஆதிக்கம் செலுத்தும் இந்த ஆற்றுகை மரபிற்குள் ***குஞ்சுமல்லு அம்மா, தீயதுத்து மாதவி, வைரேலி மீனாட்சி அம்மா, வஞ்சியூர் கார்த்தாயணி அம்மா*** போன்ற ஒருசில பெண்கள் இருந்தனர். இருப்பினும், அவர்களில் பெரும் பாலோர் திருமணமானவுடன் நிகழ்ச்சியை கைவிட வேண்டியிருந்தது.

அவர்களில் பெரும்பாலோர் பெண் கதாபாத்திரங்களையும் கிருஷ்ணா போன்ற ஆண் கதாபாத்திரங்களையும் கையாண்டனர். மேடையில் அவர்கள் தொடர்ந்து இருப்பதற்கு ஒரு பெரியதடையாக இருந்தது திருமணம். கிட்டத்தட்ட அனைவரும் திருமணமானதும் கலையைவிட்டு வெளியேறினர்.

20ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் பல பெண்கள் கதகளி எனும் அரங்க மொழியைக் கற்கவந்தனர், ஆனால் அவர்களால் கதகளி ஆற்றுகையின் பிரதான நிலையை அடைய முடியவில்லை.

முரண்பாடுகளை எதிர்த்துப் போராடி கதகளியின் முக்கிய ஆளுமையாகவும் நிகழ்த்து கலைஞராகவும் மாறிய ஒருபெண் ***சவறைபாருகுட்டி அம்மா*** ஆவார். 52 ஆண்டுகளுக்கு மேலாக அவர் தனது பணியை தொடர்ந்த வண்ணம் இருக்கின்றார். அவர் தடைகளைத் தாண்டி ஒரு தொழில்முறை கதகளி கலை ஞரானார். பாருகுட்டி அதிலிருந்து ஒரு வாழ்க் கையை உருவாக்க போராடினார், ஆனால் அது கலைமீதான அவரது அன்பைப் பாதிக்க வில்லை, தொடர்ந்து மேடையில் நிகழ்த்து வதன் மூலம் வரலாற்றை உருவாக்கினார்.

சவறை பாருகுட்டி அம்மா (1943 - 2019) ஆண்கள் மட்டுமே ஆடிவந்த கதகளியில் புகழ்பெற்ற ஒரு சில பெண்களில் இவரும் ஒருவராக இருந்தார். கேரளாவின் பாரம்பரியக் கலைக்கு இவர் செய்த சேவைகளுக்காக, கேரள கலாமண்டலமும், கேரள சங்கீத நாடக அகாதமியும் தங்களது விருதுகளை வழங்கி கௌரவித்தன.

சமூகத்தில் செல்வந்தர்கள் மற்றும் சக்திவாய்ந்த முக்கியஸ்தர்கள் காட்டிய ஆர்வத்தின் காரணமாக கதகளி எனும் ஆற்றுகை மரபு பிரபலமடைந்தது. நம்பூதிரி குடும்பங்களும் செவ்வியல் கலையை வளப்படுத்துவதில் குறிப்பிடத்தக்க பங்கைக் வகித்தனர். கதகளி ஆற்றுகைக் குழுவை உருவாக்கி செயற்படுத்துவது என்பது அந்தநாட்களில் பெருமைக்குரிய விஷயமாக இருந்தது. மக்கள் மத்தியில் குறைந்துவரும் ஆர்வம் காரணமாக பாரம்பரிய கலை வடிவம் பாதிப்புக்குளாகின. அழிந்து வரும் கலைகளைப் பாதுகாக்கவும் பிரச்சாரம் செய்யவும் நிறுவனங்கள் உருவாக்கப்பட்டன. வெவ்வேறு கலைப் பள்ளிகளைச் சேர்ந்த பல கலைஞர்களை ஒரேகுடையின் கீழ் கொண்டுவர இது உதவியது.

இருப்பினும், பாலின அடிப்படையில் நிறுவனங்களில் அனுமதி மறுக்கப்பட்ட பெண்கள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். பலபெண்கள் கதகளியால் ஈர்க்கப்பட்டு அதைக் கற்றுக் கொண்டாலும், மேடையில் நிகழ்த்த அவர்களுக்கு வாய்ப்புக்கள் வழங் கப்படாத நிலை இருந்தது. இதன் விளைவால் கேரளாவின் பல்வேறு பகுதிகளில் பெண்கள் மட்டுமே கதகளியை நிகழ்த்தும் குழுக்கள் உருவாகின. கதகளி நாடகங்களை நடத்துவதில் அவர்கள் வெற்றிபெற்று கதகளி ஆற்றுகையை நிகழ்த்துவதில் ஆண்களுக்கு இணையான இடத்தை அவர்கள் உருவாக்கினர்.



ஒரு கதகளி கலைஞர்



கார்த்தியாயினி



சவறை பாருகுட்டி அம்மா

கேரளாவில் பெண்கள் கதகளி குழு முதன்முதலில் 1962இல் உருவாக்கப்பட்டது. மிகவும் பிரபலமான அனைத்து பெண்கள் குழுக்களில் ஒன்று **திருபூணித்துறை கதகளி கேந்திர பெண்கள் குழு** ஆகும். திருபூணித்துறை கதகளி கேந்திர பெண்கள் குழு என்பது ஆண்கள் மட்டுமே ஆடிவந்த கதகளியின் 300 வருட பாரம்பரியத்தை மீறி 1975ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. மிகவும் புகழ்பெற்ற கதகளி கலைஞர்களில் ஒருவரான கலாமண்டலம் **கிருட்டிணன் நாயர்** உள்ளிட்ட முன்னணி நிபுணர்களால் இவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. ஒரு குழு எட்டு மாதங்கள் கதகளியை படித்தது. பெண்களுக்கான அதிகாரம் அளிக்கும் இவர்களின் இப்பணி களுக்காக இந்திய அரசாங்கத்தால் 'நாரி சக்தி' விருது வழங்கி அங்கீகரித்தது.

இந்த பெண்கள், பெண் மற்றும் ஆண் பாத்திரங்களை ஏற்று ஆற்றுகை செய்தார்கள். நிச்சயமாக, பாரம்பரிய அட்டகாதாக்கள் (கதைகள்) அனைத்தும் ஆண் கதாபாத்திரங்களை மையமாகக் கொண்டவை, எனவே பல கலைஞர்கள் புதிய பெண் கதாபாத்திரங்களை ஆராயக்கூடிய புதிய அட்டகாதங்களை உருவாக்க வேண்டிய அவசியம் இருப்பதாக உணர்ந்தார்கள்.

இருப்பினும், இப்போது ஆண் கதகளி கலைஞர்களுடன் முக்கிய நீரோட்டத்தில் ஒன்றிணைவதில் வெற்றிபெற்றுள்ளனர். பெண் களைத் தடுத்துநிறுத்த பலசவால்கள் உள்ளன. முதலாவது கலைவிமர்சகர்களுடைய எதிர்ப்பு. அவர்களால் ஏற்றுக்கொள்ளப்படுவது என்பது அனைவருக்கும் கடினமான விடயமாகும். கதகளி கலைஞர்கள் எப்போதுமே திறந்த மனதுடன் மாற்றங்களை ஏற்றுக் கொண்ட வர்களாக இருக்கிறார்கள், மேலும் தங்கள் மாணவர்களுக்கு நிகழ்ச்சிகளைக் கற்பிக்கவும் ஊக்குவிக்கவும் தயாராக இருக்கிறார்கள்.

கடந்தசில ஆண்டுகளாக கதகளி ஆற்றுகையில் பெண்கள் ஈடுபடுவதில் ஒரு வளர்ச்சிப் போக்குக் காணப்படுகிறது. உடல் ரீதியாக கடினமாகக் கருதப்படும் நாடகங் களை நிகழ்த்த அவர்கள் முயற்சியை எடுத்து வருகின்றனர். கதகளி பெண் கலைஞர்கள் தாம் முயற்சி செய்வதிலிருந்து தடுத்து நிறுத்த முடியாது என்பதை அவர்கள் நிரூபித் துள்ளனர். இது விமர்சகர்களிடமிருந்து நேர் மறையான கண்ணோட்டத்தையும் அவர்கள் பால் ஏற்படுத்தியுள்ளது. புதிய தலைமுறைப் பெண்கள் திறமையான கலைஞர்களாக உருவாகி வருகிறார்கள்.

பெண் கலைஞர்கள் தங்கள் கலை சுதந்திரத்தில் சமரசம் செய்ய விரும்பவில்லை. கலையின் மத்திய புள்ளிக்குச் செல்ல அவர்கள் தங்கள் பாதையில் வரும் கஷ் டங்களை அனுபவிக்கத் தயாராக உள்ள னர். அலங்காரம் மற்றும் உடையை அணிந்த பின்னர், அவர்கள் ஆண் சகாக்களை விட குறைவானவர்கள் இல்லை என்பதை நிரூபிக்க தயாராக உள்ளனர். இது வரவேற்கத்தக்க மாற்றமாகும், மேலும் அவற்றை ஏற்றுக்கொள்ளவும் பாராட்டவும் பார்வையாளர்களை வற்புறுத்தியுள்ளனர்.

❍ ❍ ❍

# சுந்தரம் சுவைப்போம்



**[08]**

**- B. சந்திரன் ஐயர்**

***சொல்லின் செல்வன்*** என்கின்ற சிறப்பினை ஹனுமானுக்கு கம்பன் வழங்கியமை பலரும் அறிந்ததே. ஹனுமானின் உரையாடல் நுட்பத்தை இராமாயணத்தின் பல இடங் களிலே கண்டுகொள்ளலாம். ***வால்மீகி***, 'காணப்பட்டாள் சீதை' (த்ருஷ்டா சீதை) என்று கூறியதை **கம்பன்** 'கண்டேன் சீதையை' என்று பாடியுள்ளான். ஹனுமானுடைய இந்த வார்த்தைத் தொடரின் செறிவு மற்றும் புலமை பற்றி காலங்காலமாக அறிஞர்கள் மத்தியிலே வியக்கப்பெற்று வருவதை நாம் அறிவோம்.

ஹனுமானை சொல்லின் செல்வன் என்று கூறும்போது **வள்ளுவர்** கூறியுள்ள,

**சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான்** அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது (குறள் 647)

என்ற குறள் எமது மனதிலே முன்நிற்கும். இங்கு, தான் கருதியவற்றை நன்கு சொல்ல வல்லவன், சோர்வு அற்றவன், அஞ்சாதவன் என்று வள்ளுவர் கூறிய பண்புகளுக்கு ஹனுமான் இலக்கணமாக விளங்குவதைக் காணலாம்.

ஹனுமானின் சுந்தரத்தன்மையில் எல்லை யற்ற விருப்பம் கொண்டோர் அனேகர். அருணகிரிநாதரும் இந்தப் பட்டியலில் சேர்ந்து கொள்கிறார்...!

***அருணகிரிநாதர்*** தாம் பாடிய திருப்புகழிலே இராமாயண விடயங்களைப் பல இடங்களிலே பாடியுள்ளார். திருப்புகழில் காணப்பெறும் இந்த இராமாயணப் பகுதிகளைத் தொகுத்து ***அருணகிரி இராமாயணம்*** என்று பாராயணம் செய்வோரும் உள்ர்.

உதாரணத்துக்கு அருணகிரிநாதர் இரா மனை அழைக்கும் அழகினை இங்கு அனுப விப்போம்.

எந்தை வருக ரகுநாயக வருக
மைந்த வருக மகனே இனி வருக
என்கண் வருக எனது ஆருயிர் வருக – அபிராம
இங்கு வருக அரசே வருக முலை
உண்க வருக மலர் சூடிட வருக என்று
பரிவினொடு கோசலை புகல – வரு மாயன்
(தொந்திசரிய – திருப்புகழ்)

சரி, அருணகிரிநாதர் ஆஞ்சனேயனைப் பற்றி என்ன கூறியுள்ளார்...?

குடக்குச் சிலதூதர் தேடுக
வடக்குச் சிலதூதர் நாடுக
குணக்குச் சிலதூதர் தேடுக – என மேவி
**குறிப்பிற் குறிகாணும் மாருதி**
இனித்தெற்கு ஒருதூது போவது
குறிப்பிற் குறிபோன போதிலும் – வரலாமோ
(உடுக்கத்துகில் – திருப்புகழ்)

ஹனுமான் சொல்லின் செல்வன் மாத்திரம் அல்லன். அவன் **குறிப்பினால் குறிப்பை உணருபவன்** என்று அருணகிரிநாதர் அனுபவிக்கின்றார். இந்த வரிகளை அருணகிரிநாதர் ***ஈழத்து கதிர்காம*** முருகனின்மீது திருப்புகழ் பாடும் போது பாடியுள்ளமை அதிநுட்பம். ஈழத்துக் கதிர்காம முருகனைப் பாடும்போது, ஈழத்துக்கு ஹனுமான் வந்த நிகழ்வையும் இணைத்துப் பாடுகின்றார்.

அருணகிரிநாதர், ஹனுமானை ***குறிப்புணர்ந் தவன்*** என்று கூறுவதற்கு காரணம் என்ன? ஒருசிலவற்றை இங்கு கோடிட்டுக் காட்டுவோம்...

இராம - லக்ஷ்மணரை முதன்முதலாக சந்தித்து அவர்களை அழைத்துக்கொண்டு சுக்ரீவனிடம் ஹனுமான் வருகின்றான். சுக்ரீவனோ வாலியிடம் இருக்கும் மிகுந்த பயம் காரணமாக ஒளிந்து வாழ்கின்றான். இராம - லக்ஷ்மணரோ ஆயுதங்களுடன் இருக்கின்றனர். அவர்களை அழைத்துச் செல்லும்போது சுக்ரீவன் பயப்படக்கூடாது என்பதற்காக அவர்கள் இருவரையும் தனது தோள்களிலே ஹனுமான் ஏற்றிச் செல்கின் றான். இவ்வாறு தோள்களில் சுமந்து வரு வதை தூரத்தில் இருந்து கண்டதுமே சுக்ரீவ னின் பயம் தெளிகின்றது. சுக்ரீவனின் குறிப் புணர்ந்து ஹனுமான் நடக்கின்றான்.

இராம - லக்ஷ்மணரை வரவேற்று மகிழ்ச்சிகொண்ட சுக்ரீவன், நன்கு பூத்திருந்த




சால மரத்தின் (குங்கிலிய மரத்தின்) ஒரு கிளையை உடைத்து இராமனுக்கு ஆசனமாகப் போடுகின்றான். இராமன் அதிலே அமர்கின்றான். இதைக்கூறிய **வால்மீகி**, அடுத்ததாக ஹனுமான் நன்கு பூத்திருந்த **சந்தன மரத்தின்** ஒருகிளையை உடைத்து லக்ஷ்மணனுக்கு ஆசனமாகப் போட்டான் என்றார்.

சுக்ரீவன், இராமனுக்காக கிளையை எடுத்த சால மரத்திலேயே பிறிதொரு கிளையை உடைத்து, தம்பி லக்ஷ்மணனுக்கும் ஹனுமான் போட்டிருக்கலாமே... ஏன் சந்தன மரத்தின் கிளையை உடைத்து அதை லக்ஷ்மணனுக்கு ஆசனமாகப் போட்டான்?

இங்குதான் நுட்பம் உள்ளது. முதல் சந்திப்பிலேயே லக்ஷ்மணன் கோபக்காரன் என்பதைக் குறிப்புகளால் ஹனுமான் உணர்ந்துவிட்டான். சுக்ரீவன், இராமனுக்கு மாத்திரம் ஆசனம் போட்டான். அதனால் லக்ஷ்மணன் கோபம்கொண்டு விடுவானோ என்று எண்ணிய ஹனுமான், அவனைச் **சாந்தப் படுத்த குளிர்மையான சந்தன மரக்கிளையை** உடைத்து அவனுக்கு ஆசனமாகப் போட்டான் என்று வால்மீகி நுட்பமாகப் பதிவுசெய்துள்ளார்.

இதேபோன்று வாலி வதத்தின் பின்னரும் சீதையைத் தேடுவதற்கு முயற்சிகள் எடுக்காது மறந்திருந்த சுக்ரீவனைச் சந்திப்பதற்கு கோபமாக லக்ஷ்மணன் வருவான். அப்போது நடுநடுங்கிய சுக்ரீவன், என்ன செய்வது என்று அறியாது தவித்து நிற்பான். அந்நிலைகண்டு குறிப்பறிந்த ஹனுமான், சுக்ரீவனை நோக்கி இந்தச் சந்தர்ப்பத்தில் லக்ஷ்மணனை வணக்குவதைத் தவிர பிற வழி இல்லை என்று ஆலோசனை செய்வான். சுக்ரீவனும் அவ்வாறே செய்து லக்ஷ்மணனின் கோபத்துக்கு ஆளாகாமல் தப்பிப்பான்.

அசோகவனத்திலே அரக்கிகளினாலும், மாயங்கள் செய்பவர்களாலும் சீதை சூழப்பெற்று சிறையிலே உள்ளாள். அவளை மரத்திலிருந்தவாறு ஹனுமான் காண்கின்றான். தான், 'திடுதிப்'பென்று சீதையின் முன்னே வானர வடிவத்திலே போய்நின்றால், அவளுக்கு சந்தேகம் வரும். அதனை இராவணனின் மாயவேலையாக அவள் எண்ணலாம். எவ்வாறு சீதைக்கு நம்பிக்கை வரவைக்கலாம் என்று ஹனுமான் சிந்திக்கின்றான். மரத்தின் மேலே இருந்தவாறே இராமனின் வரலாறை சீதையின் செவிகளில் விழத்தக்கதாக கூறத் தொடங்குகின்றான். அது சீதையின் செவிகளில் விழுந்து அவளுக்கு நம்பிக்கை ஏற்படுகின்றது.

இவ்வாறாக குறிப்பறிந்து ஹனுமான் செயல்படுவதை இராமாயணத்திலே பல இடங்களிலே நாம் காணமுடியும். இதனாலே அருணகிரிநாதர் **குறிப்பினால் குறிப்பை உணருபவன்** என்று ஹனுமானைப் போற்றுகின்றார்.

அருணகிரிநாதர் இராமாயணத்தைத் தமது திருப்புகழிலே ஆங்காங்கு பாடியிருப்பது ஒருபுறமிருக்க, **பாலபாரதி** என்கிற புலவர் **இராமஜெயத் திருப்புகழ்** என்கிற தனிநூலையே சந்தப் பாடல்களிலே பாடியுள்ளார். **இராம ஐயங்கார்** என்கிற இயற்பெயரைக் கொண்ட இவர் 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இந்த நூலின் சிறப்புத் தன்மையால் இதனை **இராமாயணத் திருப்புகழ்** என்றும் அழைப்பர். பிற்காலத்திலே **அருணாசலக் கவிராயர்**, கம்பராமாயணத்தையும் இராமாயணத் திருப்புகழையும் ஆதாரமாக வைத்துக் கொண்டே தன்னுடைய **இராம நாடக**த்தைப் பாடியுள்ளார் என்று அறியமுடிகின்றது.

இராமன் விஸ்வாமித்திரரின் வேள்வியைக் காக்கும் சந்தர்ப்பத்தைக் கூறும் பால பாரதியின் வரிகளை இங்கு காட்டுவோம்.

காதிப யந்த மைந்தன்
வேள்வி தொடங்க அன்று
காதுதல் விஞ்சு தம்பி – அவனோடும்
கார்முக முந்தெ ரிந்த
வார்கணை யுங்கை கொண்டு
காவல் புரிந்து நின்ற – பெருமாளே

(இராமாயணத் திருப்புகழ் –பாலபாரதி)

திருப்புகழிலமைந்துள்ள சந்தங்களில் இராம கதையைச் சுவைப்பது தனியனுபவம்...

**(சுவைப்போம்...)**

❍ ❍ ❍

# டியானா - லோகன்



இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்
லண்டன்

“எனது அப்பா மிகவும் நல்லவர், மற்ற அப்பாக்கள் மாதிரியில்லாமல் என்னைப் புரிந்து கொள்ள முயற்சிக்கிறார் என்றுதான் இதுவரையும் நினைத்திருந்தேன்” டியானா தனக்குள் சொல்லிக் கொள்கிறாள். அவளின் தகப்பன் மிஸ்டர் டேவிட் மாஸ்டன் ஒரு வழக்கறிஞர். மனித உரிமைகளுக்காக வாதாடுவதில் பெயர் பெற்றவர். மற்றவர்களை மதிக்கத் தெரிந்தவர்.

தனது மகளில் மிகவும் அன்பு வைத்திருக்கும் தகப்பனின் மகளான டியானாவின் சினேகித சினேகிதிகள் அவளை மிகவும் அதிர்ஸ்டசாலிகளாக நினைக்கிறார்கள்.

அவள் பல்கலைக்கழகப் படிப்பைத் தொடங்க முதல் பத்தொன்பது வயதுவரை அப்பா அம்மா அணைப்பில் வாழ்ந்தவள். டியானா, பல்கலைக்கழக விடுதியில் தங்கிப் படிப்பதாகச் சொன்னபோது டியானாவின் தாயும் தகப்பனும் தடுக்கவில்லை. பல்கலைக்கழகத்திலிருந்து, முப்பது நிமிட புகையிரதப் பயண தூரத்தில் அவர்களின் வீடு இருக்கிறது. ஆனால் அவள் வீட்டிலிருந்து ஒவ்வொரு நாளும் பிரயாணம் செய்யாமல், தனது புதிய சினேகித சினேகிதிகளுடன் ஒன்றாக வாழ்வதை அவர்கள் வரவேற்றார்கள்.

“பல்கலைக்கழகம் செல்வது என்பது எதிர்காலத்திற்குரிய படிப்பை மட்டுமல்ல, உலகத்தின் பல பாகங்களிலுமிருந்து வரும் பன்முகத்தன்மையான மாணவ மாணவர்களுடன் சேர்ந்து பழகும் அனுபவங்களும் எதிர்காலத்தில் நாங்கள் சந்திக்கும் பல தருணங்களில் உதவும்” தன்னைப் புரிந்து கொண்ட தந்தையார் சொன்ன விளக்கத்தை டியானா சந்தோசத்துடன் ஏற்றுக் கொண்டாள்.

ஆனால் நேற்று அவர், அவளுக்குத் தந்த அதிர்ச்சியை அவளால் தாங்கமுடியாதிருக்கிறது. அந்த அதிர்ச்சியிலிருந்து மீண்டு அவளின் அன்பன் லோகனின், காதல்பொங்கும் தழுவலுக்காக, அவள் இப்போது பல்கலைக்கழகத்திற்குப் போய்க்கொண்டிருக்கிறாள். மேற்கு லண்டனை ஊட றுத்துக் கொண்டு கிழக்கு லண்டனிலிருக்கும் பல்கலைக்கழகத்தை நோக்கிப் பாதாள ட்ரெயின் இருளைத் துளாவிக்கொண்டு விரைகிறது.

இன்று, இருகிழமை விடுமுறைக்குப் பின் அவளின் அன்பனான லோகனின் அழகிய புன்சிரிப்பை, அவனின் அணைப்பை எதிர்பார்க்கிறாள். ஆனால் நேற்று அவன், டியானாவின் வீட்டுக்குச் சமயற்காரனாக வந்த அதிர்ச்சி அவளை இன்னும் உலுக்கிக் கொண் டிருக்கிறது. லோகன், பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டு, தனது பகுதிநேர வேலையாக ஏதோ ஒரு றெஸ்டராண்டில்



வேலை செய்கிறானா? எப்படித் திடீரென்று தங்கள் வீட்டுக்குச் சமயல்காரனாக நேற்று வந்தான்? அதுவும் அவளுக்குத் தெரியாது.

பல்கலைக்கழகம் சென்ற ஒருவருட இடைவெளியில், டியானா, "வெஜிடேரியனாக" உருவெடுத்ததன் பின்னணி லோகநாதன் என்ற தமிழ் மாணவன் என்று அவளின் தந்தைக்குத் தெரிந்திருக்க இடமில்லை.

பல்கலைக்கழக ஆரம்ப நாட்கள் பல துறைமாணவர்களும் சாப்பாட்டு ஹாலில் சந்தித்துக் கொண்டபோது, லோகன் மாமிசமற்ற உணவுகளைத் தட்டில் நிரப்பிக் கொள்வான்.

அப்போது அவனைப் பற்றி அவளுக்கு அவ்வளவாகத் தெரியாது. அவள் பையோலஜி படிக்கிறாள். வைரஸையும் பக்டீரியாக்கள் பற்றியும் நிறைய ஆய்வுகள் செய்ய ஆசைப் படுபவள்.

மருத்துவத்துறை மாணவனான லோகன், இறந்த மனிதரின் உடலை வெட்டிப் பிரித்து, உதிரத்தை வகைப்படுத்தி, நரம்புகளை நார்களாகப் பார்த்து, தசையைத் தடவித் தனது படிப்பைத் தொடர்பவன். அதனால் அவன் மிருக உணவை விரும்பாமல் விட்டிருக்கலாம் என்று அவள் நினைத்தாள்.

அவர்களின் உறவு நெருங்கியபோதுதான் ஏன் வெஜிடேரியனாக மாறினான் என்ற கதையைச் சொன்னான்.

லோகன் எப்போதும் அம்மாவின் சமையலை விரும்புபவன். காலக்கிரமத்தில, அவனின் தாய் ஏன் சைவ உணவை விரும்புகிறாள் என்ற காரணம் தெரியாமலே சைவ உணவுடன் இணைந்தான். ஆனால் தனக்கு அசைவம் உண்பவர்களில் அருவருப்போ, வெறுப்போ கிடையாது என்றான்.

"ஆதி மனிதர்கள் அத்தனை பேரும் மிருகத்தை வேட்டையாடி வாழ்ந்தவர்கள் தானே"? என்று சிரித்தபடி, டியானாவுக்கு வியாக்கியானம் சொல்வான்.

கடந்த இருவருடங்களாக, பல்கலைக் கழகத்தில் தனது சகமாணவர்களுடன் தனது பிறந்த தினத்தைக் கொண்டாடியிருக்கிறாள். அதற்குக் காரணம், அவளது பிறந்த தினம், வாரநாளில் வந்ததும், அன்று பின்னேரம் மாணவர் விடுதியில் சினேகிதர்களுடன் ஒன்று சேர்ந்து கொண்டாடுவார்கள்.

இந்த வருடம், அவளது இருபத்தோராவது பிறந்த தினத்தை, உற்றார் உறவினருடன் கொண்டாடவேண்டும் என்று அவளின் தகப்பன் மிஸ்டர் மாஸ்டன் சொன்னபோது அவள் மறுதலிக்கவில்லை.,

அவளது முக்கியமான இருபத்தியோராவது வயதை லோகனுடன் செலவழிக்கவில்லை என்ற துயர் உணர்வைப் பெற்றோருக்காக மறைத்துவைத்தாள். அடுத்த பிறந்த தினக் கொண்டாட்டத்திற்கு அவள் பல்கலைக்கழகத்தை விட்டுப் போய் விடுவாள். அதனால், தனது கடைசி வருடப் பிறந்த தினவிழாவை லோகனுடன் "தனியாகக்" கொண்டாடும் திட்டம் தகப்பனின் வேண்டுகோளால் தவிடுபொடியானது.

அவர்கள் வீட்டில் அவளது பிறந்த தின விழாவுக்கு சொந்தக்காரருக்கு அழைப்பு விடுத்த அவர், அவளுக்குப் பிடித்த சைவ உணவை எல்லோருக்கும் பரிமாற, ஒரு இந்தியக் கடையிலிருந்து விசேடமாகத் தயாராக்குவதாகவும் சொன்னார்.

நேற்று அவளின் பிறந்ததின வைபவத்திற்கு இந்தியக் கடையிலிருந்து சிலர் வந்து உபசரிப்பார்கள் என்றும் சொன்னார். ஆனால், இந்தியக் கடையிலிருந்து வந்த உபசரிப்பாளர்களில் ஒருத்தனாக லோகன் வருவான் என்று நினைக்கவில்லை. இந்தியக் கடையிலிருந்து தயாரித்துக் கொண்டு வந்த உணவுகளை, டியானாவின் வீட்டில் சூடாக்கி விருந்தினர்களுக்கு அவர்கள் பகிர்வார்கள் என்றுதான் அவள் தந்தை சொல்லியிருந்தார்.

நேற்று, அவள் வீட்டுக் கதவு மணியடித்ததும் அவள் கதவைத்திறந்ததும் லோகனைக் கண்டதும் திணறிவிட்டாள். அவன் இங்கு என்ன செய்கிறான்.? அவள் வாய் திறக்கமுதல், அவளின் தகப்பன் வந்து வந்திருந்த இந்திய சமயற்காரக் கூட்டத்தை வரவேற்றார்.

"இவள்தான் எனது மகள் டியானா. இவளுக்கு இன்று இருபத்தியோராவது பிறந்ததினம். எனது மகளுக்காகத்தான் இந்த ஏற்பாடே நடக்கிறது." மகளை அணைத்துக் கொண்டு மிஸ்டர் சொல்லிக் கொண்டிருக்கும்போது, டியானா லோகனின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள். அவன் அவளை நேரே பார்க்காமல் அவளின் தந்தையின் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்தான்.

இந்தியக் கடையிலிருந்து வந்த உணவுகள் டியானாவின் பிறந்த தினத்தைக் கொண்டாட வந்த உற்றார் உறவினர்களுக்குப் பரிமாறப்



**இதுவரை அவளின் காதல் பற்றி அவளின் தாய் தகப்பனுக்கு அவள் சொல்லியதில்லை. தனது இருபத்தியோராவது பிறந்த தினத்தின் பின் சொல்வதாகவிருந்தாள். ஆனால் லோகன் சாப்பாட்டுத் தட்டுகளுடன் வந்தபோது குழம்பி விட்டாள்.**

பட்டன. அவர்களில் ஓரிருவர், டியானாவின் தாய்வழியினர், ஒரு நாளும் இந்தியச் சாப்பாட்டைத் தெரியாத ஆங்கிலேயர்கள்.

"டியானாவைப் போலவே அவளின் அப்பா டேவிட்டுக்கும் இந்தியச் சாப்பாடு பிடிக்கும்" டியானாவின் தகப்பனின் சொந்தக்காரர் ஒருத்தர், டியானாவின் உறவினர்களுக்குச் சொன்னார்.

மிஸ்டர் டேவிட் மாஸ்டன் தனது மகளைப் பாசத்துடன் பார்த்துக் கொண்டு, "எங்கள் பழைய பரம்பரை இந்தியாவுடன் தொடர் புள்ளவர்கள்" என்றார்.

"ஓ, அப்படியா, காலனித்துவ நிர்வாகி களா"?

டியானாவின் மாமா ஒருத்தர், மிகவும் முற்போக்குவாதி கிண்டலாகத் தன் மைத்துனரைக் கேட்டார்.

"ம்ம்." டேவிட் மாஸ்டன், அதிகம் சொல லாமல் தனது மகளை அன்புடன் பார்த்தபடி "ம்" கொட்டினார். அவளுக்குத் தனது தந்தை தன்னில் வைத்திருக்கும் பாசத்திற்கு எல்லையில்லை என்று தெரியும்.

டியானா, சைவம் உண்ணத் தொடங் கிய காலத்தில் எப்போதோ ஒரு நாள், அவர் தனது, தாய்வழி மூதாதையர் இந்தி யாவுடன் தொடர்புடையவர்கள் என்று சொல்லியிருக்கிறார்.

டியானாவுக்குத் தனது தந்தையின் பாட்டியைத் தெரியும். டியானாவுக்குப் பெயர் வைத்தவளே அந்தப் பாட்டி ஜேன். தனது தகப்பன் ஜேம்ஸ், டியானாவின் தந்தையான பாட்டியின் பேரன் டேவிட் மாஸ்டனாகப் பிறந்திருப்பதாகப் பல தடவைகள் டியானா வின் பாட்டி பாசத்துடன் சொல்வாள்.

டியானாவுக்குப் பத்து வயதாக விருக்கும் போது அந்தப் பாட்டி ஜேன் இறந்தபோது அவளின் தந்தை குழந்தைமாதிரி அழுதார். அந்தப் பாட்டியின் பரம்பரைதான் இந்தி யாவுடன் தொடர்புள்ளவர்களா? அப்படி எல்லாம் கேள்வி கேட்கும் சந்தர்ப்பம், டியானாவுக்கு இதுவரை வரவில்லை.

அந்த ஞாபகங்களுக்காகவா, இந்திய உணவை வீட்டுக்கே அழைத்தார்? அவளின் மனதில் பல கேள்விகள் தொடர்ந்து கொண் டிருந்தன. நேற்று முழுக்க வீட்டில் ஆரவார மாகவிருந்ததால் லோகனுக்குப் போன்பண்ணி அவனிடம் விளக்கம் கேட்க முடியவில்லை. அத்துடன் தனது அதிர்ச்சியை அவனிடம் நேரே கேட்கவேண்டுமென்று துடித்தாள்.

டியானாவின் வரவிற்காக லோகன் காத்திருந்தான். அவன் அவளையணைத்து "ஹப்பி பேர்த்டேய் டார்லிங்" என்று சொல்லி முடிக்கமுதல், "ஏன் நேற்று சமயற்காரனாக வீட்டுக் வந்தாய்?" என்று அதிர்ந்தாள்.

அவன் அவளின் கோபத்திற்குக் காரணம் தெரியாமல் புருவங்களை உயர்த்தினான். "ஹேய், என்ன ஆரவாரப் படுகிறாய்? எனது நண்பனின் தந்தை றெஸ்ட்ராரண்ட வைத் திருக்கிறார். சிலவேளைகளில் அவரின் கஸ்டமர்ஸ் வீட்டுக்குச் சாப்பாடுகளைக் கொண்டு வந்து பரிமாறச் சொல்வார்கள். நேற்று ரெஸ்ட்ராண்டில் சரியான பிஸி, அத்துடன் ஒருசிலர் வேலைக்கும் வரவில்லை. எனது நண்பன் சாப்பாடு பரிமாறுவர்களுடன் தானும் உதவிக்குச் செல்வதாகச் சொன்ன போது நானும் சரி என்றேன். ஆனால் உனது வீட்டுக்குத்தான் நான் வருகிறேன் என்று தெரியாது".

அவன் விளக்கியபோது அவள் இன்னும் கலங்கிவிட்டாள். இவன் ரெஸ்ட்ராரண்டில் பகுதிநேர வேலை செய்கிறானா?. அவள் மேலே கேள்விகள் கேட்கவில்லை. அதற்கு அவளுக்குத் துணிவில்லை. அவன் தனது வகுப்புக்கு ஓடவேண்டும் என்பதால் இருவரும் அதிகம் பேசிக் கொள்ளவில்லை.

ஐரோப்பா நாடுகளிலும் இங்கிலாந்திலும், யுனிவர்சிட்டி மாணவர்கள், வாரவிடுமுறையில் பகுதிநேர வேலை செய்வது மிகமிகச் சாதாரணமான வியடம். லண்டன், பாரிஸ் போன்ற பல நகரங்களிலும் அழகாகச்

சிரித்துக்கொண்டு ஆடி ஓடி வேலை செய்யும் இளம் கூட்டத்தில் கணிசமானவர்கள் மாணவர்களாகவிருப்பார்கள். படிக்கும் காலத்தில், சமூக ஓட்டத்தையும் கிரகித்துக்கொள்ள இப்படியான தொடர்புகள் மிகவும் தேவை என்பது மேற்கு கல்விவழிமுறையுடன் இணைந்தது.

அது டியானாவுக்குப் பிரச்சினையில்லை. ஆனால், இதுவரை அவளின் காதல் பற்றி அவளின் தாய் தகப்பனுக்கு அவள் சொல்லியதில்லை. தனது இருபத்தியோராவது பிறந்த தினத்தின் பின் சொல்வதாகவிருந்தாள். ஆனால் லோகன் சாப்பாட்டுத் தட்டுகளுடன் வந்தபோது குழம்பி விட்டாள். அதிலும் அவளின் அத்தனை உறவினர்களும் அவளின் மாமா மாதிரியான முற்போக்குவாதிகளல்லர்.

தாய்வழியினரில் பெரும்பாலோர், அவளின் தாயின் தம்பியான ஒரு "முற்போக்கு" (சோசலிஸ்ட்) மாமா தவிர மிகுதி அத்தனைபேரும் மிகவும் மேல்தட்டு வாழ்க்கை முறையில் வாழ்பவர்கள். அடுத்த இன, நிற மக்களுடன் அதிக தொடர்பற்றவர்கள்.

இப்போது, இன்னொரு சந்தேகம் அவளின் மனதில் முளைவிட்டது. பல்கலைக்கழகத்தில், அவளுக்குக் காதல் இருப்பதை அப்பா மோப்பம் பிடித்திருப்பாரா, அவளின் காதலன் வெள்ளையன் அல்லாதவன் என்று அப்பாவுக்குத் தெரிந்திருக்குமா? அவர் மிகவும் நல்ல முற்போக்குக் கருத்துடையவர்.

மற்றவர்களிடம் துருவித் துருவி விடயங்களைப் பெற்றுத் தனது வழக்குகளை வெல்பவர் என்று அவள் தனது தந்தையைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறாள். தனது மகள், ஆங்கிலேயன் அல்லாத ஒருத்தனிடம் மனதைப் பறிகொடுத்திருக்கிறாள் என்று தெரிந்தால் அவர் என்ன சொல்வார் என்று அவளுக்கு ஒட்டுமொத்தமாகத் தெரியாவிட்டாலும், தனது மகளின் விருப்பத்திற்கு எதிராக நிற்கமாட்டார் என்று தெரியும்.

ஆனால் தனது மகளின் காதலன் பகுதிநேர வேலையாக ஒரு ரெஸ்டராண்டில் சமயற்காரனாக இருக்கிறான் என்று தெரிந்தால் எப்படி எடுத்துக் கொள்வார்? அவளின் தாயின் குடும்பத்தினர் எப்படி எடுத்துக் கொள்வார்கள்? லோகன், ரெஸ்ட்ரோடண்டில் பகுதிநேர வேலை செய்பவனா? அப்படியிருந்தாலும் அவளுக்கு எந்தப் பிரச்சினையுமில்லை.

லோகன் தனது நண்பனின் தகப்பனின் கடையில் இன்று மிகவும் பிஸியாகவிருந்ததால் அவனின் நண்பன் தனது தகப்பனுக்கு உதவும்போது, தானும் வந்ததாகத்தானே சொன்னான்?

டியானா பலதையும் நினைத்துக் கொண்டாள். அன்று அவளுக்குப் படிப்பில் கவனம் செல்லவில்லை. லோகனுக்கு அன்று பின்னேரம் வரையும் லெக்ஸர்ஸ் இருப்பதால் இரவுக்கு ஹாஸ்டலில் அவளை வந்து சந்திக்கிறேன் என்று காலையில் சொல்லியிருந்தான்.

மதிய உணவின் பின் உள்ள இடைவெளி நேரத்தில், வழக்கம்போல், மாணவர் கிளப்பில் தோழியர்களுடன் அரட்டை அடித்துக் கொண்டிருந்தபோது தகப்பனின் அழைப்பு வந்தது. இந்த நகரத்தில் உள்ள கோர்ட்டில் ஏதும் வழக்குகள் இருந்தால் அவர் இந்தப் பக்கம் வரும்போது மகளையும் வந்து பார்த்து விட்டுச் செல்வார்.

"அப்பாவுடன் காப்பி சாப்பிட எனது இளவரசிக்கு நேரமிருக்குமா" அப்பாவின் குரலில் வழக்கத்திற்கு மாறான ஒரு நெகிழ்வு தெரிந்தது.

நேற்று அவளின் பிறந்த தின வைபவத்திற்குப் பல உறவினர்கள் வந்ததால் இரவு நீண்ட நேரமாக அவர், தூரத்திலிருந்து வந்திருந்த அவர்களின் சொந்தங்களுடன் பிஸியாகவிருந்தார்.


விடுதியிலிருந்து, டியானா வெளியே வந்தபோது, ஆகஸ்ட் மாத மாலை நேரத்தின் தென்றல் அவளை அன்புடன் வருடிச் சென்றது. தகப்பன் காரை விட்டு இறங்கி வந்து கொண்டிருந்தார். டியானாவைத் தூரத்தில் கண்டதும் முகத்தில் பெரிய புன்னகையுடன் விரைந்து வந்தார்.

"எப்படி எனது இருபத்தியொரு வயது மகள்?" அவர் குறும்பாகக் கேட்டார். இங்கிலாந்தில் இருபத்தியொரு வயது என்பது மிகவும் முக்கியமான வயது. தாய் தகப்பனின் அனுமதியில்லாமல் தங்களின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் காலமாக ஆங்கிலேய மத்திய வர்க்கத்தால் நடைமுறைப்படுத்தப்படுகிறது. டியானா அப்பாவுக்கு மறுமொழி சொல்லாமல் அவரின் கையைப் பிடித்துக் கொண்டு, அவர் முகத்தில் முத்தமிட்டாள்.

அவர் ஒரு சில நிமிடங்கள் ஒன்றும் பேசாமல் அவளை இறுக அணைத்துக் கொண்டார்.



# கண்ணீர் அஞ்சலி – மு. பஷீர்



ஈழத்தின் முக்கிய எழுத்தாளரும் கவிஞருமான மு.பஷீர் தனது 78ஆவது வயதில் 28.05.2021 அன்று காலமானார். கம்பஹா மாவட்டத்தின் மினுவாங்கொடை பிரதேசத்திலுள்ள கல்லொளுவை என்ற கிராமத்தில் பிறந்த பஷீர், சிறுகதை கவிதை, ஆய்வு ஆகிய துறைகளில் முத்திரை பதித்தவர். முற்போக்கு இயக்கத்தில் வளர்ந்தவர். நீர்கொழும்பு கலை இலக்கிய வட்டம், மினுவாங்கொடை கலை இலக்கி வட்டம் ஆகியவற்றின் தலைவராக இருந்து பலகாலம் இலக்கிய சேவை செய்தவர். இலங்கை வானொலி முஸ்லிம் நிகழ்ச்சியில் **வாழும் கதைகள்** என்ற நிகழ்ச்சியை நான்கு ஆண்டுகளாக நடத்தியவர் 1999ஆம் ஆண்டில் அரசின் **கலாபூஷண விருது** மற்றும் கொழும்பில் இடம்பெற்ற இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் **சிறந்த படைப்பாளிக்கான விருதையும் பொற்கிழியையும்** பெற்றவர். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்து ஞானம் அஞ்சலி செலுத்துகிறது.




*சகல சௌபாக்கியங்களுடனும்*
*சொர்க்கத்தில் வாழ்ந்திருந்த*
*புத்தபெருமானுக்கு உதித்தது*
*ஓர் எண்ணம் - சித்தார்த்தனாய்*
*அவதரித்த புனித பூமியை*
*ஒரு முறை*
*தரிசித்து வரும் பயணம்.*
*புட்பக விமானம் அவர்*
*காலடியில் வந்து நின்றது.*
*ஏறி அமர்ந்தார் ஒரு*
*குமிழை அழுத்திவிட்டார்.*
*பூமிப் பந்தை நோக்கி*
*விரைந்தது விமானம்*
*றொக்கற் வேகத்தில்.*
*மண்ணுலகை அண்மித்து*
*வலம் வந்தது.*
*இமய மலைத் தொடரும்*
*எழில் பசுமை வனங்களும்*
*குன்றுதோறும் கோயில்களும்*
*அன்று போல் இன்றும்*
*ஓடிக் கொண்டிருக்கும்*
*நதிகளும்... ஆங்கே*
*நீராடும் மக்கள் வெள்ளமும்*
*கண்ணுற்று இன்புற்றார்.*
*இளவரசனாய் வாழ்ந்திருந்த*
*கபிலவஸ்த்து அரண்மனையை*
*கண்டு களிப்புற்றார்*
*தெற்கே திரும்பிப் பறந்தார்.*
*துறவியாய் கடல்கடந்து*
*கால் பதித்த தீவு மண்மேல்*
*வட்டமிட்டார்.*
*அலைகடலோரம் தலைநகரம்*
*நீக்கமற நிறைந்த*
*மேல்மாடி மனைகள்*
*வானளாவிய கோபுரங்கள்*
*வீதி நிறைந்தோடும் வாகனங்கள்*
*வெண்ணிற ஆடை மாதரின்*
*கைகளில் வெண்மலர்கள்*
*ஞானியின் பாதங்களில்*
*மலர்க்குவியல் எழில்*
*மலைகளும் ஓய்வின்றி*
*கொட்டும் அருவிகளும்*
*நீர் நிறைந்த வாவிகளும்*
*விரைவு சாலைகளும்...*
*வளமான நாடுதான் வாழ்க!*
*என வாழ்த்தியவர் விமானத்தை*
*வடக்கே திருப்பிவிட்டார்.*
*வனப்போடும் வளமான*
*வாழ்வோடும் விளங்கிய*
*யாழ்ப்பாணம் உருக்குலைந்து*
*பாழடைந்த, நிலை கண்டு*
*வருந்தினார்*
*போதாமைக்கு -*
*பற்றையிலும் பாதையிலும்*
*பிள்ளையார் கோயிலிலும்*
*பளிங்குச் சிலைகள் !?*
*என்ன இது ? ஏன் இந்த*
*அலங் கோலம் ?*
*இதுவா நான் போதித்த தர்மம்?*
*புத்தர் கண் கலங்கினார்*
*புட்பக விமானம் உயரப்*
*பறந்தது பறந்து*
*றொக்கற் வேகத்தில்*
*விண்ணில் மறைந்தது.*

"காப்பி சாப்பிடப் போகாமல் பார்க்குக்குப் போகலாமா" அவர் குரலில் அவளிடம் கெஞ்சும் வேண்டுகோள் தொனி.

அவளின் பன்னிரண்டு பதின்மூன்று வயது கால கட்ட இளவயதில் அவளின் தாயுடன் முரண்டுபிடித்துக் கோபமாக இருக்கும்போது அவர் வேலையால் வந்ததும், தாயும் மகளும் முகத்தை நீட்டிக் கொண்டிருக்கும் விதத்தைப் பார்த்து, வீட்டில் ஏதோ பிரச்சினை என்று தெரிந்து கொள்வார். சாப்பாடு முடியவிட்டு, வசந்த காலமென்றால் பக்கத்திலிருக்கும் பார்க்குக்கு மகளை அழைத்துச் செல்வார்.

அங்கு திரண்டு வழியும் உலகத்தின் பல நாட்டு மக்களின் மொழிகள், குழந்தைகளின் இரைச்சல்கள், பறவைகளின் சப்தங்கள், யாரோ கேட்டுக்கொண்டிருக்கும் வானொலி பாடல்கள், ஒரு பக்கத்தில், கால்பந்தாட்ட விளையாட்டாரின் கலகலவென்ற கூக் குரல்கள், இன்னொரு பக்கத்தில் கூட்டமாய் அமர்ந்திருந்து அரசியல் அல்லது சினிமா அல்லது கிரிக்கட் பற்றி விவாதம் செய்யும் இளைஞர்கள் என்ற சந்தடியில் அவளது மனது திசை திரும்பும் என்று அவருக்குத் தெரியும். அதன்பின் மகளிடம் ஒரு "வழக்கறிஞராகத்" தனது பாசக்குரலில் அவளின் வாடிய முகத்திற்கு விளக்கம் கேட்பார்.

டியானா அந்த வீட்டில் ஒரே ஒரு மகள். தாயார் ஒரு ஆசிரியை, சாடையான கண்டிப்புத் தன்மையுள்ளவள். டியானா செல்லமாக வளர்கிறாள். அவள் கேட்பது பெரும்பாலும் அவளுக்குக் கிடைக்கும் என்று அவளுக்குத் தெரியும். ஆனால் சிலவேளைகளில் தாயின் பொறுமையை டியானா சோதித்துப் பார்ப்ப துண்டு.

பார்க்குக்கு வந்ததும் கொஞ்ச நேரத்தில் அவள் தனது தாயிடமிருந்த கோபத்தை மறந்துவிட்டிருப்பாள். அவரின் கேள்விக்கு, "ஓ டாடி, சாரி டாடி, வழக்கம்போல் எனது பிடிவாதத்தால், நான்தான் அம்மாவை வருத்தி விட்டேன்" என்று உண்மையை ஒப்புக் கொள்வாள்.

அதன்பின் பலதையும் பத்தையும் தகப்ப னும் மகளும் பேசிக்கொள்வார்கள். வீட்டுக்கு வந்ததும், அம்மாவைக் கட்டிக் கொண்டு, "ஐயாம் சாரி மம்மி" என்று கொஞ்சுவாள்.

இப்போது டியானாவுக்கு இருபத்தி ஒரு வயது. அவளின் மனதை ஏதோ அழுத்துகிறது. அவர் அதை அவளிடம் எப்படிக் கேட்பது என்று திண்டாடுகிறார்.

பல்கலைக்கழகத்தை விட்டுச் சற்றுத் தூரத்திலிருந்த பார்க்கில் அவர்கள் அமர்ந் திருந்தார்கள். பார்க்கின் ஒரு மூலையில் சிறிய காப்பிக் கடையிருந்தது. அங்கு சன நடமாட்டம் நிறைந்திருந்தது.

டேவிட் மாஸ்டன் மகளிடம் ஏதோ மாற்றமிருப்பதை அவதானித்தார். அவளாக அவரிடம் ஏதும் பேசாமல், அவர் கேட்கும் கேள்விகளுக்கு ஏனோதானே என்ற மறுமொழி சொல்கிறாள்.

அவளின் மனதை ஏதோ நெருடுகிறது என்று அவருக்குப் புரிந்தது. என்னவாகவிருக்கும்?

வந்திருந்த உறவினர்கள் அவளுக்குப் பிடிக்காத ஏதும் கேள்வி கேட்டார்களா?.

நேற்றைய அவளுடைய பேர்த்டேய் பார்ட்டி பற்றிப் பேசினார்களா?

அதுவும் அவருக்குத் தெரியாது. ஆனால் இன்று அவர் வந்திருக்கும் விடயம் அவரைப் பொறுத்தவரையில் மிக முக்கியமானவிடயம். அவளின் இருபத்தியொருவயது வரைக்கும் அவர் சொல்லாமல் வைத்திருந்த குடும்ப ரகசியம். தனது மூன்று வருடப் படிப்பு முடியவிட்டு, இந்தியா சென்று ஏழைகளுடன் வேலை செய்ய வேண்டும் என்று டியானா சொன்னபோது அவர் மனதில் உண்டாகிய பூகம்பத்தை அவள் அறியாள்.

தகப்பனும் மகளும் இருந்த இடத்தைத் தாண்டி, ஒரு ஆங்கிலேய இளைஞனும் இந்திய இளம் பெண்ணும் கைகோர்த்தபடி ஒருத்தரை ஒருத்தர் அணைத்தபடி சென்று கொண்டிருந்தார்கள். இரண்டு இனக் காதலர்கள். ஒருத்தரில் ஒருத்தர், உயிரை வைத்திருப்பது அவர்களின் பார்வையில், அணைப்பில், உடலசைவில் உலகத்திற்குப் பறைசாற்றுகிறது. டியானாவின் தந்தையின் பார்வை அந்த இளம் காதலர்களிடம் பதிந்திருந்ததை அவள் கவனிக்கவில்லை.

அவளும் லோகனும் எவ்வளவு தூரம் இணைந்திருக்கிறார்கள் என்பது அவளின் தாய் தகப்பனுக்குத் தெரியுமா என்பதில் அவள் சிந்தனை பரந்திருந்தது.

லோகன் இல்லாமல் அவளால் வாழமுடி யாது என்பதை டியானா தனது குடும்பத்திற்குச் சொன்னால் அவளை ஒரு பைத்தியக்காரி என்று சொல்வார்களா?

தங்கள் மகள் மிகவும் நேர்மையானவள், அத்துடன் பிடிவாதமுள்ளவள் என்று அவர்களுக்குத் தெரியும். அவளின் ஆசையைப் புரிந்துகொண்டு லோகனை ஆசீர்வதிப்பார்களா? அவள் மனதில் பல கேள்விகள்.

அவர்களை வைத்த கண்வாங்காமல் டியானா பார்த்துக் கொண்டிருப்பதை அவள் தந்தை கவனிக்கவில்லை என்பது அவளுக்குத் தெரியாது.

அவரைத் தாண்டிச் சென்ற அந்த இந்தியப் பெண் அவர் மனதில் என்ன கலக்கத்தை உண்டாக்கினாள் என்பதை அவரால் தாங்க முடியாதிருந்தது என்பதை அவள் அறியாள்.

தனது பார்வையைத் தனது தகப்பனில் திருப்பியபோது அவர் கண்கள் கலங்கியிருப்பதைக் கண்டு அவள் திடுக்கிட்டாள். அப்பா ஏன் அந்த இளம் சோடியைக் கண்டு கண்கலங்குகிறார். டியானா இப்போது, லோகனையும் தன்னையும் பற்றி யோசிப்பதை விட்டுத் தகப்பனைப் பற்றிக் குழம்பினாள். அப்பா ஒருகாலத்தில் யாரோ ஒரு இந்தியப் பெண்ணைக் காதலித்தாரா?

டியானா, தகப்பனின் கைகளை அன்புடன் வருடினாள். தனது தலையைத் தகப்பனின் தோள்களில் சரித்துக் கொண்டாள். அப்பாவுக்கு ஒரு காலத்தில் ஒரு இந்தியப் பெண்ணிடம் காதலிருந்து, அவரின் அல்லது அவளின் குடும்பத்தினருக்குப் பிடிக்காமல் அவர்களின் காதல் முறிந்திருக்குமா? நிற, இனபேதம் இடையில் வந்து அவர்களின் காதலைத் துண்டாடியிருக்குமா?

அப்படி நினைத்ததும் அவளுக்கு அப்பாவில் பரிதாபம் வந்தது. தகப்பனின் கன்னங்களை வருடிக்கொண்டாள். “ஐ லவ் யு சோ மச் டாடி” என்றாள்.

அவர் மகளின் முகத்தைப் பார்த்தார். அவர் கண்களிலிருந்து நீர் வழிந்து கொண்டிருந்தது. “ஐ லவ் யு வித் ஆல் மை லைவ், மை டார்ளிங் டாட்டர் டியானா, டியானா” அவர் குரல் அடைக்கச் சொன்னார். அவள் பெயரைத் திரும்பத் திரும்பச் சொன்னார்.

“டாடி, ஏன் இப்படிக் கலங்குகிறீர்கள்? நேற்று நான் உங்களுக்குப் பிடிக்காதமாதிரி நடந்து கொண்டேனா?” அவள் பதறினாள். லோகனைப் பற்றிய சிந்தனை அவளிடமிருந்து ஒருகணம் மறையத் தனது தகப்பனின் சோகத்திற்காக அவள் பதறினாள்.

“நான் இன்று ஒரு முக்கிய விடயம் பேசவந்திருக்கிறேன்” அவர் அவளின் கண்களை உற்றுப் பார்த்தபடி சொன்னார்.

அவளுக்கு வயிற்றைப் பிசையத் தொடங்கி விட்டது. “நீ எக்காரணம் கொண்டும் ஆங்கிலேயன் அல்லாத ஒருத்தனைக் காதலிக்க முடியாது. ஏனென்றால் உனது தாயின் குடும்பம் அதை விரும்பமாட்டார்கள் என்று சொல்லப் போகிறாரா” அவளால் அப்படி நினைத்ததும் அவளின் அழுகை கரைபுரண்டோடியது. லோகன் இல்லாமல் நான் வாழ முடியாது என்ற கதறவேண்டும் போலிருந்தது.

தனது படிப்பு முடித்ததும் ஏழை மக்களுக்கு உதவும் உலக மருத்துவ நிறுவனத்தில் பணிபுரியவேண்டும் என்று லோகன் சொல்லியிருக்கிறான். அவனின் படிப்பு முடிவதற்கிடையில் அவளின் படிப்பு முடிகிறது. அவள் இந்தியா போவதற்கான காரணத்தை அப்பாவுக்குச் சொல்ல வேண்டும் என்று நினைத்தபோது ஏதோ பெரிய விடயத்தைச் சொல்ல வேண்டுமென்கிறாரே!

டியானா பதறினாள். தகப்பனின் கைகளை இறுக்கப் பிடித்துக் கொண்டாள்.

“நீ இப்போது நான் சொல்லப் போவதைக் கவனமாகக்கேள் மகளே” அவர் தனது கண்ணீரைத் துடைத்துக் கொண்டார்.

வசந்தகாலத் தென்றல் பார்க்கில் பூத்துக் குலுங்கிய பல மலர்களின் வாசனைகளை அள்ளிக்கொண்டு அவர்களைத் தடவிச் சென்றது.

“இப்போது எங்களைக் கடந்து போன அந்த இந்தியப்பெண் எனது பழைய காலத்தை நினைவூட்டினாள். எனது பாரம்பரியத்தை நினைவூட்டினாள்”.

டியானா மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தாள். அவரின் வார்த்தைகள் ஒன்றுக்கொன்று முரணாகவிருந்தன. “எனது பழைய காலம், எங்கள் பாரம்பரியம்” என்ற அவரது வார்த்தைகள் ஒரு சரித்திரத் தொடரின் வார்த்தைகளாகத் தெரிந்தன.

மாலைக் கதிரவன் மிகவும் தயக்கத்துடன் தனது பூமிக்காதலியைப் பிரிய மனமின்றி, செவ்வானத்தில் மெல்ல நகர்ந்து கொண்டிருந்தான்.

“உனக்குப் பெயர் வைத்தது எனது பாட்டியார் ஜேன் என்று சொல்லியிருக்கிறேன் தெரியுமா? எனது பாட்டி, தனது தகப்பன்

ஜேம்ஸின மறுபிறப்பாக என்னை நினைக்கிறாள். அவளின் தகப்பன் ஜேம்ஸின் ஆருயிர்க் காதலியான தியானாவின் பெயரைத் தன் பேத்திக்கு வைத்தாள் என்பதன் சரித்திரத்தைச் சொல்லப் போகிறேன். ஏனென்றால் நீ லோகனைக் காதலிப்பது எனக்குத் தெரியும்."

அவர் மகளின் அழகிய முகத்தை அன்புடன் தடவிக் கொண்டார். "அப்பா மேலும் சொல்லுங்கள்" என்ற பாவனையில் தலையை ஆட்டிக்கொண்டு டியானா அவரைப் பார்த்தாள். தனக்கும் லோகனுக்குமுள்ள காதலைத், தன்னில் உயிரையே வைத்திருக்கும் தனது தகப்பனுக்குச் சொல்லாத குற்ற உணர்வு அவளை மௌனமாக்கியிருந்தது.

"எனது பாட்டியின் தாயாரின் பெயர் தியானா- ஒரு அழகிய இந்திப் பெண் என்று கேள்விப் பட்டிருக்கிறேன். நீ பிறந்ததும் ஆங்கிலேய - இந்திய கலப்புக் காதலர்களின் முதலாம் தலைமுறையான எனது பாட்டியார், மூன்றாம் தலைமுறையாக முழுக்க முழுக்க ஆங்கிலக் குடும்பத்துப் பெண்ணான் உனக்கு அந்தப் பெயரை வைத்தார்." மிகவும் தெளிவாகச் சொல்லிவிட்டு டேவிட் மாஸ்டன் மெல்லிருள் பரவும் செவ்வானத்தில் தன் பார்வையைப் பதித்துக் கொண்டார்; கதையைத் தொடர்ந்தார்.

## 2

இந்தியா-1885:

அமெலியா ஹார்ப்பர் என்ற அழகிய ஆங்கிலப் பெண், தனது இருபத்தி இரண்டாவது வயதில், இந்தியாவிலுள்ள ஒரு பிரித்தானிய இராணுவ உயர் உத்தியோகத்தரின் வீட்டிலுள்ள குழந்தைகளுக்குப் பாடம் சொல்லும் ஆசிரியையாக இங்கிலாந்திலிருந்து இந்தியத் தென்னகரின் தலைநகரான மட்ராஸ் பட்டினத்தில் வந்திறங்கினாள். அவள் வந்திறங்கிய அதே வருடம்தான் பிரித்தானிய காலனித்துவத்திற்கெதிரான இந்தியன் நாஸனல் கொங்கிரஸ் உண்டாக்கப்பட்டது என்றும் அவளுக்குத் தெரியாது.

கிழக்கிந்தியக் கம்பனியின் நிர்வாகத்தில், 1757 தொடக்கமிருந்த இந்திய உபகண்டத்தில், 1857ஆம் ஆண்டு, கிழக்கிந்திய ஆட்சிக்கு எதிராக வெடித்த கலவரத்தால், 1858ஆம் ஆண்டு தொடக்கம் பிரித்தானிய மகாராணியின் நேரடி ஆட்சிக்குக் கீழ் வந்தது. பிரித்தானிய மத்தியதர வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள்



**"நீ எக்காரணம் கொண்டும் ஆங்கிலேயன் அல்லாத ஒருத்தனைக் காதலிக்க முடியாது. ஏனென்றால் உனது தாயின் குடும்பம் அதை விரும்பமாட்டார்கள் என்று சொல்லப் போகிறாரா"**

இந்தியாவை "விருத்தி" செய்யும் தொழில், கல்வித் துறைகளில் ஈடுபடப் பல்லாயிரக் கணக்கில் வந்தார்கள்.

1861ஆம் ஆண்டு கணிப்பின்படி, இந்தியாவில் ஒட்டு மொத்தமாக, 125,945 வெள்ளையினத்தவர்கள் இருந்தார்கள். ஆதில் 84.083 வெள்ளையினப் "பொது மக்களும்", இந்தியா என்ற உபகண்டத்தைத் தன் பிடியில் வைத்திருக்க 66.000 வெள்ளையினப் படையினரும், 130.000 இந்தியப் படைவீரர்களுமிருந்தனர். அத்துடன் இந்தியாவின் பல பகுதிகளிலும் ஆட்சி புரிந்து கொண்டிருந்த சிற்றரசர்களின் படைகளாக 350.000 வீரர்களுமிருந்தனர்.

இங்கிலாந்தில் ஒரு மத்தியவர்க்கக் குடும்பப் பெண்ணான அமெலியாவின் குடும்பத்தில் பல பெண்கள் உயர்வர்க்கக் குடும்பத்தினர்களின் கல்வியை முன்னெடுக்கும் தொழிலில் பலகாலம் ஈடுபட்டவர்கள்.

அமெலியாவின் தமக்கை மிகவும் முற்போக்கான கொள்கைகளையுடையவள். இங்கிலாந்தில் பெண்களுக்கும் வாக்குரிமை கிடைக்கவேண்டும் என்ற கருத்து பரவிக் கொண்டிருந்ததற்குக் காரணமான பெண்களில் அமெலியாவின் தமக்கையும் ஒருத்தி. அமெலியாவும் அப்படி.

"அரசியல்" கருத்துக்களில் ஈடுபடமுதல் அமெலியாவை இந்தியாவுக்கு அல்லது, பிரித்தானிய காலனித்துவ நாடுகளில் ஒன்றான கனடா, அவுஸ்திரேலியாவுக்குக் கல்வி கற்பிக்கும் சாட்டில் அனுப்ப யோசித்துக் கொண்

டிருக்கும்போது, இந்தியாவிலுள்ள ஒரு சொந்தக்காரப் பெண்மணியின் சிபார்சால் அமெலியாவுக்கு இந்தியாவில் வேலை கிடைத்தது.

புதிய கலாசாரம், புதிய சூழ்நிலை என்பன அமெலியாவைத் திணறடித்தன. இந்தியாவிலிருந்த கொடுமையான பல பழக்க வழக்கங்கள், அதிலும் பெண்களுக்கிருந்த நிலை அவளை ஆத்திரத்தில் துடிக்கப் பண்ணி யது. அவற்றிற்கு எதிராக அவளால் ஒன்றும் செய்ய முடியாது. எப்போது இங்கிலாந் துக்குத் திரும்புவேன் என்று ஏங்கினாள்.

இந்தியாவில் பிரிட்டிஸார் படாடோபத் துடன் வாழ்வதைக் கேள்விப்பட்ட அவளின் உறவினர்கள் அவளை இந்தியாவிலுள்ள பிரித்தானியர் ஒருத்தரைத் திருமணம் செய்யச் சொல்லி ஆலோசனை சொன்னார்கள். அவள் அதை விரும்பவில்லை. காலம் பறந்தது. அவள் வேலைசெய்யும் இராணுவ அதிகாரியின் வீட்டுக்கு அடிக்கடி வரும் ஒரு இராணுவத் தலைவன், வில்லியம் ஹரிஸ னின் காதல், அமெலியாவுக்கு ஒரு புதிய வழியைக் காட்டியது.

அமெலியாவின் கணவன், வக்கிரமான குணங்களற்றவன். சாதி மத, இனக் கொடு மையால் மிகவும் கொடுமையாக நடத்தப் படும் பொதுமக்களுக்கு நன்மை செய்ய முனையும் பிரித்தானிய நிர்வாகத்தின் ஒரு சிலரை மனதாரப் பாராட்டுபவன். ஆனால் அவன் காலனித்துவத்தைக் காப்பாற்றும் இராணுவத் தளபதி.

அமெலியாவின் "பொதுநல சிந்தனை யைக்" காலக் கிரமத்தில் புரிந்து கொண்டாலும் அதைத் தன் மனைவி வெளியில் சென்று செய்வதை அவன் விரும்பவில்லை. அவர்களின் வீட்டில் பலவித வேலைகளுக்கும் வேலைக்காரர்கள் இருந்தார்கள். அந்த வாழ்க்கையமைப்பில் உள்ள கொடுமைகள் அவளை வாட்டியெடுத்தன.

அவளின் பெரியதாய் லண்டனின் கிழக்கி லுள்ள ஏழைக் குழந்தைகளுக்காக "தோமஸ் பார்னாடோ" என்பவரால் ஆரம்பிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் பாடம் சொல்லிக் கொடுப் பதைக் கேள்விப்பட்ட, அமெலியா தானும், இந்திய ஏழைப் பெண்களுக்குப் படிப்பு சொல்லிக் கொடுக்கலாம் என்றும் சொன்னாள்.

அவர்களின் திருமணத்தின் பின்னர், கணவன் பதவி உயர்வு காரணமாக வடக்குக்குச் சென்றதும், தங்கள் இந்திய வேலைக்காரர்களை அமெலியா அன்புடன் நடத்தினாள். அவர்களின் குழந்தைகளுக்கு ஆங்கிலம் சொல்லிக் கொடுத்தாள். காலம் நகர்ந்தது, அவளுக்கு ஒன்றுக்கு அடுத்தடுத்து என்று நான்கு குழந்தைகள் பிறந்தார்கள். ஒரு பெண் குழந்தையும், மூன்று ஆண்குழந்தை களும் அவளுக்குக் கிடைத்த சொர்க்கங்கள் என்று சீரும் சிறப்புமாக வளர்த்தாள்.

முதலாவது பெண் குழந்தைக்குப் பத்து வயதில், வருத்தம் வந்து இறந்தபோது அவளின் துயர் தாங்க முடியாதிருந்தது. தனக்கு ஒரு பெண் குழந்தை பிறக்காதா என்று இரவு பகலாகப் பிரார்த்தனை செய் தாள். அவள் எதிர்பார்ப்பின் தோல்வி அவளை வருத்தியது.

பல மாதங்கள், வீட்டுக்குள் அடைபட்டுக் கிடந்தாள். அவள் மனத்துயரை நீக்க மருந்தொன்றும் வேலைசெய்யவில்லை.

அக்காலகட்டத்தில் அவர்களின், தோட் டத்து சமயல் வேலைக்காரர்களாக வந்த இளம் தம்பதியினருக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. தேவதை போன்ற அந்த அழகிய குழந்தையைத் தடவி முத்தமிட்டாள் அமெலியா. தியானா என்று பெயர் வைத்தாள். அந்தக் குழந்தையை அன்புடன் நடத்தினாள் அமெலியா. தனது துயரை அந்தக் குழந்தையின் புன்சிரிப்பில் மறந்தாள். தாழ்த்தப்பட்டவர்கள், ஒடுக்கப்பட்டவர்களாக நடத்தப்படும் எழை வேலைக்காரர்களுக்கு, சமயற்காரனின் குழந்தையைக் கொஞ்சும் அமெலியா ஒரு ஆச்சரியமான ஆங்கிலப் பெண்ணாகவிருந்தாள்.

அமெலியாவின் மகன்கள் வளர்ந்தார்கள். முதல் இரு மகன்களும், லண்டனிலிருந்த அமெலியாவின் குடும்பத்தினரின் மேற்பார்வை யில், மேற்படிப்புக்காக, இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டார்கள். ஐந்து வயதான கடைசி மகன் ஜேம்ஸ் மட்டும் அப்போது இந்தியாவி லிருந்தான். தோட்டத்தில், இரண்டு வயதான தியானாவுடன் ஓடிப்பிடித்து விளையாடுவான்.

இந்திய வேலைக்காரப் பெண்ணுடன் இங்கிலிஷ் பையன் விளையாடுவதை அமெலி யாவின் பல ஆங்கிலேய சினேகிதர்கள் அருவருப்புடன் பார்த்தார்கள். அமெலியா

அவர்களின் இனவாதத்தில் அதிகம் கவனம் செலுத்தவில்லை.

அப்போது, இந்தியாவில் பல அரசியல் மாற்றங்கள் நடந்து கொண்டிருந்தன. விவேகானந்தரால் இந்தியாவுக்கு 1898இல், அவரின் சீடையாக அழைக்கப்பட்டு வந்த, நிவேதிதா அம்மையார் என்ற வெள்ளையினப் பெண்மணியால் இந்தியப் பெண்களின் கல்வி சம்பந்தமான பல மாற்றங்கள் நடந்தன. ஏற்கனவே நடந்து கொண்டுமிருந்தது

அமெலியாவின் கடைசி மகன் ஜேம்ஸ் அவனின் பதினோராவது வயதிலேயே, இந்தியாவிலிருந்த பிரித்தானியரின் வழக்கப் படி இங்கிலாந்துக்குக் கல்வி கற்க அனுப்பப் பட்டான். ஒன்பது வயது தியானா தேம்பித் தேம்பி அழுதபோது அமெலியா அவளை அன்புடன் அணைத்துக் கொண்டாள்.

மூன்று குழந்தைகளையும் இங்கிலாந்துக்கு அனுப்பிய அமெலியாவின் தனிமையை தியா னாவுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுப்பதில் மகிழ்ந்தாள்.

அமெலியாவின் மகன்மார் ஒவ்வொரு இரண்டு அல்லது மூன்று வருடத்துக் கொருதரம், இந்தியாவுக்கு வந்து தாய் தகப்பனுடன் வசந்தகால விடுமுறையைக் கழித்தார்கள். அல்லது அமெலியாவும் கண வரும் லண்டனுக்கு வந்து சென்றார்கள்.

தியானா, ஒரு வேலைக்காரனின் மகள் என்ற அடையாளத்திற்கப்பால் அறிவுடனும் அழகாகவும், அமெலியாவின் அரவணைப்பில் வளர்ந்தாள். அவளின் தாய் தகப்பன், அவர்களின் சாதி வழக்கப்படி தியானா பருவமடைந்ததும் அவளுக்குத் திருமணம் செய்ய முடிவு கட்டினார்கள். தியானாவுக்கு அப்போது கிட்டத்தட்டப் பதின்மூன்று வயது.

அமெலியாவும் கணவரும் அதைத் தடுத்தார்கள். அவள் ஒரு குழந்தை அவளுக்குக் கல்யாணம் செய்து வைப்பது கொடுமை என்று தியானாவின் தாய் தகப் பனுக்குச் சொன்னார்கள். தாய் தகப் பனுக்காக இளவயதில் திருமணம் செய்ய நிர்ப்பந்திக்கப்படும் தியானாவை, ஒரு ஆசிரியை யாக்கவேண்டும் என அமெலியா பிரார்த்தனை செய்தாள்.

அப்போது இந்தியாவில் பல அரசியல், சமூகமாற்றங்கள் ஆரம்பித்தன. மோகன்லால் காந்தி தென்னாபிரிக்காவிலிருந்து இந்தியா



**தியானா, மிகவும் தயக்கத்துடன் அமெலியாவின் கையை எடுத்துத் தன் வயிற்றில் வைத்துக் கொண்டு, அழுகையின் நடுவே "ஜேம் ஸின் குழந்தை, உனது பேரன் என் வயிற்றில் வளர்கிறான்" என்றாள்.**

வந்திருந்தார். ஆன்னி பெசன்ட் என்ற ஐரிஷ் வெள்ளை மாது, இந்தியாவில் பல முன்னேற்றமான மாற்றங்களைச் செய்து கொண்டிருந்தார். ஆன்னி பெசன்ட இந்திய அரசியல் கட்சியில் சேர்ந்தார். பெண்களின் முன்னேற்றத்திலும் கவனம் செலுத்தினார்.

1914ஆம் ஆண்டு முதலாம் உலகப்போர் ஆரம்பித்தது. பிரித்தானியா, இரஷ்யா, பிரான்ஸ் போன்ற நாடுகள், ஜெர்மனி, ஆஸ்ட்ரியா-ஹங்கேரியத்துடன் இத்தாலி போன்ற நாடுகளை எதிர்த்துப் போராடின.

ஜேர்மன் கூட்டணியுடன், அன்றைய காலகட்டத்தில் பிரமாண்டமான சக்தியாக, மத்தியதரைக்கடல் நாடுகளை ஆட்சி செய்து கொண்டிருந்த ஒட்டமான் வல்லரசும் (இன்றைய துருக்கி) சேர்ந்து கொண்டது.

அமெலியாவின் மூத்த இருமகன்களும், இங்கிலாந்தில் இறுக்கமாக இணைந்து விட் டார்கள். மூத்தமகன் தனது படிப்பு முடிய, தன்னுடன் படித்த பெண்ணை மணந்து கொண்டு, இங்கிலாந்திலேயே தங்கிவிட முடிவு செய்திருப்பதாகத் தாய் தகப்பனுக்குச் சொன்னான்.

இரண்டாவது மகன், மருத்துவப் படிப்பைத் தொடங்கியிருந்தான்.

மூன்றாவது மகன், 1917ஆம் ஆண்டின் நடுப்பகுதியில், வந்திருந்தான். பிரித்தானிய -இந்தியப் போர்வீரர்கள், முதலாம் உலகப் போரில் தீவிரமாக ஈடுபட்டிருந்தார்கள். போருக்குத் தேவையாகப் பல்லாயிரக் கணக்கான, ஆங்கிலேய, இந்திய இளைஞர்கள் இணைக்கப்பட்டார்கள். அமெலியாவின் கண வர் வில்லியம் ஒரு இராணுவ அதிகாரி. அவர் மகன் இராணுவத்தில் சேர்வது எதிர் பார்க்கப்பட்டது.

மூன்றாவது மகன், பத்தொன்பது வயதான, ஜேம்ஸ், இந்தியாவுக்கு வந்து சில மாதங்களில் இராணுவப் பயிற்சிக்காகச் சென்றான். பயிற்சி முடிந்ததும், மொசப்பத்தேமிய பிரதேசத்தில் பிரித்தானிய கூட்டணிக்கும் ஜேர்மன் கூட்டணிக்கும் நடந்த உக்கிரமான போருக்கு அனுப்பப்பட்டான். முதலாம் உலகப்போர் ஆயிரக்கணக்கான இளைஞர்களைப் பலி கொண்டது. பிரித்தானியக் கூட்டணியுடன் அமெரிக்காவும் 1917இல் இணைந்து கொண்டது. போர் கொடிய உக்கிரத்துடன் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது. அமெலியா, தன் மகனின் பாதுகாப்புக்குக் கடவுளை வேண்டிக் கொண்டாள்.

கோடிக்கணக்கான இளைஞர்களை முதலாம் உலகப்போர் பல இடங்களில் பலி யெடுத்தது. அதில் ஒருத்தன் அமெலியா-வில்லியம் தம்பதிகளின் மகன் ஜேம்ஸ், போர்முனைக்குச் சென்று இருமாதத்தில் மொசப்பத்தேமியப் பிராந்தியத்தில் எதிரியுடன் நடந்த போரில் வீழ்த்தப்பட்டான், என்ற செய்தி வந்தபோது, அமெலியவால் தாங்க முடியவில்லை. பலகோடி இளைஞர்களைப் பறிகொடுத்த ஒரு தாயாக அவள் கதறினாள்.

மகன் இல்லாத இடத்தில் அவளால் ஒரு நிமிடமும் வாழவிருப்பமில்லாமல் துடியாய்த் துடித்தாள். அவள் இந்தியாவைப் பிரிந்து தனது இரண்டு மகன்கள்களையும் காண இங்கிலாந்து வரத்துடித்தாள்.

அது முடியாத காரியம் என்று அவ ளுக்கத் தெரியும். அவளின் கணவர், இந்தியாவிலுள்ள பிரித்தானிய இராணுவ அதிகாரிகளில் ஒருத்தர். போரில் அவர் பங்கு இன்றியமையாதது. அத்துடன் அவள், இந்தியாவை விட்டு, இங்கிலாந்துக்குக் கடல் வழியாக வருவது அபாயம். எதிரிகளின் கடற்படை, இந்திய சமுத்திரத்தில் பல பகுதி களிலும் படர்ந்து கிடந்தது.

அதே சமயம், தியானாவுக்குக் கல்யாணம் பேசும் விடயம், உக்கிரமமான கட்டத்தைக் கண்டது. ஒரு பின்னேரம், அமெலியா, இறந்து போன தனது மகன் ஜேம்ஸை நினைத்து அழுது கொண்டிருந்தபோது, தியானா ஓடிவந்து அமெலியாவின் காலில் விழுந்து கதறினாள்.

"எனது குடும்பம் என்னைக் கொலை செய்யப்போகிறது" பதினாறு வயதுப் பெண்மை, துடித்தழுதது.

"கல்யாணம் செய்ய மறுத்து விட்டாயா" அமெலியா அந்த அழகிய இளம் பெண்ணை அணைத்தபடி கேட்டாள்.

தியானா, நீண்ட நேரம் அமெலியாவின் கேள்விக்குப் பதில் சொல்லாமல் அழுது கொண்டிருந்தாள். அமெலியாவுக்கு, தியானா வின் மனத்துயருக்குக் காரணம் கல்யாணம் மட்டுமாக இருக்க முடியாது என்று புரியத் தொடங்கியது.

"தியானா, என்ன பிரச்சினை?" ஒரு தாயின் பரிவுடன் தியானாவை அணைத்தபடி கேட்டாள். இந்திய சாதியமைப்பில் தியானா ஒரு தீண்டத்தகாத சாதியைச் சேர்ந்தபெண்.

அமெலியாவின் மனித நேயத்தில் அப்படியான கருத்துக்களுக்கு இடமில்லை.

தியானா, மிகவும் தயக்கத்துடன் அமெலி யாவின் கையை எடுத்துத் தன் வயிற்றில் வைத்துக் கொண்டு, அழுகையின் நடுவே "ஜேம்ஸின் குழந்தை, உனது பேரன் என் வயிற்றில் வளர்கிறான்" என்றாள்.

அமெலியாவுக்க ஒரு கணம் உலகம் தலைகீழாகச் சுற்றுவதாக உணர்ந்தாள். தனக்கு முன்னால், தனது வாரிசைத் தாங்கி நிற்கும் இந்த அழகிய இந்திய இளம் பெண்ணை ஊடுருவப் பார்த்தாள். அமெலி யாவின் சிந்தனையில் ஜேம்ஸ், இந்தியாவுக்கு வந்து நின்ற காலத்தில் அவனின் முகத்தில் பளிச்சிட்ட மகிழ்ச்சியான புன்னகைகள் வந்து மறைந்தன. ஜேம்ஸ் போருக்குப் போன அன்று, தனிமையிலிருந்து அழுத தியானாவின் சோகத்திற்குக் காரணம் புரிந்தது.

தியானா பிறந்த நாட்களிலிருந்தே, நினைவு தெரியாத வயதிலிருந்தே தியா னாவை ஜேம்ஸ் காதலித்திருக்கிறான் என்பதை அமெலியாவின் உள்ளுணர்வு சட் டென்று உணர்த்தியது.

தனது ஒரே மகள் இறந்த சோகத்தை மறக்க அமெலியா தியானாவை அணைத்து வளர்த்தபோது வந்த அன்பு இப்படித் திசை திரும்பும் என்ற அவள் நினைக்கவில்லை.

பிரித்தானிய உயர் இராணுவ அதிகாரி ஒருத்தரின் மகன் அவர்களிடம் ஊழியம் செய் யும் ஒரு இந்தியப் பெண்ணின் காதலனா?.

அந்த நிமிடத்தில் அமெலியாவால் ஒன் றையும் சீராகச் சிந்திக்க முடியவில்லை.

தியானாவின் குடும்பம் அவளைக் கவுரவக் கொலை செய்வது நிச்சயம், அமெலியாவின் கணவர் வில்லியத்திடம் தியானா-ஜேம்ஸ் பற்றிய உண்மைகளைச் சொன்னால் என்ன நடக்கும்? வில்லியம் மிகவும் நல்ல மனிதர். ஆனால் அவர், இந்தியாவை ஆளும் பிரித்தானிய சாம்ராச்சியத்தின் அதி உயர்ந்த இராணுவத் தளபதிகளில் ஒருத்தர். அவரின் மகன், இந்தியக் கலாச்சாரத்தில் தீண்டத் தகாதவர்களாக நடத்தப்படும் தியானா என்னும் பெண்ணைக் காதலித்ததை ஏற்றுக் கொள்வாரா,

தியானாவின் குடும்பத்தையே ஊரை விட்டுத் துரத்துவாரா? அமெலியா தனது கணவரையும், தனது அன்பு மகனின் குழந்தை யைத் தாங்கும் தியானவையும் நினைத்து இரவிரவாகத் தனியாக இருந்து அழுதாள்.

தாய் தகப்பனிடம் எதுவும் சொல்ல வேண்டாம் என்று அமெலியா, தியானாவுக்குக் கட்டளையிட்டாள். அவசர அவசரமாகத் தன்னுடைய நெருங்கிய சினேகிதியிடம் உதவி கேட்டாள். தியானா பற்றி உண்மை அத்தனையையும் சொல்லவில்லை. அவளின் தந்தைக்கு விருப்பமில்லாத ஒருத்தனை தியானா விரும்பியதால், தியானாவின் உயி ருக்கு அவளின் குடும்பத்தால் ஆபத்து என்று மட்டும் சொன்னாள்.

தங்களுக்கு விரும்பியதைத் தங்கள் மகள் செய்யாவிட்டால் அவளைக் கொலை செய்யத் தயங்காத சில இந்தியரை அமெலியாவுக்குத் தெரியும். தியானாவைக் காப்பாற்றுவது அவ ளது தலையாய கடமையாயிருந்தது.

ஆங்கில அறிவுள்ள தியானாவை ஏதும் கன்னியாஸ்திரி மடத்தில் சேர்த்தால் அங்கு அவள் ஏழைக் குழந்தைகளுக்குக் கல்வி கற்றுக் கொடுக்க முடியும் என்று அமெலியா தன் சினேகிதிக்குச் சொன்னாள்.

அவர்களிருக்கும் இடத்திலிருந்த பல நூறு மைல்களுக்கப்பால் தியானா அனுப்பப் பட்டாள்.

அவளின் பெற்றோர், அவளைப் பற்றிய விடயம் மற்றவர்களுக்குத் தெரிய முதல், அவள் தொலைந்தது பெரிய காரியம் என்பது போலிருந்தது அமெலியாவுக்குத் தெரியும். ஆனாலும், அந்தப் பெற்றொர்கள். தங்கள் மகள், தூரத்திலிருக்கும் தங்களின் சொந்தக்காரரின் வீட்டுக்குப் போயிருப்பதாக மற்ற வேலைக்காரர்களுக்குச் சொன்னார்கள் என்பதும் அமெலியாவுக்கத் தெரியும். காலக்கிரமத்தில், தியானா பற்றிய ஒரு தகவலும் தெரியாத அவளின் பெற்றோர், தியானா சென்ற இடத்தில் அவளுக்குக் கல்யாணம் ஆகி விட்டதாகவும் அவளின் பெற்றோர்கள் சொல்லத் தொடங்கியது அமெலியாவுக்க நிம்மதியாகவிருந்தது.

*1918*ஆம் ஆண்டு ஆரம்பித்த, ஸ்பானிஸ் வைரஸ் என்ற கொடிய கிருமியால் உண்டான தொற்று நோயால் பல்லாயிரம் இராணுவ வீரர்கள் இறக்கத் தொடங்கினார்கள். வைரஸ் பொது மக்களுக்கும் பரவியது. முதலாம் உலகப் போரும் உக்கிரமமாக நடந்து கொண்டிருந்தது. போர்வீரர்கள் மட்டுமல்லாது, பொது மக்களின் இறப்பும் பொருளாதார நெருக்கடியும் போரை ஒரு முடிவுக்குக் கொண்டுவரும் அறிகுறிகளைக் காட்டின.

அமெலியாவின் அருமை மகன் இறந்து ஆறுமாதங்களில் தியானா ஒரு அழகிய பெண்ணைக் கன்னியாஸ்திரி மடத்தில் பெற்றெடுத்த செய்தி வந்தபோது, அமெலியா பெருமகிழ்ச்சி கொண்டாள். தனது மகன் ஜேம்ஸின் ஞாபகமாகத் தன் பேத்தியாருக்கு ஜேன் என்று பெயர் வைக்கச் சொன்னாள். ஆனால் தியானாவைப் பற்றி எப்படித் தன் கணவருக்குச் சொல்வது? அவர் எப்படி அதை

**என்ன வருத்தம் என்று மற்றவர்கள் புரிந்துகொள்ள முதல், இந்தியா, “ஸ்பானிஸ் புளு” என்ற நோயால் பல்லாயிரம் உயிர்களை இழந்து கொண்டிருந்தது. பெரும்பாலானவர்கள் 20–40 வயதுக்குட்பட்டவர்கள். பம்பாய் மட்ராஸ் போன்ற இடங்களில் “ஸ்பானிஸ் புளு” கோரத் தாண்டவமாடியது.**



எடுத்துக் கொள்வார் என்று அவளுக்குத் தெரியவில்லை.

போர் முடிந்ததும், அவள் கணவர் உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெறுவதாக விருந்தார். அத்துடன் தங்கள் மகன்களுடன் இருவரும் இங்கிலாந்தில் வாழப்போவதாக அமெலியாவிடம் சொன்னார். அமெலியாவோ, தனது பேத்தி ஜேனையும் தியானாவையும் இந்தியாவில் விட்டுச் செல்ல விரும்பவில்லை.

போர் முடிவதற்கிடையில் எப்படியும் தியானாவையும் பேத்தியாரையும் பற்றி அவருக்குச் சொல்ல எண்ணியிருந்தாள். அவர் களை எப்படியும் தங்களுடன் கூட்டிச் செல்ல அவரிடம் கெஞ்ச அவள் காத்திருந்தாள்.

ஆனால், தியானா, எக்காரணம் கொண்டும் தான் இந்தியாவை விட்டு நகரமாட்டேன் என்பதைத் திட்டவட்டமாகச் சொல்லி விட்டாள். ஜேம்ஸ் பிறந்த, வாழ்ந்த பூமியில் அவர்களின் குழந்தையும் வளரவேண்டும் என்று பிடிவாதம் பிடித்தாள். தியானாவுக்கு அப்போது வயது பதினேழு மட்டுமே. அமெலியாவின் பார்வையில் தியானா உலகம் தெரியாத அப்பாவியாகத் தெரிந்தாள். தகப்பனில்லாமல் ஒரு குழந்தைக்குத் தாயானவள். கணவனை யிழந்த விதவைகளைப் பராமரிப்பதைத் தவிர்க்க, கணவருடன் இறப்பது ஒரு கற்புள்ள மனைவியின் கடமை என்று, விதவைப் பெண்களைக் கணவருடன் எரிக்கும் கலாச்சாரத்தைக் கொண்ட நாட்டில், என்ன வென்று வாழப்போகிறாள்?

இப்போது, கன்னியாஸ்திரி மடத்தில் தியானா படிப்பிக்கத் தொடங்கியிருக்கிறாள்.

ஆனால் வாழ்க்கை முழுதும் அந்த வாழ்க்கை நீடிக்கும் என்ற என்ன உத்தரவாதம்?

அத்துடன், அமெலியாவின் கணவருக்கு உண்மை தெரிந்தால் தனது பேத்தியாரைத் தியானாவிடமிருந்த கைப்பற்றத் தயங்க மாட்டார் என்று தெரியும்.

அமெலியாவின் கணவர் வில்லியம் இந்தியாவில் பெரும்பாலான காலத்தைக் கழித்தவர். அமெலியாவை இந்தியாவில் சந்தித்து, காதல்கொண்டு, கல்யாணம் செய்து நான்கு குழந்தைகளையும் இந்திய மண்ணில் பெற்றெடுத்தவர். ஆனாலும், அவரது பத்தொன்பது வயதுக் கடைக்குட்டிப் பையனைப் போரில் இழந்தது அவரின் உள நலத்தை மிகவும் பாதித்து விட்டது.

# பேனா பேசும் எழுத்தே கவிதை

கல்லுக்குள்ளும் நன்நீர் எடுத்து
கருத்துகள் நிறைய அதிலே சேர்த்து
வெல்லத்தோடு அருந்தத்தந்திடும்
வித்தை தானே நல்ல கவிதை

மெல்ல மெல்லநாவில் மெல்ல
நல்ல மொழிகளை நாளும் வழங்கி
தெள்ளத்தெளிய தெளிவைத்தந்திடும்
தேன் அமுதுதானே தூய கவிதை

கண்ணைக் கவரும்காட்சியின் மாட்சியை
கருத்துக்கினிதாய் எழுத்தினில் வார்த்து
எண்ணம் என்றும் மகிழ்ச்சியால் நிறைய
எழுதும் ஓவியம் தானே நற்கவிதை

தள்ளு வண்டியைத் தள்ளிச் செல்லும்
தினக்கூலிகள் துன்பம் துயரினை
மெல்லத் தணிக்கும் நேரிய நெறிகள்
சொல்லித்தருகின்ற செயலே கவிதை

ஏர்பிடித்து வயல் உழுது எந்த நாளும்
உலகோரின் பசி போக்கிட உழைத்து
சோறளிக்கும் விவசாயி வாழ்வு உயர
பரிவோடு எழுதும் நல்பாட்டே கவிதை

நெற்றியில் வியர்வை துளிகள்பூக்க
நிதமும் மாடாய் உழைக்கும் தோழன்
ஏற்றம் பெற்று உலகில் சிறக்க
சாற்றும் வரியே சீரான கவிதை

வறுமை கொடுமையில் வாழ்கின்ற ஜீவன்
வதங்கி மடியும் நிலையினை ஒழித்து
பெருமை பெற்றிடபேறுகள் செய்யும்
பேனா பேசும் எழுத்தே கவிதை

மடமை கயமை களவினை களைந்து
மனிதனாய் வாழும் வழியினை உணர்த்தி
திடமாய் நல்லோரித் தரணியில் நிறைய
தினமும் வந்திடும்துணையே கவிதை

– சட்டத்தரணி
ரஷீத் எம். இம்தியாஸ்

இங்கிலாந்துக்குப்போய், தனது இருமகன்களுடனும் அவர்களின் வாரிசுகளுடனும் தனது எதிர்காலத்தைக் கடத்த நினைப்பதை அமெலியா புரிந்துகொண்டாள். ஆனால் அமெலியாவால் தனது அருமை மகன் ஜேம்ஸின் மகள் ஜேன் இந்தியாவில் வாழ்வதைத் தாங்கமுடியாதிருந்தது.

*1918*ஆம் ஆண்டு போர் முடியும் தறுவாயில், அமெலியா எதிர்பார்க்காத இடி அவள் தலையில் விழுந்தது. இராணுவ அதிகாரியின் வேலை அடிக்கடி இராணுவ வீரர்களைச் சந்திப்பதும் அவர்களைத் தட்டிக்கொடுத்து ஊக்கப் படுத்துவதுமாகும். அதைத்தான் அவர் செய்தார். அந்த அன்பான தலைவன், தடிமல் காய்ச்சல் காரணமாக, ஒருநாள் சுருண்டு படுத்தார்.

மகன் ஜேம்ஸின் இறப்பின் துயர் அவரை வலுவிழக்கப் பண்ணியிருந்தது. சரியான நேரத்திற்குச் சாப்பிடாமல் ஜேம்ஸின் அறையில் போயிருந்து எதையோ படித்துக் கொண்டிருந்தார். அவர்களின், மூத்த குழந்தைகள் இருவரும் வெவ்வேறு துறைகளைத் தேர்ந்தெடுத்துத் தாய்தகப்பனைப் பிரிந்து சென்றபோதும், தகப்பன் மாதிரியே தானும் ஒரு இராணுவத் தளபதியாகவரவேண்டும் என்று படித்த தனது மகன் ஜேம்ஸ் அவரது நினைவிலும் கனவிலும் நிறைந்து நின்றான். அன்று, ஜேம்ஸ் அறையில் படுத்திருந்தார். அடுத்தநாள் அவரின் உடல்நிலை மோசமாகவிருந்தது.

என்ன வருத்தம் என்று மற்றவர்கள் புரிந்துகொள்ள முதல், இந்தியா, “ஸ்பானிஸ் புளூ” என்ற நோயால் பல்லாயிரம் உயிர்களை இழந்து கொண்டிருந்தது. பெரும்பாலானவர்கள் *20-40* வயதுக்குட்பட்டவர்கள். பம்பாய் மட்ராஸ் போன்ற இடங்களில் “ஸ்பானிஸ் புளூ” கோரத் தாண்டவமாடியது.

தலையிடி காய்ச்சல் காரணமாகத் தனது மகனின் அறையிலுள்ள படுக்கையில் விழுந்த வில்லியம் ஹரிஸன் என்ற இராணுவ தளபதி எழவேயில்லை.

அமெலியா மனமுடைந்தாள். தனது அன்புக் கணவன் ஒருசில தினங்களில், நேற்றைய சரித்திரமானதும் துடித்துப் போனாள். அந்த நோய் இந்தியாவில் மட்டும் *17-18* இலட்சம் மக்களைப் பலிகொள்ளப் போகிறது என்பதை யாரும் அன்று எதிர்பார்க்கவில்லை.

இந்தியாவிலிருந்த பல்லாயிரம் பிரித்தானியர்கள், தாய் நாடு திரும்பத் துடித்தார்கள்.

ஆனால் பிரயாணக் கப்பல்கள் நிரம்பி வழிந்ததால், எல்லோரும் அவர்கள் நினத்த மாதிரி இந்தியாவை விட்டு உடனடியாக வெளியேற முடியவில்லை.

கணவர், குழந்தைகளின்றி, இந்தியாவில் தனியாகத் தவித்த அமெலியா, தனது பேத்தியாருடன் தியானாவையும் இங்கிலாந்துக்கு அழைத்துச் செல்லத் துடித்தாள்.

தியானாவுக்க நாட்டு நடப்பு தெரிந்தது. பயங்கரமான தொற்றுநோயால் மக்கள் இலையானாக விழுந்து மரணித்துக் கொண்டிருந்தார்கள்.

அமெலியாவின் கெஞ்சலுக்கு அடிபணிந்து தியானா குழுந்தையுடன் வந்தாள்.

அமெலியா இந்தியாவை விட்டுப் போகமுதல், அவளின் பேத்தியாரைக் காட்ட வந்ததாகச் சொன்னாள். ஆனால் தியானா இந்தியாவை விட்டுப்போகத் தயாராகவில்லை என்று அழுத்தமாகச் சொன்னாள்.

அமெலியாவின் ஆத்திரம் எல்லை கடந்தது. “எனது பேத்தியை இங்கு பரவும் தொற்று நோய்க்குப் பலியாக்க நினைப்பது அன்புள்ள தாய் செய்யக் கூடிய ஒரு நல்ல காரியமா?” அமெலியா சோகத்தில் வெடித்தாள்.

குழந்தை ஜேன் பாட்டியைப் பார்த்துக் கை அசைத்துச் சிரித்தபோது அமெலியாவின் மகன் ஜேம்ஸ் சிறு குழந்தையாக முன்வந்து நிற்பதுபோலிருந்தது. அமெலியா அந்தக் குழந்தையைப் பார்த்துக் கதறிக் கதறி அழுதாள்.

“தியானா, நீ ஒரு அன்பான தாய் என்று தெரியும். எனது மகனை உன் மனதில் வைத்து வாழ்கிறாய் என்ற தெரியும். ஆனால் நானும் ஒருதாய், எனது மகனின் மகளை இங்கு விட்டுச் செல்ல என்னால் முடியாது. நானும் இங்க இருந்த எல்லோரும் இந்தக் கொடிய தொற்று நோயால் மடிந்து விடுவோம்.” அமெலியாவின் கதறல் தியானாவைச் சிந்திக்கப் பண்ணியதோ என்னவோ, ஒரு சில நிமிடங்கள், அமெலியாவைக் கண் கொட்டமல் பார்த்தாள் தியானா. அவளின் கண்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் கொட்டிக் கொண்டிருந்தது.

தியானா தனது ஆருயிர் செல்வமான ஜேனை அமெலியாவிடம் நீட்டினாள். “ஜேம்ஸ்,

பிறந்த, வாழ்ந்த இந்த இந்திய பூமியை விட்டு நான் நகரமாட்டேன்." தியானா அழுத்தமாகச் சொன்னாள். அமெலியா தனது பேத்தியை வாங்கிக் கொண்டதும், தியானா மின்னலென அந்த இடத்திலிருந்து மறைந்துவிட்டாள்.

இங்கிலாந்துக்கு பேத்தியுடன் வந்த அமெலியா தனது இருமகன்களுக்கும் அவர்களின் சகோதரனின் மகளைக் காட்டினாள். குழந்தையின் தாய் யார் என்று அமெலியாவின் மகன்மார் கேட்கவில்லை. ஏனென்றால் காலனித்து ஆளுமைகள் இந்திய உயர்வர்க்கத்துப் பெண்களுடன் தொடர்பு வைத்திருப்பது பரவலான "இரகசியம்".

ஜேம்ஸ் மாதிரியே சிரிக்கும் நீலக் கண்களுடைய அந்தப் பேரழகு பாட்டியினதும் பெரியப்பாக்களினதும் அமரிமிதமான அன்பில் வளர்ந்தது.

தியானாவுக்கு எழுதிய கடிதத்தில் "உனது மகளை எந்தக் குறையுமில்லாமல் நாங்கள் பார்த்துக் கொள்வோம். ஒரு காலத்தில் உனது மகளுக்குப் பெண்குழந்தை பிறந்தால், அந்தக் குழந்தைக்கு உனது பெயரை வைப்பேன்" என்று அமெலியா எழுதினாள்.

ஜேன் வளர்ந்தாள். அவளுக்கு அவளின் தாய் தகப்பனின் காதல் பற்றிய கதையை அமெலியா சொன்னாள். தகப்பனின் அகால மரணம் பற்றிச் சொன்னாள். ஜேன் எழுதப் படிக்கும் காலம் வந்ததும் தனது தாய் தியானாவுடன் நீடித்த தொடர்பில் மகிழ்வு கண்டாள்.

தியானா தனது வாழ்க்கையை ஏழைப் பெண்களுக்குப் படிப்பு சொல்லிக் கொடுப்பதில் கழித்தாள். ஜேனும் தனது தாயைப் போலவே ஆசிரியையாக வரவேண்டும் என்ற ஆசையைச் சொன்னாள்.

ஜேன் எத்தனையோ தரம் தனது தாய் தியானாவுக்கு எழுதிக் கேட்டும் தியானா லண்டனுக்கு வரவில்லை. தனது படிப்பு முடிந்ததும், தனது தாயைப் பார்க்க இந்தியா போகப்போவதாக ஜேன் தனது பாட்டிக்குச் சொன்னாள்.

*1939*ஆம் ஆண்டு, ஜேன் தனது இருபத்தியோராவது வயதில் தனது காதலனை பாட்டியாருக்கு அறிமுகம் செய்ய அழைத்து வந்தாள். அவனும் ஜேன் மாதிரியே ஒரு ஆசிரியன். இனபேதமற்ற உலகத்தையுண்டாக்கப் பாடுபடும் ஒரு சமத்துவவாதி! தொழிற் கட்சி என்ற அரசியல் கட்சியிலிருப்பதாகவும் காலனித்துவ நாடுகளின் சுதந்திரத்திற்குப் பாடுபடுவதாகவும் சொன்னான். தனது பேத்தி ஜேன் தனது பூர்வீகம் பற்றித் தனது அன்பனுக்குச் சொல்லியிருக்கிறாள் என்று அமெலியாவுக்குத் தெரிந்தது.

ஜேனின் திருமணத்துக்கு என்றாலும் தியானா வரவேண்டும் என்ற அமெலியா விரும்பினாள். ஆனால் அது நடக்கவில்லை. ஹிட்லரின் கொடுமையை அடக்க, இரண்டாம் உலகப்போர் மூண்டது. பிரயாணங்கள் தடை செய்யப்பட்டன.

பிரித்தானிய காலனித்துவ நாடான இந்தியா இன்னொருதரம் ஆயிரக்கணக்கான இளைஞர்களைப் போர்க்களத்தில் பலியிட்டது. ஹிட்லரின் குண்டுகள் லண்டனைத் துளைத்தெடுத்தன.

அமெலியாவின் குடும்பம், லண்டனை விட்டு வெளியேற முயன்ற அன்று வந்து விழுந்த ஹிட்லரின் குண்டு, வீட்டிலிருந்த அமெலியாவைப் பலி கொண்டது.

ஜேனும் அவளது கணவனும், காலனித்துவ நாடுகளின் விடுதலைகளுக்கான தொழிற் கட்சிக் கூட்டத்திற்குப் போயிருந்ததால் அன்று அவர்கள் வீட்டில் இல்லாதபடியால் அவர்கள் தப்பினார்கள்.

*1942*இல் போர் முடிந்ததும். தனது மூத்த மகனைத் தனது தாய் தியானாவுக்குக் காட்ட இந்தியாவுக்குச் செல்லும் ஆயத்தங்களைச் செய்து கொண்டிருந்தபோது, நாற்பதே வயதான தியானாவின் மரணச் செய்தி வந்தது.

தன்னைப் பெற்றெடுத்த தாயைக் காணாத சோகம் ஜேனை வாட்டியது. தனக்கு ஒரு பெண்குழந்தை பிறக்கவேண்டும் அந்தக் குழந்தைக்குத் தன் தாயின் பெயரை வைக்கவேண்டும் என்ற ஜேனின் ஆவல் அவர்களின் அடுத்த குழந்தையும் ஆணாகப் பிறந்தபோது தவிடு பொடியாகியது.

*1970*ஆம் ஆண்டு தனது மூத்தமகனுக்கு மகன் பிறந்தபோது, அந்தக் குழந்தை அச்செடுத்தமாதிரி தனது தகப்பன் ஜேம்ஸ் போல் இருப்பதைப் புகைப்படத்துடன் ஒப்பிட்டுப் பார்த்து ஆச்சரியப் பட்டாள் ஜேன். அந்தக் குழந்தைதான் டியானாவின் தகப்பன், டேவிட் மாஸ்டன்.

"நான் வளர்ந்து வரும் காலத்தில் என்னிடம் உனது பாட்டி பல கதைகள் சொன்னாள். உனக்குப் பெண்குழந்தை பிறந்தால் எனது தாயின் பெயரை, எனது கொள்ளுப்

பாட்டியின் பெயரை வைக்கமுடியுமா" என்று தனது பேரனைக் கெஞ்சினாள் ஜேன்.

1997ஆம் ஆண்டு இங்கிலாந்தில் பிறந்த பல பெண்குழந்தைகளுக்கு, அக்கால கட்டத்தில அகால மரணத்தை அடைந்த பிரித்தானிய இளவரசி டையானவின் பெயரைப் பலர் வைத்து மகிழ்ந்தார்கள்.

டியானாவின் தகப்பன், "எங்கள் குழந்தைக்கு டியானா என்ற பெயரை வைக்கலாமா?" என்ற தனது மனைவியைக் கேட்டார். அவளுக்குத் தனது கணவனின் பூவீகம் தெரியாது. அதைப் பற்றிச் சொல்லவேண்டிய அவசியமும் அவருக்கிருக்கவில்லை. ஆனாலும் அழகான பெயர் என ஒத்துக் கொண்டாள். டியானாவைக் கொஞ்சும்போது தனது கொள்ளுப் பாட்டியான அழகிய தியானாவின் ஞாபகம் அவருக்கு வரும். டியானாவின் இருபத்தி ஓராவது பிறந்த தினத்திற்கு, அவளுக்குப் பிடித்த மரக்கறிச் சமயலை வீட்டில் பரிமாற அவர் முயன்றபோது, அங்கு வந்திருந்த லோகனுக்கும் தனது மகளுக்கும் உள்ள காதல் அவருக்கு எள்ளளவும் தெரியாது.

அவனைக் கண்டதும் அவளின் முகத்தில் வந்த மாற்றம் அதைத் தொடர்ந்து அவளின் தர்மசங்கடம் என்பனவற்றின் காரணமும் அவருக்குத் தெரியாது.

ஆனால் அடுத்த நாள் அதிகாலையில் தனது தகப்பனிடம் சொல்லாமல் கொள்ளாமல் பல்கலைக்கழகத்திற்கு டியானா அவசரமாக ஓடியது அவரின் மனதைக் குழப்பியது.

சமயற்காரனாக வந்த லோகனுக்கும் டியானாவுக்கும் காதலா? இந்தக் கேள்வி அவரின் மனதில் சம்மட்டியாக வந்து அடித்தது. சட்டென்று தனது சயற்காரக் கொள்ளுப் பாட்டியும் அவளது காதலனான தனது கொள்ளுப் பாட்டன், பிரித்தானியக் காலனித்தவ, இராணுவத் தளபதியின் மகன் ஜேம்சும் அவரின் நினைவிற் தட்டினார்கள்.

அடுத்த நாள் டியானாவின் பல்கலைக் கழகத்திற்கு அண்மையில் அவருக்கு ஒரு கோர்ட் கேஸ் இருந்ததால் அவர் அந்தப் பக்கம் வந்தார். டியானாவின் பிறந்த தின விழாச் சமயலுக்கு ஒழுங்கு செய்த ரெஸ்ட்ரோரண்ட் முதலாளியும் அவரின் நண்பருமானவரிடம் லோகனைப் பற்றி விசாரித்தார்.

லோகன் சமயற்காரன் இல்லை. தனது மகனின் சினேகிதன். லோகன் ஒரு மருத்துவ மாணவனாக இருக்கிறான். 1983ஆம் ஆண்டு இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட இன ஒழிப்பு நடவடிக்கையால் அனைத்தையும் இழந்து தமிழ் அகதிகளாக லண்டனுக்கு வந்த இலங்கையைச் சேர்ந்த ஒரு பல்கலைக்கழக முனைவரின் மகன் என்றும் சொன்னார். அத்துடன், லோகன், தற்செயலாகத் தனது நண்பனைப் பார்க்கக் கடைக்கு வந்தபோது, வெளியில் ஆர்டர் போட்டவர்கள் வீடுகளுக்கு அனுப்ப போதிய ஆட்கள் இல்லாதபடியால் தனது மகனுடன் லோகன் வந்ததாகச் சொன்னார்.

ஆனால், ஒரு சமயற்காரனுடன் தனக்குக் காதல் இருப்பது தெரிந்தால் என்ன நடக்கும் என்ற பயத்தில்தான் டியானா அதிகாலையில் வீட்டை விட்டு ஓடினாள் என்று நினைத்தபோது அவராற் தாங்க முடியவில்லை. "எனது பாரம்பரியம் ஒரு இந்திய சமயற்காரப் பெண்ணுடன் ஆரம்பிக்கிறது, சாதி சமய, இன மத பேதங்களுக்கு எதிராக எனது கொள்ளுப் பாட்டி அமெலியா வாழ்ந்தார். பாட்டி ஜேனும் அவள் கணவரும் தொழிற் கட்சி மூலம் காலனித்துவ நாடுகளின் விடுதலைக்குப் போராடினார்கள். நான் எனது வாழ்க்கையையே மனித குல சமத்துவத்திற்காகச் சமர்ப்பித்துப் போராடுகிறேன். உனது தாய் வழி உறவினர்களுக்கு உனது எதிர்காலத் துணையைத் தேடிக் கொண்டதைக் கேள்வி கேட்க எந்த உரிமையுமில்லை. லோகனையும் உன்னையும் இணைத்துவைத்து மகிழ்வதைவிட வேறு எந்த மகிழ்வும் எனக்கில்லை என்பதை உனக்குச் சொல்லி உன்னைத் தேற்றத்தான் ஓடிவந்தேன்" என்பதை டியானாவுக்குச் சொல்லி, மகளுக்கு முத்தமிட்டுச் சென்றார்.

தனது அறைக்கு வந்ததும், தனக்காகக் காத்திருந்த லோகனைக் கட்டியணைத்த டியானா பல முத்தங்ளைச் சொரிந்தபோது அவன் "ஐ லவ் யு ரு டியானா" என்று அவளை அணைத்துக்கொண்டான். அவர்களின் காதலுக்குப் பின்னணியான 1918-2018 வருட சரித்திரம், டியானாவின் முத்தமழைக்குக் காரணம் என்பது லோகனுக்குத் தெரியாது. இன்னும் சில வினாடிகளில், அவர்கள் காதல் புரியும்போது, டியானா அதை லோகனுக்குச் சொல்லலாம்!.

❍ ❍ ❍

# மணவாழ்வும் பெண்களின் அகஉலகும் படைப்புலகின் ஊடாக ஒரு பார்வை



-ரஞ்ஜனி சுப்ரமணியம்

ஆழஅகலம் காணமுடியாத கடலென எழுத்தையும் புத்தகங்களையும் கூறுவதுண்டு. அவ்வாறான புத்தகக் கதாபாத்திரங்களினூடு காலத்துக்குக் காலம் வெளிக்கொணரப்பட்ட பெண்வடிவங்களும் பிரமிக்க வைக்கும் சக்தியையும், விஸ்தீரணங்களையும் கொண்டவர்கள்தான். அதனால் தானோ என்னவோ, எழுதித் தீராத புனைவுகளின் மூலம் பெண்மனதின் ஆழஅகலங்களைப் பகுப்பாய்வு செய்ய முயல்கின்றனர் படைப்புலகக் கதையாளர்கள்.

“இளையவளின் இடை ஒரு நூலகம், படித்திடவா பனிவிழும் இரவுகள் ஆயிரம்” என்று ***கவிஞர் வாலி*** பெண்ணுடல் பற்றி சிலாகித்துக் கவி செய்துள்ளார். ஆனால் பெண்ணுள்ளத்தை படிப்பதற்கு ஆயிரம் இரவுகளல்ல, வாழ்நாள் முழுவதுமே போதாது. படிக்கப் படிக்கப் புதிராவதும், புதிதாவதும் பெண்ணின் அகஉணர்வுகள்தான் என்பதில் மாற்றுக் கருத்துகள் ஏதுமில்லை.

அதிலும் பெரும்பாலான மணமான பெண்களின் மனம் வெளிக்காட்ட முடியாத உணர்வுகளின் மர்மக் குகைகள் என்றுகூட சொல்லலாம். பதின்மத்தில் முகிழ்ந்து திருமணக் கனவுகளுடன் வாழும் பருவத்துக்கும், யதார்த்தத்தை உணரும் மணவாழ்வின் பின்னரான அவளின் சுதந்திரத்துக்கும், அதே பருவத்து ஆண் ஒருவனைவிட பாரிய வேறுபாடுகள் உண்டு. தமது உடல், உள, ஆடை, அணிகலன் மற்றும் சமூக உறவுகளுக்கான சுதந்திரங்களின் எல்லைகளையும் அதன் பின்தான் ஒரு பெண் முழுமையாக உணர்ந்து கொள்கிறாள்.

மணவாழ்வில் எல்லாப் பெண்களுமே இவ்வாறான மனச்சிறைக்குள்தான் வாழ்கிறார்களா என்ற கேள்வியை பெண்களிடம் வெளிப்படையாகக் கேட்டால் உளப்பூர்வமான பதில் என்றுமே கிடைக்கப் போவதில்லை. இல்லறவாழ்வை மகிமையுறக் காட்டிக் கொள்வதே உத்தம குணமென நமது பெண்களுக்கு எழுதாவிதியாக போதிக்கப்பட்டுள்ளதால் சமூக நடைமுறைகளின் கைதியாகவே அவள் வாழ்கிறாள்.

பெண்கள் மீதான அடக்குமுறைகள் முன்னைய காலத்தைப் போல இன்று இல்லை என்பது உண்மைதான். எனினும் இன்னுமின்னும் ஏன் எழுத்தாளர்கள் பெண்களின் உலகம் பற்றி எழுதிக் கொண்டிருக்கிறார்கள் என்று யோசித்துப் பார்த்தால், திருமணத்தின் பின்னரான பெண்மனமே அதன் முக்கிய பேசுபொருளாக இருப்பதைக் காணலாம். சமூகத்தின் கண்ணாடியாக விளங்கும் எழுத்தாளர்களின் இன்றைய எண்ணக் கருத்தும் உண்மைக்கு மாறானதல்ல.

இந்த வகையில் புத்தக வாசிப்பில் காணக்கிடைத்த குறிப்பிட்ட சில எழுத்தாளர்களின் புனைகதைகளூடாக திருமணம் என்ற பந்தத்தில் இணைந்த பெண்மனது பற்றிய கணிப்பும், மாற்றங்களும் எவ்வாறு உள்ளதெனப் பார்க்கலாம். காலத்துக்கு காலம் வடிவமைக்கப்பட்ட இந்தப் பெண் பாத்திரங்கள் அக்காலகட்டத்துக்குரிய குணஇயல்புகளைத் தாங்கி நிற்கின்றன. பெண் கல்வி, சுயவருமானம், புலம்பெயர்வு என்பன பெருமாற்றங்களைத் தந்திருந்தாலும், மணவாழ்வில் உடலாலும், உணர்வாலும் பெண், தான் விரும்பும் விடுதலையை அடைவதற்கு இன்னும் மிக நீண்ட தூரம் பயணிக்க வேண்டியிருப்பது என்னவோ உண்மைதான்.

***அகிலனின்*** ‘சித்திரப்பாவை’, ***ஆசிகந்தராஜா***வின் ‘இந்துமதியாகிய நான்’, ‘வெள்ளிக் கிழமை விரதம்’, ‘கோபுரதரிசனம’, ‘அடி வானம்’, ‘துர்காதாண்டவம், ***ஜெயமோகனின்*** ‘தேவகிச் சித்தியின் டைரி’, ‘ஒரு கோப்பை காப்பி’, ***இளங்கோவின்*** ‘மெக்சிக்கோ’, ***தெய்வீகனின்*** ‘அமீலா’, ***பிரமிளா பிரதீபனின்***

'விரும்பித் தொலையுமொரு காடு' எனும் புனைவுகள் மூலமும், கவிதாலக்ஷ்மியின் ஒரு கவிதையிலுமாக தரிசித்த பெண்களே இதன் கதாநாயகிகள்.

இதில் சென்ற நூற்றாண்டில் அறுபதுகளின் இறுதியில் வெளிவந்த காலத்தால் மிக முந்தைய கதையும், 'ஞானபீட' விருது பெற்ற படைப்புமாகிய அகிலனின் 'சித்திரப்பாவையில்', தன்னை முத்தமிட்டுவிட்டான் என்ற ஒரே காரணத்துக்காக, தன் மனம் விரும்புபவனை விடுத்து முத்தமிட்டவனையே மணமுடிக்கிறாள் ஒரு பெண். அக்கால கட்டத்தில் இப்படி யான 'கற்பு' நிலைதான் பெண்களிடம் எதிர் பார்க்கப்பட்டது. ஆனாலும் கதையின் முடிவு பழைமை வாதங்களை எதிர்த்துப் போராடும் கருத்தினையே கொண்டிருந்தது.

அக்காலகட்ட கன்னியர்களுக்கு 'சித்திரப் பாவை' தந்த பெண் பற்றியதான பிம்பம் மனதில் ஆழப்பதிந்து கற்புநிலை பற்றிய உணர்வுகளில் பெரும் தாக்கத்தை செலுத்தி இருக்கக்கூடும். அதை இன்றைய காதல் களுடனும், கல்யாணங்களுடனும் ஒப்புநோக்கி வியப்பதும் சுவாரசியமான அனுபவங்கள்.

சென்ற நூற்றாண்டின் இறுதிகளில் வந்த கதை ஜெயமோகனின் 'தேவகிச் சித்தியின் டைரி'. தனது மன இறுக்கத்தை தவிர்க்க வேண்டி, ரசிப்புக்குரிய உணர்வுகளை டைரி யாக எழுதுவதற்கு கூட சுதந்திரமில்லாத, வேலைக்குச் செல்லும் ஒரு மணமான பெண்ணின் வாழ்க்கை பற்றியது. மணமுடித்த பெண்ணுக்கு இருக்கக்கூடிய தனிப்பட்ட சுதந்திரங்கள் மிக மட்டுப்படுத்தப் பட்டவை. மறைத்து வைக்கப்படும் அந்த டைரியில் வித்தியாசமாக எதுவுமே எழுதப்படவில்லை என அவள் கூறுவதை ஏற்றுக்கொள்ள அந்த கூட்டுக்குடும்பம் தயாராக இல்லை. முடிவு விவாகரத்து. கணவனின் மறுமணம். அந்தப் பெண்ணின் மன உணர்வுகளின் இறுக்கத்தை இன்றும் பல பெண்கள் தமதாகவே உணரலாம். அன்று டைரி. இன்று சமூகவலைத் தளங்களில் பெண்களின் ஈடுபாடானது பல குடும்ப பிரச்சனைகளின் மூலவேராக உள்ளது.

இதற்கு சற்றுப் பின்னரான காலகட்டத்தில் எழுதப்பட்ட கதைகள் ஆசியின் 'அடிவானம்', 'கோபுர தரிசனம்'. மணம் முடித்தவன் குடிகாரனாக குடும்பத்தை கவனிக்காத ஒருவனாக இருந்தாலும் தனது குழந்தை களுக்காகவும், வாழாவெட்டி என்ற சமூக நிந் தனைகளுக்காகவும் அவனோடு வாழ்ந்தாக வேண்டும் என்ற நோக்கோடு ஒரு பெண். மனைவியை இழந்தவருக்கு இரண்டாம் தாரமாக வாழ்க்கைப் பட்டு, அவரது குழந்தை களை வளர்ப்பதற்காக தனக்கென ஒரு குழந்தையை ஈன்றெடுக்க அனுமதிக்கப்படாது, கணவரின் மறைவுக்குப் பின் நிராதரவான ஒரு பெண். மறுமணம் செய்யும் ஆண் ஒருவர் சுயநலத்துக்காகவும், முன்னைய தாரத்து குழந்தைகளுக்காகவும் இரண்டாம் தாரமாக வந்த பெண்ணின் உணர்வுகளை ஒறுத்தல் எத்தனை குரூரம் நிறைந்தது.

பெண்மையின் மிகப் பெரிய கொடையாக அமைந்த தாய்மைப் பேறும், பெற்ற குழந்தைகள் மேல்கொண்ட பாசமுமே அவளது சகிப்புத் தன்மைக்கும், வாழ்க்கையில் அடங்கிச் செல்வதற்கும் காரணமாகிறது. சமூகக் கட்டுப்பாடுகள் பெண்களை உணர்வுரீதியாக ஒரு கைதியின் நிலையிலேயே சிறைப்படுத்தி இருந்தமை இந்தக் கதைகளில் புனைவு ரூபமாகவே வெளிப்படுத்தப்பட்டு இருந்தாலும் யதார்த்தமும் அதுவாகவே இருக்கிறது என்பது வெளிப்படை.

மணமான பின் தாங்களும் மனஒடுக்குதல் களின் கீழ்தான் வாழ்வதாக போர்க்கொடி உயர்த்தும் ஆண்கள், ஒப்பீட்டளவில் இவ் வாறான சூழ்நிலைகளில் பெண்கள் மீதான சமூகப்பார்வை எவ்வாறு உள்ளதென உய்த்து அறியலாம். இதுபோன்ற நிகழ்வுகளில் விந்தையான ஆணாதிக்க மனோபாவமொன்று ஒளிந்துள்ளது.

ஆணானவன் தனது இளவயது உள்ளக் கிளர்ச்சிகள், பெண்கள் மேல் கொண்ட ஈர்ப்புகள், பழைய காதல்கள் என்பன பற்றி யெல்லாம் தமக்குரிய மேதாவிலாசங்களில் ஒன்றெனவே கருதிக் கொள்ளவும், மனைவியாக வந்தவர் உட்பட நட்புவட்டத்திலும் அவற்றைப் பற்றி பேராண்மையுடன் பேசிக் கொள்ளவும் முடிகிறது. மனைவியை ஒருமையில் அழைக்கவும், வேலைக்குச் செல்லும் பெண்ணாயினும் சமையலறை அவளது முக்கிய கடமைகளில் ஒன்றென சங்கடங்கள் ஏதுமின்றி நினைக்கவும் ஆண்களால் முடிகிறது. பெண்களின் ஆடைச்சுதந்திரத்தை கட்டுப்படுத்தும் ஆண்கள்கூட தமது கண்களின் கண்ணியத்தைக் காப்பாற்ற வேண்டும் என்று சிந்திப்பதில்லை.

மனைவியின் மரணத்தின் பின் ஒரு ஆண் தனது வழமையான வாழ்வை வாழமுடியும். இரண்டாவது திருமணத்தின் பின்னும் தனது

**அண்மைய வருடங்களில் வெளியான ஜெயமோகனின் "ஒரு கோப்பை காப்பி" ஆண்களின் இந்த அகச்சிக்கலை தெளிவாக வெளிக்கொணரும் கதை.**



முதல் மனைவியின் நிழற்படத்தை ஆராதிப்பது முதல் அவளது பெருந்தன்மை பற்றிப் பேசுவது ஆண்களின் பெருமைக்குரிய உத்தமகுணம் சார்ந்ததாகவே கருதப் படுகிறது. ஆனால் இன்றும் விதவைகளுக்கு அவ்வாறான சுதந்திரம் மட்டுப்படுத்தப் பட்டதாகவே இருக்கிறது. இலங்கையை விட மிக மோசமான நிலையில் உள்ள இந்தியாவில் வாரணாசி, விருந்தாவன் ஆசிரமங்களில் வாழும் விதவைகள் நிலை அவலம் நிறைந்தது. இதை அடிப்படையாகக் கொண்ட 'வாட்டர்' (water) திரைப்படம் கூட பிரச்சனைகளை எதிர்நோக்கியது.

இவ்வாறான முரண்மனநிலைகளின் தோற்றுவாய் எது என்பதையும், இந்த உரிமைகள் எல்லாம் பெரும்பான்மையான சந்தர்ப்பங்களில் ஏன் பெண்களுக்கு மறுக்கப் படுகின்றன என்பதற்கு நியாயமான காரணத்தை யாராவது கூறமுடியுமா...?

பெண் தனது மேலாண்மையின் கீழ் இருக்கும்வரை ஆணானவன் ஓரளவு நல்லவனாகவே இருக்க முயல்வான். பெண் தன்னை விட கம்பீரமான ஆளுமையுடன், தன் கையை எதிர்பார்க்காத நிலையொன்று தோன்றும் போது ஆணுக்குள் இருக்கும் அரக்ககுணம் விழித்துக் கொள்கிறது. அதுவும் ஆணினது பலகீனங்களைக் கண்டறியக் கூடிய திறன் கொண்டவர்களாக, அதை சுட்டிக் காட்டும் வல்லமையும் உள்ள பெண்களை, தன்முனைப்பு கொண்ட ஆண்களினால் தாங்க முடிவதில்லை. அதை வெளிக்காட்ட முடியாத சந்தர்ப்பங்களில் அப்பெண்களின் மேல் வெறுப்பாகவும் உருமாற்றம் அடைகிறது.

அண்மைய வருடங்களில் வெளியான ஜெயமோகனின் 'ஒரு கோப்பை காப்பி' ஆண்களின் இந்த அகச்சிக்கலை தெளிவாக வெளிக்கொணரும் கதை. ஒரு எழுத்தாள வாசகனாக கதைக்கான மனோவியல் காரணத்தை ***அனோஜன் பாலகிருஷ்ணன்*** சிறப்பாகத் திறனாய்வு செய்திருந்தார்.

தந்தையால் ஒடுக்கப்பட்டு வாழும் தன் தாய், கணவனின் தற்செயலான மரணத்துக்கு தானே காரணமென்ற குற்ற உணர்விலிருந்து மீண்டு வர மகன் உதவுகிறான். ஆனால் அதே தாய் அந்த உணர்வுகளில் இருந்து மீண்டு மேனிலை அடைவதும் தனது ஆளுமைகளை வளர்த்துக் கொண்டு சுயமாக இயங்குவதும், அவனுள் தாங்க முடியாத அகச்சிக்கலை ஏற்படுத்துகிறது. இந்தச் சிக்கலைத் தீர்க்க மறுமணம் செய்த தன் முன்னாள் மனைவியின் ஆலோசனையை நாடுகிறான். கம்பீரமும், சிந்தனைத் தெளிவும் கொண்டவளாக அப்பெண் இருந்ததே அவளை அன்று பிரிந்ததற்கும், இன்று தனது மன ஆற்றுப் படுத்துகைக்கும், ஆலோசனைக்கும் அவளைத் தேடி வந்ததற்குமான காரணம்.

இளங்கோவின் 'மெக்ஸிக்கோ' நாவலின் பெண்பாத்திரங்களும்கூட அவ்வாறே. ஆண்களை தம் ஆளுமைகளினாலும், அறிவினாலும் வீழ்த்தக் கூடிய திடமான கம்பீரத்தையும், பெண்மையின் சர்வவல்லமை மிகுந்த அஸ்திரங்களையும் கொண்டவர்கள்தான். தம்மை விட ஆளுமையுள்ள பெண்களைக் கண்டு ஆண்கள் தாழ்வுச் சிக்கலுக்குள் தள்ளப் படுவது இங்கும் வெளிப்படுகிறது.

ஒரு ஆண் தனது தாய், சகோதரி, மகள் ஆகியோரை ஆதிக்கம் செய்வதை விட தன் மனைவியையே தனது உடைமையாகக் கருதி அடக்கியாளவும், ஆக்கிரமிக்கவும் நினைக்கிறான். இதன் காரணம் என்னவாக இருக்கும்..? உடற்பலத்தை மூலமாகக் கொண்ட ஆண்மை தாம்பத்தியத்தில் பெண்ணினால் விரும்பப்படுவதாலா..? அங்கு தனது ஆண்மையை விரும்பும் பெண்ணிடம் அனைத்திலும் தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்த வேண்டுமென்ற 'சமத்துவ' நோக்காகத்தான் இருக்கவேண்டும். இவ்வாறு ஒடுக்குதல்களுக்கு உள்ளாகும் பெண்களும் ஆண்குழந்தைகளைப் பெறும்போது தமது வளர்ப்பின் மூலம் மீண்டும் ஆணாதிக்க தலைமுறை ஒன்றையே உருவாக்குவது வியப்புக்குரியது.

இவ்வாறான பெண்படைப்பு உருவாக்கங்கள் கதாசிரியர்களின் வெறும் கற்பனைச் சித்தரிப்புகள் அல்ல. வாழ்க்கையில் எங்கோ ஒரு கணத்தில் அவர்களது வழித்தடங்களில் கண்டு மனப்புலத்தில் பதிந்தவர்கள்தான்.

சிறுமைப் படுத்தப்படும் பெண்கள் எப்போதும் சகித்துக் கொண்டே வாழ்ந்து விடுவதுமில்லை. எங்கோ ஒரு சந்தர்ப்பத்தில் மீறலோ, விடுதலையோ அவளால் வேண்டப்படுகிறது.

இன்றைய தலைமுறையின் மணமான பெண்கள் பலர் கணவரின் பெயரை அடையாளமாகக் கொள்ளாது, இயற்பெயரிலேயே தமது தனித்துவ அடையாளத்தைத் தொடர்வது மாற்றங்களின் குறியீடாகக் கொள்ளலாம்.

ஆசியின் 'இந்துமதியாகிய நான்' நவீன உலகின் பெண்பாத்திரம். தந்தையின் அடக்கு முறையில் வளர்ந்து, ஆண்மைக் குறைபாடும், விந்தணுக் குறைபாடும் உள்ள கணவனுக்கு வாழ்க்கைப்படுபவள். தாம்பத்தியத்தை ஒருபோதும் அனுபவிக்காதவள். குறையை மறைப்பதற்காக கணவனின் விருப்பத்துக்கு ஆளாகவேண்டிய கட்டாயத்தில் ஐ.வி.எப். முறை மூலம் வேறொரு ஆணின் விந்தினால் கருக்கட்ட வைக்கப்பட்டு ஒரு குழந்தைக்கு தாயாகிறாள்.

ஆனால் பிறிதோர் சந்தர்ப்பத்தில் தவிர்க்க முடியாத உடலின் உந்துதலால், தன்னிலை இழந்து இன்னோர் ஆணுடன் உறவு கொண்டு இரண்டாவது குழந்தையைப் பெறுகிறாள். இங்கு குற்றம் செய்தது யார்...? தண்டனை பெற வேண்டியவர் யார்...? பெண்ணுணர்வுகளை மதிக்காது தன் சுயநலம் காத்த கணவன் வெளியே சொல்ல முடியாத தன் பாவத்திற்கான பரிகாரத்தை தற்கொலை மூலம் தேடிக்கொள்கிறான். ஆனால் திடங்கொண்ட மனதினளாய் இந்துமதி இன்னும் வாழ்கிறாள்.

ஆபிரிக்காவைத் தளமாகக் கொண்ட 'துர்காதாண்டவம்' என்னும் கதையில் தன் மகளையே மனைவியாக்கி, மேலும் பல பெண்களை மணமுடித்து ஈற்றில் மகனின் காதலியையும் மனைவியாக்கத் துடிக்கும் காதகனை கழுத்தை வெட்டிக் கொலை செய்கிறாள் மனைவியான மகள். பெண்களுக்கு எதிரான இத்தகைய வன்கொடுமைகள் எமது நாட்டிலும் இன்று அரங்கேறாமல் இல்லை. இதற்கான பழிவாங்கல்களும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன. நாமென்ன சளைத்தவர்களா...? எங்களாலும் தடம்மாற முடியும் என்ற ரீதியிலும் பெண்கள் சிலர்.

திருமணம் என்பது வாலிபத்தின் மனவேட்கைகளில் ஒன்றாக இருந்தபோதும் அது முற்றுமுழுதாக பெண்ணினதோ ஆணினதோ விருப்புக்கு அமையவும், மன உடல் பொருத்தங்களுக்கு அமையவும் நடப்பதில்லை. சாதி, சமூக அந்தஸ்து, குடும்ப கௌரவம், அழகு, சீதனம், உத்தியோகம் எனப் பல்வேறு மறைமுக காரணிகள் தாக்கம் செலுத்தும் தரகுச்சந்தையாகவே இன்னும் உள்ளது. மேல் நாட்டினர் போன்று வாழ்ந்து பார்த்து இரசாயன, பௌதிக காரணிகள் ஏற்புடையதாக இருந்தால் மட்டுமே திருமணபந்தத்தினுள் நுழைதல் என்ற நடைமுறை இங்கில்லை. பிரச்சனைகளும், பிரிவும் ஏற்படும் பலதிருமணங்களில் பெண் ஒரு பணமுதலீடாகவும், இலவச இல்லற சுகத்தை நல்கும் போகப் பொருளாகவும், வீட்டு உதவியாளராகவும், வம்ச விருத்தியாளராகவுமே கருதப் படுகின்றனர்.

தாம்பத்தியத்தில் அவளுக்குத் திருப்தி உள்ளதா என்ற விருப்புகூட அறிந்து கொள்ளப் படுவதில்லை. பல ஆண்களுக்கு அவை பற்றிய அடிப்படை அறிவுகூட கிடையாது. இந்தத் திருப்தி இன்மையும், பெண்கள் மீதான சமூக கட்டுப்பாடுகளும், சீதன நடைமுறைகளில் காணப்படும் நெருக்குதல்களும் சிந்திக்கும் திறனுடைய பெண்களுக்கு ஆணினத்தின் மேலான வெறுப்புணர்வை எதிர்காலத்தில் அதி கரிக்கக்கூடும்.

மேற்குலகு போன்று வாழ்ந்துபார்த்து மணமுடித்தல் என்ற சிக்கலான நவீன கலா சாரத்துக்குள் இன்றைய இளம் தலை முறையினரை தள்ளக்கூடும். ஆண்தானே பிரச்சனை என்ற ரீதியில் சிந்தித்து திருமணம் செய்யாது தனித்து வாழ்தல் அல்லது ஓரினச் சேர்க்கை என்ற வாழ்வுமுறைகளைத் தேர்ந்தெடுத்தாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை. விரும்பினால் மருத்துவத்தின் துணை கொண்டு வம்சத்தை வளர்க்கலாம். இல்லையேல் கடமைகள் எதுவும் சுமத்தப்படாத வாழ்வை வாழ்ந்து விடலாம். ஆணின் எதேச்சாதிகாரத்தின் வருந்தத்தக்க பின் விளைவுகளாக இவை எதிர்காலத்தில் வளர்ச்சி பெறக்கூடும் என்பதை ஆணினம் உணர்ந்து கொள்ளவேண்டும். 'பயர்', 'தி கிரேட் இந்தியன் கிச்சன்' ( *Fire, The great Indian kitchen*) என்னும் திரைப்படங்களும் பெண்களின் மனக்குமுறல்கள் பற்றிப் பேசு பவைதான்.

இங்கிருக்கும் சீதன நடைமுறைகளுக்கு எதிர்மாறாக, ஆபிரிக்க நாடுகள் சிலவற்றில் ஆண்தான் பெண்ணைப் பெற்றவருக்கு அவர் கேட்கும் பெறுமதியை 'மணப்பெண் கூலி'யாகச் செலுத்தி மணம்முடிக்கும் சம்பிரதாயம் உள்ளதை ஆசியின் 'வெள்ளிக்கிழமை விரதம்' என்ற புனைவு கூறுகிறது. பணம் அதிகம் தருபவர் வயோதிபராக இருந்தாலும் இந்தத் திருமணம் நடந்தேறும். இப்புனைவில் ஆச்சரியம் கொள்ள வைத்த விடயம் எதுவென்றால், தான் மனதால் விரும்பும் வறுமை நிலை கொண்ட

இளைஞனை மணமுடிக்க தன் உடலை விற்று பணம் சேர்த்து அவனுக்குத் தருகிறாள் ஒரு பெண். மாசுபடாத தன் மனதை அவனுக்காக வைத்திருக்கிறாள். இது கற்பு என்பது மனம் சார்ந்தது என்ற உயர்வான தத்துவத்தைக் கூறும் கதையாகவும் உள்ளது.

இப்புனைவை வாசித்தபோது ஆண்கள் கேட்கும் சீதனத்தை தர, தம்மை பெற்றவர்களை வருத்தாது நமது பெண்கள் என்ன செய்யலாம் என்ற கேள்வியும் மனதில் எழாமல் இல்லை. பெண்ணிடம் வலுக்கட்டாயமாக சீதனம் பெறுதல் என்ற மாறாவிதி பற்றி சற்று ஆழமாகவும், நேர்மையுடனும் சிந்தித்துப் பார்த்தால் மனம் கூசவைக்கும் உண்மையொன்றும் வெளிச்சமாகும். உடற்பலம் என்ற ஒன்றைத் தவிர, எல்லா விதத்திலும் தன் ஆளுமைகளை பல்துறைகளிலும் நிலைநாட்டியும், தாய்மை என்ற இயற்கையின் கொடையைப் பெற்றவளுமாகிய பெண்ணிடம் சீதனத்தை எதிர்பார்க்கும் ஆண்மகனுக்கும், பணத்திற்காக உடலை விற்கும் விலைமாதிற்கும் என்ன வேற்றுமையைக் காணமுடியும்...? ஆண்மை இங்கு ஒரு முதலீடு. ஆனாலும் பல குடும்பங்களில் விலை கொடுத்து வாங்கப்பட்ட அப்பொருளே அடிமையாக அல்லாது ஆட்சியிலும் இருக்கிறது என்பது மிகமிக வினோதமானது.

இந்து திருமணச் சடங்குகளின் போது மணப்பெண்ணின் பெற்றோர், பெண் மீதான தமது உரிமையை தாரை வார்த்து, கன்னிகாதானம் செய்து மாப்பிள்ளை வீட்டாரிடம் கையளிக்கும் வழக்கம் இன்றும் உள்ளது. ஆனால் அவ்வாறு பெண்வீட்டாரிடம் மாப்பிள்ளையை தாரை வார்த்து சமத்துவம் பேணும் சடங்கு இதுவரை எங்கும் காணக் கிடைக்கவில்லை. மாப்பிள்ளை, சீதனம் என்னும் விலைகொடுத்து வாங்கப்பட்டு இருந்தாலும் கூட பெண்ணின் கம்பீரமும், ஆளுமையும் வெளிக்காட்டப்படும் பல படைப்புகள் இருக்கக் கூடும். ஆனால் இன்றைய இளம் பெண் எழுத்தாளர்களும்கூட பெண்களின் இந்த அகவுலக பிரச்சனைகள் பற்றி எழுதிக் கொண்டுதான் இருக்கிறார்கள். பெண்ணின் விருப்புவெறுப்புகள் வெளிக்காட்ட முடியாத மௌனமாகவே கழிகின்றன என்ற ஆழமான அகக்கூவலை “விரும்பித் தொலையுமொரு காடு’ என்ற அண்மைய சிறுகதையில் தன்னுடைய புத்தம்புது மொழிநடையில் இவ்வாறு கூறுகிறார், இன்றைய இளம் எழுத்தாளர் பிரமிளா பிரதீபன். குறியீட்டு பாணியில் அமைந்த சிறுகதையிது.

# இன்னொரு வம்சம்...!



போரைக் கூட
அறமாகவே பார்த்தது
மகாவம்சம்.

கொல்லப்பட்ட பகை
மன்னனுக்கு
நினைவுத் தூபியெழுப்பி
யுத்த தர்மத்தை
போதித்தவன்
துட்டகைமுனு.

யுத்தத்திலும்
தர்மம் இருந்தது அன்று.
தர்மத்துக்குள்ளும் யுத்தம்
நுழைந்து விட்டது இன்று.

இனவெறிக்கு
சாராய சப்ளை
ஆளும் வர்க்கத்திடமிருந்து.


திருடர்கள் அதிகரித்து விட்டதும்
குருடர்களாக மக்கள்
கண்பொத்திக் கிடப்பதனாலேயே.

சஹ்றானை இயக்கிய கை
சாதாரண கையாக
இருக்க முடியாதே!


மகா திருடர்களென
யாரைத்தான் எழுதி வைக்க?
ஐந்தாண்டுகளுக்கொருமுறை
புதுப்பிக்கப்படுகிறதே
சாதனைப் பட்டியல்!

மகாவம்சம்
எழுதத்தான் போகின்றது
மகா திருடர்களையும்
மகா இனவெறியர்களையும்!

மகாவம்சத்திலும்
இழிபிறவிகளா?
இவர்களுக்கென
இன்னொரு வம்சத்தை
எழுதச் சொல்வோமே.



- கஸ்ஸாலி அஷ்ஷம்ஸ்




'வாழ்க்கைக்கு ஆயிரமாயிரம் கால்கள் இருக்கும்.. நாமதான் திச மாறாம நடக்க பழகிக் கணும்மா' என்றபடி வழமைக்கு மாறாக அம்மா கண் கலங்கிய போது, சொல்லிவிட நினைக்கும் எதையோ ஒன்றை அவள் சொல்லாமல் விட்டிருக்கிறாள் என்றே தோன்றியது...

காடு என்னைப் பத்திரமாய் அழைத்துச் சென்றது. வழிகாட்டியது. சமயங்களில் ஆச்சரி யப்படுத்தியது. நான் தொலைய வேண்டிய இடத்தையும், திசையினையும் கச்சிதமாய் திட்டமிட்டு காட்டித்தந்தது... எல்லாமே என் விருப்பதின் பேரில் நடப்பது போன்றதான பிரமையினையும் ஏற்படுத்தி விட்டிருந்தது...

காடெங்குமான வாசனையையும் அதிகாரத் தொனிகளையும் சில காலங்களின் பிறகே உள்வாங்கிக்கொள்ள ஆரம்பித்திருந்தேன்...

பெண்களின் இந்த பயணம் மிக பாதுகாப்பானதாய் தென்பட்டாலும் உள்ளுக் குள்ளேயான தழும்புகளையும் சீழ்வடியும் புண்களையும் பற்றி யாருமே பேசத் துணிய வில்லை. அவர்களின் இலக்கு நோக்கிய நடை பற்றியதான புகழ்தலை காற்றினூடு பரப்பி பெண்களுக்கு மரியாதை செய்யவே எல்லோரும் விரும்பினார்கள்...

அவை பல நூற்றாண்டுகால உடைத்தெறிய முடியா தடைச்சுவர்கள் என இனங்கண்டு ஸ்தம்பித்து போகிறேன். மறுநொடி, நான் மிக ஆபத்தான காடொன்றினுள்ளேயே மாட்டிக் கொண்டிருப்பதாகவும் விரும்பினாலும் என்னால் வெளியே வர முடியாதெனவும் தவிர இது நிச்சயமாய் கனவு அல்ல. என்னால் செய்யத்தக்கதான ஆகக்கூடிய செயல் மௌன மாயிருப்பது மாத்திரம் தானே!..."

வலிமிகுந்த வரிகள். இந்தக் காட்டுக்குள் சென்று மீளமுடியாமலும், வாழமுடியாமலும் தமது உயிரை விலையாகக் கொடுத்த பெண்கள்தான் எத்தனை பேர்.

'அமீலா'...

புனைவுலகில் படைக்கப்பட்ட இந்த நிஜங்களை எல்லாம் தாண்டி ஒரு சுதந்திரமான பெண்மனதினையும் வெளிக்கொணர்ந்த கதையிது. அண்மைய காலத்தில் வெளிவந்த தெய்வீகனின் 'அமீலா'வின் மனம் அழகானது. திருமணத்தின் முன் தன் மனதில் கிளர்ச்சி யூட்டிய அன்புக்கினிய ஆண்மகன் லங்காவை மனதில் களங்கமில்லாது வீட்டிற்கு அழைத்து, கணவனுக்கு அறிமுகப்படுத்தும் சுதந்திரமான பெண்மனது, ஓர் ஆபிரிக்கப் பெண்ணுக்கானது. கண்கள் விரிய பரவசம் குன்றாது அவனைக் கட்டியணைத்து, அவனது நினைவாக அவனுக்கே தெரியாமல் இதுவரை பாதுகாத்து வைத்திருந்த அவனது அந்தரங்க உடைமையொன்றை அவனுக்கே பரிசாக அளிக்கிறாள். உடலும் உளமும் சுதந்திரமான இத்தகைய மணவாழ்வு களவுகள் அறியாதது. கண்ணியமானது. ஆனாலும் அரிதாகவே காணும் ரம்மியமான கனவுபோல மிகச் சிலருக்கே வரமாக அமைவது.

அண்மையில்,

நோர்வே 'கலாசாதனா' (KalaSaadhana-ADI) அமைப்பின் நிறுவுனர் ***கவிதாலக்ஷ்மி***யின் "WOMAN' எனும் நடனக் காணொளி ஒன்றைக் காணும் சந்தர்ப்பம் வாய்த்தது. பெண்ணின் மாண்புகளைக் கூறும் கவிதாலக்ஷ்மியின் கவிவரிகள் அற்புதமானவை. மனதைச் சிலிர்க்க வைக்கும் சக்தி கொண்டவை. அவர் இயற்றிய பாடலுக்கான நடனஅமைப்பையும் அவரே செய் திருந்தார். பாடலின் உயிர்தொடும் வரிகள் சில..


நுகர்பொருள் என்றுன்னை
ஆக்கிடுவார் அதை உன் தலை சுமந்தட வழிசெய்வார்...
ஆணதும் பெண்ணதும்
அகமென்பது ஒன்றென
அறிந்திங்கு பகிர்ந்திடும் காலமதே...
உடலதும் உணர்வதும்
உனதெனக் கொண்டிடு
உன் அகப் பார்வையில்
பெண் எனவே...! "

மேன்மை கொண்ட பெண்மனங்கள் வேண்டுவதும் இதுவே!!

**கட்டுரைக்கான ஆதார வலைப்பக்கங்கள், நூல்கள்:**

- kantharajahnovel.blogspot.com
- kantharajahstory.blogspot.com
- jeyamohan.in
- piramilaa.blogspot.com
- இளங்கோவின் 'மெக்ஸிகோ' நாவல்,
- பிரபஞ்சன் நினைவுப்பரிசு, Discovery book palace 2019
- தெய்வீகனின் 'அமீலா' சிறுகதைத் தொகுப்பு, 'தமிழினி' வெளியீடு 2020

○○○



# எஸ்.நளீமின்
# பல்லிகள் இல்லா சுவரில் மேயும் வண்ணத்துப் பூச்சிகள்
## உணர்வின் மொழி



'தலைசிறந்த சொற்களை தலைசிறந்த ஒழுங்கில் கோர்ப்பது கவிதை.' என்றான் கோல்ட்ரிஜ், 'குழம்பிய உணர்வுகளின் தெளிந்த வெளிப்பாடு கவிதை'என்பது ஆடனின் நிலைப்பாடு.

கவிதையை புரிந்து கொள்ளவும் அதனுடன் நெருங்கிப்பழகவும் மனிதனாக வாழ்வது அவசியம். மனிதன் என்பது சகமனிதனின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு அவனை நேசிப்பது மட்டுமன்றி, பிரபஞ்சத்தில் உள்ள சகல உயிரினங்களையும் பிரமைகொண்டு அதனை நேசிப்பதுதான் மனிதம். கலைகளுக்கு இந்த விசாலமான மனவிசாரம் உன்னதம் என்பேன்.

ஓவியம், கவிதை, சிறுகதை, இதழியல் என்ற பல்வகை புலமைகளின் பரிணாம நீட்சியாக எஸ்.நளீமின் பல்லிகள் இல்லா சுவரில் மேயும் வண்ணத்துப் பூச்சிகள் கவிதைத் தொகுதி முகிழ்ந்துள்ளது. கடைசிச் சொட்டு உசிரில்...(2000), இலை துளிர்த்துக் குயில் கூவும்(2008) ஆகிய முன்னிரு கவிதைத் தொகுதிகளும் அவருக்கு விருதுகளைப் பெற்றுக்கொடுத்த தொகுதிகளாகும். பூகோளத்தின் சூட்சுமங்களை நேசிக்கத் தெரிந்த ஒருவரால் மட்டுமே எழுதவல்ல கவிதைகளை பல்லிகள் இல்லாசுவரில் மேயும் வண்ணத்துப்பூ பூச்சிகளில் வாசித்துணராலம்.

நளீமின் கவிதைகளை இன்னதென்று விளக்குவதைவிட வாசித்து உணரத்தான் முடியும்.

தான் வாழும் சமூகத்தின் மீதான அபரித காருண்யம், இயற்கையுடனான காதலின் வசீகரம், சமூக ஒழுங்கு மீறப்படும்போதும் சத்தியத்தின் கால்கள் முடக்கப் படும்போதும் அவற்றுக் கெதிரான கோபாவேசம், வன்முறைக் கெதிரான சீற்றம் என அவரின் கவிதைகள் பல்வகை உணர்வுகளின் கொந்தளிப்பாக வெளிப்பட்டுள்ளது.

கடந்தகாலங்களின் சௌந்தர்யங்களை நினைவூட்டி, உறவுகளின் சிதிலங்களை வேதனையுடன் பேசுகின்றன சில கவிதைகள். அந்த வேதனைகளை கனல் மிகு நினைவுக் குறிப்புகளாக அவர் கவிதையில் சொட்டும் பதகளிப்பு இடையறாத கதறலாக எம் செவிகளில் நுழைந்து மனதை அரிக்கிறது.

பல்லிகள் இல்லாசுவரில் மேயும் வண்ணத்துப் பூச்சிகள், கொடூரங் களால் ஆனது, அறைக்கு வந்த வண்ணாத்தி, வசப்படாத வாழ்வைக் கட்டமைத்தல், வசீகரித்த வாழ்வெழிலை, வரைந்துயர்ந்த, மனத்தீ ஆகிய கவிதைகள் நான் மேற்குறித்த உணர்வுகளை சுட்டும் கவிதைகளாகும்.

அதிகாரத்தின் இரும்புப் பிடியில் சாமான்யர்கள் ஏமாற்றப் படுவதும் ஏய்த்துப் பிழைப்பதும் காலங்காலமாய் பின்தொடரும் அவலங்கள். சர்வாதிகாரத்தின் கொடூரங்களுக்கெதிரான நளீமின் சொற்கள் ஓங்கி ஒலிக்கின்றன. சொற்கள் சம்மட்டிகளாகி சம்ஹாரம் செய்கின்றன. ஒப்பாரி ஓங்கியதீவு, ஒருகனிமரம்தேடி, இருள் ஒதுங்கும் மூலை, தனித்த குரலும் வால் மனிதர்களும், விலங்கோடு வாழ்வு, அமர்க்களம், அழுகிநாறும் நீ, குறுக்குக் கோழிக்கு கூந்தல் கட்டி போன்ற கவிதைகளில் அவரின் சூரசம்ஹார தொனி சன்னமாய் கேட்கிறது. அதிகாரத்தின் மையலில்



-ஒட்டமாவடி அறபாத்

அடகு வைக்கப்படும் ஒருகையறு சமூகத்தின் ஆவேசக் குரலென இக்கவிதைகளைக் குறிப்பிடவியலும்.

இனவாதத்தால் எரியூட்டப்பட்ட வாழ்விலிருந்து மீண்டவர்கள் நாங்கள். இன்றைய தேதிவரை இனவாதத்தின் அகன்ற கோரப் பசிமிகு திறந்தவாய்களுக்கருகேதான் எங்கள் இருப்பு பதகளித்துக் கொண்டிருக்கின்றது. இனவாதத் தீயின் உஷ்ணத்தில் நின்று கொண்டே நிழலை யாசிக்கும் நளீமின் சில கவிதைகள் உரத்துப் பேசுகின்றன.

இனவாதம் கோலோச்சும் இந்தத் தீவில் இனி சௌஜன்யம் என்பது எட்டாக் கனி போலவும் முடவனின் கொம்புத்தேன் கனவு போன்றும் ஆகிவிட்டது. அந்த ஆற்றாமைமிகு துயரங்களை தன் கவிதைகளால் இடித்துக் காட்டுகின்றார். உள்ளத்துள் மிருகம் வளர்த்தல், வசப்படாத வாழ்வைக் கட்டமைத்தல், தீவிதைகள் கவிதைகளில் இந்த ஆதங்கம் சொட்டுகின்றது.

இந்தச் சமூகத்தின் கையறு நிலைகண்டு அவர் கொண்டுள்ள தார்மீகக் கோபம் ஆங்காங்கு கவிதைகளில் நீக்கமற கர்ச்சித்தபடி கூடவே வருகின்றது.

***......"தேர்தல்கள் தோறும்***
***நிறம் பூசிக்கொண்ட***
***உன் சின்னவிரலிடம்***
***வெட்கம் கொள்***
***வாக்களிக்க நீ பிரஜை***
***இங்கே வாழமட்டும் நீயார்?"***

என அவர் ஆவேசப் படும்போது அடக்கு முறையின் கொடூர முகத்தில் காறி உமிழ்வதுபோல் அடங்கியிருப்பவனின் தன் மானத்தைக் கிளறிவிடுவது போல பல் முனை உணர்வுத் தளத்தில் நின்றுபேசும். இதனை நிகர்த்த பலகவிதைகள் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளமை நளீமின் போர்க் குணத்திற்கோர் சத்திய சாட்சிகளாகும்.

கவிதை என்பது வெறுமனே தனிமனித அனுபவம் அல்ல, தனிமனித அனுபவமாயினும் அது சமூகம்சார் அனுபவமாகவும் இருக்கும்.

கவிஞன் தன் சமூகம்சார் அனுபவத்தையே தன்அனுபவமாக உய்த்துணர்ந்து எழுதுகின்றான்.

நளீமின் கவிதைகள் அகவயப்படுத்தப்பட்ட புறவயக் கவிதைகளெனில் மிகையல்ல. அவர் கவிதைகளைப் புரிந்துகொள்வதற்கு மொழிமட்டும் தெரிந்திருந்தால் போதாது வாசகனின் தயார் நிலையும் மனோவிசாலமும் பிரதானமானது.

நளீமின் கவிதை சொல்லும் மொழி தனித்துவமானது. முன்னிரு தொகுதிகளிலும் சோலைக்கிளியின் கவிதைமொழி ஆங்காங்கு தாக்கம் செலுத்தியுள்ளது. தொண்ணூறுகளுக்குப்பின் எந்தக் கவிஞனும் சோலைக்கிளியை தவிர்த்துவிட்டு கவிதை எழுதமுடியாது என்ற அடிப்படையில் அத்தாக்கத்தினைத் புரிந்து கொள்வது கடினமல்ல.

இத்தொகுதியிலுள்ள சிலகவிதைகளில் நளீமின் மொழிப் பாய்ச்சல் வேறொரு தளத்தில் பயணிக்கத் தெடங்கியுள்ளது. அகத்துறிஞ்சல்களால் மொழியை செம்மைப் படுத்திய கவிதைகள் இத்தொகுதியில் விரவிக் கிடக்கின்றன. பல்லிகள் இல்லா சுவரில் மேயும் வண்ணத்துப் பூச்சிகள், வற்றிக் கிடக்கும் என் மனக் கடல், சட்டத்தில் அடைக்கும் கோடுகள், கொடூரங்களால் ஆனது. இருள் ஒதுங்கும் மூலை போன்ற கவிதைகள் அவரின் மொழிச் செழுமைக்கோர் பருக்கைகளாகும்.

அறிவினால் விளங்கிக் கொள்ளப்படும் கவிதைகளைவிட உணர்வினால் புரிந்து கொள்ளப்படும் கவிதைகள் இத்தொகுதியில் விரவிக்கிடக்கின்றன. எல்லா மனிதர்களுக்கும் உள்ளே தகிக்கும் தார்மீக உணர்வை தனித்துவமாக அடையாளம் காட்டுபவன்தான் கலைஞன். மனிதவாழ்வோடும், உறவோடும் கலைகளை நெருக்கமாகக் கொண்டுவரும் போது அது இலகுவில் புரிந்துவிடும் என்பது பொதுவான யதார்த்தம்.

அந்தக் கலையினூடாக சமூகத்தின் கலைப் பெறுமானங்களையும் சொற் சிக் கனத்துடன் பொருள் கனதியுடன் நளீம் தன் கவிதைகளூடாக முன்வைக்கின்றார். செறிவான கவிதைகள் மூலம் விரிவான விவாதங்களை எழுப்பும் நளீமின் கவிதைகள் மனோரதிய பேரின்பத்தைத் தரவல்லது எனில் மிகையல்ல.

❍ ❍ ❍

# எழுதத் தூண்டும் எண்ணங்கள்



பேராசிரியர்
துரை மனோகரன்

## புதிய ஆட்சியின் மலர்வு

தமிழ்நாட்டில் கணிசமான காலத்தின் பின், தி.மு.க.வின் புதிய ஆட்சி மலர்ந்துள்ளது. புதிய ஆட்சி ஒரு புதிய கோலத்திலும் அமைந் துள்ளது. தமிழ்நாட்டில் ஒரு புதிய ஆட்சி ஏற்படவேண்டும் என்ற மக்களின் கனவும் நனவாகியுள்ளது. புதிய முதலமைச்சரும், தமிழ்நாட்டுக்கும், மக்களுக்கும் இயன்றவரை நல்லது செய்யவேண்டும் என்ற நோக்கில் செயல்படத் தொடங்கியுள்ளார். புதிய ஆட்சி நல்லாட்சியாக அமையவேண்டும் என்றே பலரும் விரும்புகின்றனர்.

புதிய முதலமைச்சரின் நல்லதொரு நடவடிக் கையாக, தமது 99ஆவது வயதில் காலமான பிரபல எழுத்தாளர் ***கி. ராஜநாராயணனுக்கு***, கோவில்பட்டியில் ஒரு சிலை அமைக்க முடிவு செய்தமை அமைந்துள்ளது. இது பாராட்டத்தக்க விடயமாகும். ஒரு கலைஞரின், இலக்கியவாதியின் மகன் என்பதை, அவர் நிலைநாட்ட முயற்சிப்பது வரவேற்கத்தக்கது.

தி.மு.க காங்கிரஸ் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்துள்ளது என்பதற்காக, அரசியல் சுய நலத்துக்காக அது ஆடும் ஆட்டங்களுக்கு எல்லாம் அசைந்து கொடுக்கவேண்டிய தேவை, தமிழ்நாட்டின் புதிய திமு.க ஆட்சிக்கு இல்லை என்பதை, அரசு உறுதியுடன் நிலை நாட்டவேண்டும். வடக்கின் தாய்க்கும், மகனுக்கும், மகளுக்கும் தலையாட்டிப் பணிந் தொழுகுவதையே தமது அரசியல் கொள் கையாக வரித்திருக்கும் தமிழ்நாட்டுக் காங் கிரஸ் விசுவாசிகளுக்கு, தேவையின்றித் தமிழ் நாடு அரசு தலைசாய்க்கத் தேவையில்லை.

தமிழ்நாட்டின் அண்மைய சட்டசபைத் தேர்தலின்போது, நல்லவேளையாக ஜெய லலிதாவின் உற்ற தோழிபோல் நடித்துக் கொண்டிருந்த சசிகலா தேர்தல்களத்தில் இறங்கவில்லை. இல்லையேல், தமிழ்நாடு நாறியிருக்கும். நடிகர் ***ரஜினிகாந்தும்*** தேர்தல் மேடையை விட்டு விலகியிருந்தமை, தமிழ் நாட்டுக்கு நன்மையாக அமைந்தது. இந்தி யாவின் சிறந்த நடிகர்களில் ஒருவரான ***கமல்ஹாசன்***, தமது நடிப்புத் திறமையை மீண்டும் ஜொலிக்கச்செய்வதற்கான ஒரு வாய்ப்பினைத் தமிழ்நாடு சட்டசபைத் தேர்தல் அவருக்கு வழங்கியுள்ளது.

புதிய தமிழ்நாடு அரசு, இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக மத்திய அரசைத் தூண்டுவதற்கான முழு முயற்சிகளையும் இடையறாது மேற்கொள்ளவேண்டும். தமிழ்த் தேசியம் பேசும் இலங்கைத் தமிழ் அரசியல் வாதிகள், சும்மா வாயை மென்று கொண் டிராமல், தமிழ்நாடு அரசின் மூலம் இந்திய மத்திய அரசின் அசமந்தப்போக்கில் மாற்றத்தை ஏற்படுத்த முயற்சிகளை எடுக்கவேண்டும்.

## பாரதியின் இளமைக் காலம்

பாரதி மிக இளம் வயதிலேயே கவி பாடும் வல்லமை கொண்டவர் என்பது யாவரும் அறிந்ததே. எட்டயபுரம் சமஸ் தானத்தில் வேலை பார்த்த சின்னச்சாமி ஐயருக்குத் தம் மகன் சுப்பையா நன்றாகப் படித்து ஒரு வக்கீலாக வேண்டும் என்பதே விருப்பமாக இருந்தது. சின்னச்சாமி ஐயர் தமிழில் சிறந்த பண்டிதராக விளங்கியவர். தம் சுய முயற்சியால் ஆங்கிலத்திலும் தேர்ச்சி பெற்றவர். மேல்நாட்டுக் கணித முறைகளில் நிபுணத்துவம் கொண்டவர். தர்க்கவியலிலும் திறமை பெற்றவர். நவீன இயந்திரங்களைக் கையாள்வதில் மிகுந்த வல்லமை கொண்டவராக விளங்கினார். அவர் தமது திறமைக்கு ஏற்ப, *1880* இலேயே (பாரதி பிறக்கும் முன்னரே) எட்டயபுரத்தில் பஞ்சு அரைக்கும் ஆலை ஒன்றை நிறுவி, வெற்றிகரமாக நடத்தியவர்(காலப்போக்கில் ஆங்கிலேயரின் சூழ்ச்சியினால் பொருள் இழந்து தொழிலில் நஷ்டம் அடைந்தது வேறு கதை). தமது மகனும் தம்மைப் போலவே ஆங்கிலம், கணிதம், இயந்திர அறிவு கொண்டவனாக விளங்கவேண்டும் என்பது, சின்னச்சாமி ஐயரின் விருப்பமாக இருந்தது.

ஆனால், சிறுவயதில் இருந்தே பாரதியின் நோக்கம் வேறானதாக இருந்தது. தந்தையார் இல்லாத சமயங்களில் வயதான புலவர்களின் விவாதங்களில் சிறுபிள்ளையான அவரும் கலந்துகொள்வார். எட்டயபுரச் சமஸ் தானத்திலும் பாடல்கள் புனைந்து, மன்னர்

மகிழுமாறு பாடிக்காட்டுவார். எட்டயபுரத்தில் கம்பராமாயணத்தில் ஈடுபாடு கொண்ட ஒரு வயதான பண்டிதரிடம் பாரதி இலக்கியம் படித்தார். பாரதியும், அவரது இளமைக்காலத் தோழரான சோமசுந்தரபாரதியும் இரகசியமாகத் தமிழ் படித்த முறை பற்றிச் சோமசுந்தர பாரதியார் பின்வருமாறு குறிப்பிடுகிறார்: “எங்கள் இருவருடைய வீட்டிலும் நாங்கள் தமிழ் படிக்க அவ்வளவு தடை இருந்தது. தமிழ் படித்துக் கெட்டுப்போகிறான்களே என்ற வசவு கிடைக்கும்.” அதனால், இருவரும் திருட்டுத்தனமாகக் கோயில் பல்லக்குகளின் இடையே அமர்ந்துகொண்டு தமிழ் இலக்கியம் படித்ததாகச் சோமசுந்தர பாரதியார் தெரிவிக்கிறார்.

பாரதியின் இளமைக்காலம் பற்றி, அவரது தோழர் சோமசுந்தர பாரதி மேலும் சில விடயங்களைப் பின்வருமாறு தெரிவித்திருக்கிறார்: “பாரதியார் தமது ஏழாவது பிராயமுதலே அருமையான தமிழ்க்கவிகளை விளையாட்டாக விரைந்து கவனஞ் செய்வதைக் கண்ட வித்வான்கள் நமது கவியின் தந்தையாரைப் புகழ்ந்திருப்பதை நான் நேரில் அறிவேன். எட்டு ஒன்பது ஆண்டுகளில் ஸர்வ சாதாரணமாய், கொடுத்த ஸமஸ்யைகளை வைத்து அற்புதமான கவிகளைப் பூர்த்தி செய்து பெரிய புலவர் கூட்டங்களைப் பிரமிக்கச் செய்த பல காலங்களிலும் நான் கூட இருந்திருக்கிறேன்.”

***பாரதி***யின் பதினொரு வயதில் அவருக்குப் ‘பாரதி’ பட்டம் கிடைத்தது பலரும் அறிந்த செய்தி. அவருக்குச் சின்ன வயதிலேயே கிடைத்த அப்பெருமையை எல்லோரும் பெருமனதுடன் ஏற்கவில்லை. பலரும் அவரைச் சோதித்துப் பார்த்தார்கள். திருநெல்வேலி இந்துக்கல்லூரியில் அவரது ஆசிரியரான பண்டிதர் சிவராமபிள்ளைகூட அவரை மட்டம் தட்டப் பார்த்தார். அக்கல்லூரியிலே உயர்வகுப்பு மாணவராக இருந்த காந்திமதிநாதபிள்ளை என்பவர், பாரதியை மட்டம் தட்டும் நோக்கில், ‘பாரதி சின்னப் பயல்’ என்பதை ஈற்றடியாகக் கொண்டு வெண்பா பாடமுடியுமா எனக் கேட்க, “காரதுபோல் நெஞ்சிருண்ட காந்திமதி நாதனைப் பார் அதி சின்னப் பயல்” என்று பாடி, அவரைத் தலை கவிழச் செய்தார், பாரதி.

பாரதி காசியில் இருந்த காலத்தில் இருந்தே ஆங்கிலக் கவிஞர் ஷெல்லியின் கவிதைகள் மீது மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். இது பற்றி, காசியில் பாரதியின் எதிர்வீட்டில் வசித்தவரும், அவரது நண்பருமான பண்டிட் எஸ். நாராயண ஐயங்கார் இவ்வாறு குறிப்பிடுகிறார்: “கையில் எப்பொழுதும் ஷெல்லியின் ஆங்கிலக் கவிதைப் புத்தகத்தை வைத்துக்கொண்டு படிப்பார். ஓய்வுநேரங்களில் கங்கைக் கரையில் படிக்கட்டில் உட்கார்ந்து ஷெல்லி பாடல்களைப் படித்து அர்த்தம் சொல்லுவார். “எட்டயபுரத்தில் பாரதி இருந்த போது ஷெல்லி, கீட்ஸ் ஆகியோரின் கவிதைகளில் ஈடுபாடு கொண்டிருந்தார். ஷெல்லி மீது அவர் கொண்டிருந்த அதீத ஈடுபாட்டினால் ***ஷெல்லியன் கில்ட்*** என்ற சங்கத்தையும் அமைத்தார். ***ஷெல்லிதாசன்*** என்ற புனை பெயரையும் தமக்குச் சூட்டிக்கொண்டார்.

தமிழில் ஆங்கிலக் கவிதை வடிவமாகிய ‘சொனெற்’ என்னும் 14 வரிகளில் அமையும் பாடலை 1902இல் முதன் முதல் அறிமுகப்படுத்திவைத்தவர், ***வி.கோ. சூரிய நாராயண சாஸ்திரியார்.*** (பரிதிமாற் கலைஞன்). அவரை அடுத்து, அக்கவிதை வடிவில் தமிழில் கவிதை செய்தவர், பாரதி. மதுரையில் இருந்து வெளிவந்த விவேகபாநு பத்திரிகையில் பாரதி எழுதிய ‘தனிமையிரக்கம்’ (1904) ஏன்ற கவிதையே முதன்முதல் பிரசுரமான பாரதி பாடல். “குயிலனாய்! நின்னொடு குலவியின் கலவி, பயில்வதிற் கழித்த பன்னாள் நினைந்துபின், இன்றெனக் கிடையே எண்ணில் யோசனைப்படும், குன்றமும் வனமும் கொழிதிரைப் புனலும், மேவிடப் புரிந்த விதியையும் நினைந்தால், பாவியேன் நெஞ்சம் பகீரெனல் அரிதோ?” எனத் தொடரும் அப்பாடல், கடும் பண்டித நடையில் அமைந்திருந்தது. அதற்கு முன்னர், ***இளசைச் சுப்பிரமணியன்*** என்ற பெயரில் (இளசை என்பது எட்டயபுரம்) பாரதி எட்டயபுர மன்னருக்கு விண்ணப்பம் ஒன்றைக் கவிதை வடிவில் 1897இல் தமது 15ஆவது வயதில் எழுதி அனுப்பினார். அதுவும் கடின நடையிலேயே அமைந்திருந்தது (1919இல் பிறிதொரு எட்டயபுர மன்னருக்கு அவர் அனுப்பிய சீட்டுக்கவி வேறு. அது பாரதியின் முழு ஆளுமையையும் காட்டவல்லது). ஆனால், ஓரிரு வருடங்களிலேயே பாரதி இத்தகைய கடும் நடைப்போக்கில் இருந்து விடுபட்டு, நவீன கவிதையின் பிதாமகராகவும், மகாகவியாகவும் மாறிவிட்டார்.

❍ ❍ ❍

# வாசகர் பேசுகிறார்

ஞானம் 252 இதழில், தாமரைச்செல்வி பற்றிய, அகளங்கன் ஐயாவின் பதிவு காத்திரமானது. ஒவ்வொரு விடயமும் ஒவ்வொரு தலையங்கமாகப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆய்வு மாணவர்களுக்கு மிக முக்கியமான தரவுகள், அவை. பாராட்டுகள், அகளங்கன் ஐயா.

'இன்னொரு பக்கம்' என்கிற சிறுகதை தரம் 11 வகுப்பிற்கான தமிழ் மொழியும் இலக்கியமும் எனும் பாடப்பரப்பில் சேர்க்கப்பட்டிருக்கிறது. இக்கதை தொடர்பாக எனது மனப்பதிவு என்னவெனில், நான் கற்பிக்கின்ற பாடசாலைச் சூழலை அக்கதையிலே கண்டு மனம் ஒன்றிவிட்டேன். தரம் 8 தொடக்கம் உயர்தர வகுப்பு மாணவர்வரை அக்கதையினைக் கட்டாயம் படியுங்கள் என்று தூண்டினேன். ஒருசிலர் விரும்பிப் படித்தார்கள். அவர்கள், அதை மற்றவர்களுக்கும் தெரியப்படுத்தினர். இப்படியாக, அக்கதை மீதான வாசிப்பின் ஒரு பிடிப்புமுறை மாணவர்களிடம் இருந்து பெற்றோருக்கும் பரவியது. ஏனென்றால், அக்கராயன், அக்கராயன் ஆசுபத்திரி, வன்னேரிக்குளம், எட்டாம்கட்டை, ஆனைவிழுந்தான் போன்ற அனைத்து ஊர்களின் கிராமிய வாசமும் அக்கதையிலே ஊன்றி நிரம்பி இருக்கிறது. தாமரைச்செல்வியின் கிராமிய வாசம் இன்னும் வீசவேண்டுமென பாராட்டி வாழ்த்துகிறேன். நன்றி ஞானம் குழுமம்.

**–சமரபாகு சீனா உதயகுமார்**

252வது ஞானம் இதழில் வாசகர் பேசுகிறார் பகுதியில் வலம்புரி கவிதாவட்டம் (வகவம்) தொடர்பாக பிரசுரித்தமைக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மறைந்த ஸ்தாபக செயலாளர் நினைவு சர்வதேச கவிதைப்போட்டியொன்றை நடத்தப் போவதாக வகவம் 16.02.2020ல் தினக்குரல் பத்திரிகையில் அறிவித்தது. நூற்றுக்கணக்கான கவிதைகள் எமக்கு வந்துசேர்ந்தன. அவற்றை நடுவர்களிடம் கொடுத்து பரிசீலனை செய்தபின் போட்டி முடிவுகள் தயார் நிலையில் இருந்தன. மார்ச் 2020 ஆகஸ்ட் 2020களில் எதிர்கொண்ட கொரோனா நாட்டுமுடக்கம் காரணமாக பரிசளிப்புவிழா நடத்தமுடியாமல் போனது. பரிசளிப்பு விழாவை நடத்தி முடிப்பதென ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிலையில் ரமழான்நோன்பு, கொரோனா மூன்றாவது அலை காரணமாக எமது செயற்பாடுகள் முடக்கநிலையில் உள்ளன. நாட்டுநிலை சீரானதும் முடிவுகளை ஊடகங்களில் அறிவிக்கவுள்ளோம்.

**–வகவம் ஸ்தாபககுழு இயக்கம்–**

**(வகவம் சிறந்தபணி புரிகிறது: வாழ்த்துகிறோம். வகவம் நிறுவனத்தின் உட்பூசல்களை ஞானத்தில் வெளிப்படுத்த நாம் இடமளிக்க முடியாது. அதற்கமைய மேலே உள்ள கடிதம் செவ்வைப்படுத்தப்பட்டுள்ளது – ஆசிரியர்)**

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த மூத்த எழுத்தாளர் தாமரைச்செல்வி (ரதிதேவி) அவர்களை ஞானம் மே இதழ் அட்டைப்பட அதிதியாகக் கௌரவித்துள்ளமை பற்றி ஞானம் வாசகர்களாகிய நாமும் மகிழ்ச்சி அடைகின்றோம். இவரைப்பற்றி விபரமான கட்டுரையை வரைந்த மூத்த எழுத்தாளர் கலாநிதி நா. தர்மராசா (அகளங்கன்) அவர்கள் பாராட்டுக்குரியவர்.

**கலைமாமணி கா. தவபாலன்**

❍ ❍ ❍


## அமரர் செம்பியன் செல்வன் (ஆ. இராஜகோபால்) ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி – 2021



(அனுசரணை : செம்பியன் செல்வன் குடும்பத்தினர்)

**முதற் பரிசு : ரூபா 5000 /= இரண்டாம் பரிசு: ரூபா 3000/=**

**மூன்றாம் பரிசு: ரூபா 2000/=** ஏனைய ஏழு சிறுகதைகளுக்கு பரிசுச் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

**போட்டிக்கான விதிகள் : சிறுகதைகள் முன்னர் எங்கும் பிரசுரிக்கப்படாததாக இருத்தல்வேண்டும்.**

**போட்டியில் பங்குபற்றுபவர்கள் தமது பெயர், முகவரி போன்ற விடயங்களை வேறாக இணைத்தல்வேண்டும்.**

**தபால் உறையின் இடது பக்க மூலையில் "அமரர் செம்பியன் செல்வன் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி" எனக் குறிப்பிடப்படல்வேண்டும்.**

**அனுப்ப வேண்டிய முகவரி:** ஞானம் அலுவலகம் - 3B, 46ஆவது ஒழுங்கை, கொழும்பு 06.

**போட்டி முடிவுத் திகதி : 30.06.2021**

முடிவு திகதிக்குப் பின்னர் கிடைக்கும் கதைகள் போட்டியில் சேர்க்கப்படமாட்டாது. – **ஆசிரியர்**